DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
25வது வெள்ளி விழா
2021
UTHAYAN
உதயன்
கித்திக்கும் தமிழ் உலகில் உலகில் எத்திக்கும் தமிழ் விசும் வாரப் பெருஞ் இதழ்
Canadian Media Circulation Audit
$1.00
416-752-1524 www.uthayannews.ca
உதயம் 1341 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday December 17, 2021

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

பஞ் சொக்கலிங்கம்
BROKER
வீடு விற்க
416.786.2463
416.PUNCH ME
416punchme@gmail.com
RE/MAX ACE

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

# ஸ்காபுறோ மற்றும் மிசிசாகா Royal LePage Ignite & United Realty Brokerage வீடு விற்பனை முகவர்கள் நிறுவன விருதுகள் வைபவம்

ஸ்காபுறோ மற்றும் மிசிசாகாவில் வெற்றிகரமாக இயங்கிவரும் **Royal LePage Ignite & United Realty Brokerage Inc**. வீடு விற்பனை முகவர்கள் நிறுவனத்தின் வருடாந்த விற்பனை விருதுகள் வழங்கும் வைபவம் மற்றும் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் கடந்த சனிக்கிழமை ஸ்கா-புறோ நகரில் சிறப்பாக நடைபெற்றது.

நிறுவனத்தின் அதிபர் சுகன் சிவராஜா அனைவரையும் வரவேற்று உரையாற்றினார். சுமார் 200க்கும் அதிகமான வீடு விற்பனை முகவர்கள் தங்கள் விற்பனைச் சாதனைகளுக்கு ஏற்ப விருதுகளைப் பெற்றுக்கொண்டார்கள். இங்கே காணப்படும் படம் அங்கு எடுக்கப்பட்டதாகும்

*(உள்ளே விபரமான செய்தி 7ம் பக்கத்தில்)*



# 'Scarborough Frontline Community Centre' சேவை அமைப்பின் இவ்வாண்டு பாராட்டும் நன்றியும் தெரிவிக்கும் வைபவம்





ஸ்காபுறோ நகரில் கடந்த 8 வருடங்களாக வெற்றிகரமாக இயங்கிவரும் **'Scarborough Frontline Community Centre'** தனது 7வது ஆண்டு பாராட்டும் நன்றியும் தெரிவிக்கும் வைபவத்தை கடந்த புதன்கிழமை மாலை ஸ்காபுறோவில் நடத்தியது. நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் திருமதி விஜயா குலா தனது பணியாளர்கள் மற்றும் தொண்டர் சேவையாளர்கள் ஆகியோருடன் இணைந்து வெற்றிகரமாக நடத்தினார்.

இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பட்டவையாகும்.

*(உள்ளே விபரமான செய்தியும் படங்களும் 7ம் பக்கத்தில்)*

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
More than 10 Years experience in the field of Canadian Immigration
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள்
416-752-1524

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு வாங்க விற்க
PIRAPA SIVALINGAM
Sales Representative
416-999-7482
RE/MAX

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

## JOB POSTING - Project Coordinator
## Date: December 10, 2021

The Senior Tamil Society of Peel (STSP) is a registered non-profit organization supporting Tamil seniors and others primarily in Mississauga. With an active membership of over 600 members, STSP thrives to support seniors to lead an active and healthy lifestyle by organizing weekly activities and health seminars.
The project coordinator will report to the STSP President/Secretary and will work on.
Preparing proposals in consultation with STSP President and secretary, to obtain funds from various funding organization for society activities.
Ensuring all proposals for funding are submitted within the timeline specified.
Ensuring the funds received for each project are spent to activities specified in the submitted proposals and within the approved amount.
Maintaining all documentations required for each project and communicating actions and issues to the board members.
Working with the STSP treasurer in maintaining all financial transactions and creating monthly financial report for all current projects.
Maintaining and updating the STSP web page periodically and also helping seniors to solve basic computer issues.
Supporting in organization of daily activities for seniors.

QUALIFICATIONS/EXPERIENCE:

Diploma in Accounting with three years of work experience in a computerized accounting environment or six years of work experience in a computerized accounting field.
Basic computer skills with proficiency in Word, Excel and Power point.
Experience on designing, updating troubleshooting websites.
Effective interpersonal, communication and organizational skills
Working knowledge of community resources, services for seniors in Peel and relevant government programs and policies
Ability to work with teams of seniors
Fluency in Tamil and English languages

Salary and benefits: Negotiable and according to the experience
Duration of engagement: Minimum of one year on part time basis with possible extension. Minimum 20 hours per week working hours required.

Deadline for application: December 30, 2021
Please forward your application with your updated resume by email to
info@peeltamilseniors.ca

Nadarajah Moorthy
Secretary
Cell: 416 473 5380, nmoorthy10@gmail.com
.

CANADA'S OTHER VOICES
NATIONAL ETHNIC PRESS AND MEDIA COUNCIL OF CANADA
Conseil national de la press et des medias ethniques du Canada

**NEWS RELEASE**

**FROM:** National Ethnic Press and Media Council of Canada

**TORONTO - DATE:** November 15th, 2021

**The Local Journalism Initiative was launched by the Government of Canada to support the creation of original civic journalism that covers the diverse needs of underserved communities across Canada. The National Ethnic Press and Media Council of Canada (NEPMCC) is one of seven not-for-profit organizations that administers the Initiative.**

If you are an Ethnic Media Outlet (written press, community radio, community television and online news service) you may be eligible to receive funding from the Local Journalism Initiative and you will be able to hire journalists to strengthen local coverage of civic matters in underserved communities.

NEPMCC is available to provide support and financial assistance to qualifying candidates. Applications can be found at www.nationalethnicpresscouncil.com

Applicants are encouraged to contact the National Ethnic Press and Media Council of Canada:

**Address:**
100 Queen Street West
Toronto, Ontario M5H 2N2
**President and CEO:** Thomas Saras
**Executive Director:** Maria Saras-Voutsinas
**Phone:** 416-921-8926
**Web:** nationalethnicpresscouncil.com

**The National Ethnic Press and Media Council of Canada** is a non-profit organization established in 1958 (formerly Canada Ethnic Press Federation) whose mission is to promote and integrate the economic, social and cultural interests of ethnic communities into the mainstream of Canadian Society. We are 850 Canadian media outlets available in more than 111 languages that serve new Canadians and help them to integrate into their new Canadian Culture.

## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

### COMPUTER REPAIR

**Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.**

**VARUNAN: 416-894-6244**

### WALK-OUT BASEMENT FOR RENT

**Steeles / Staines** சந்திப்புக்கு அருகில் உள்ள வீடொன்றில் இரண்டு அறைகள் கொண்ட **walk-out basement** உடனடியாக வாடகைக்கு உள்ளது. கார் **parking** ஒன்று வழங்கப்படும்.
தமிழர் கடைகள், பாடசாலைகள் மற்றும் பஸ் வசதிகள் ஆகியன அருகில்.
தனியாக **washer & dryer** ஆகியன வழங்கப்பெறும்.

**தொடர்புகளுக்கு:**
**(416) 579-3022 அல்லது (647) 521-8022**

### காரைக்குடி செட்டிநாடு உணவகத்தில் வேலை வாய்ப்பு

**ஸ்காபுறோவில் கென்னடி - லோறன்ஸ் சந்திப்புக்கு அருகில் அமைந்துள்ள காரைக்குடி செட்டிநாடு உணவகத்திற்கு தோசை மற்றும் பரோட்டா தயாரிக்க நல்ல சமையல் வல்லுனர்கள் உடனடியாகத் தேவை.**
**சிறிது அனுபவம் விரும்பத்தக்கது.**
**தகுந்த சம்ளம் வழங்கப்படும்.**
**அத்துடன் Kitchen Helper, Dishwasher தேவை.**

**Call: (416) 701-0003**

### திருமண மையம்

கனடா, அமெரிக்கா, ஸ்ரீலங்கா & மற்ற நாடுகள்.
மணப்பெண் / மணமகன்
திருமணம் / மறுமணம்
தமிழ் & தெலுங்கு & மலையாளம் & மற்ற மொழிகளும்.
அந்த அந்த நாட்டிலும் & இந்தியாவில் இருந்து மாறி வருபவர்களும் உள்ளனர்.

ஹரி ஐயர் ஜோதிடர்
**24 hours -- 7 days**
**Whatsapp: + 91 86673 25268**

### LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.



Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice

**RAJAN: 416-464-2415**

### COURIER DRIVERS WANTED

**Courier Drivers wanted with your own car in Scarborough, GTA, Mississauga, Brampton, Etobicoke, Woodbridge and Pickering area.**

**Full time or partime.**

**Pala: 416-320-1446**

### ATSIN LAW
### சட்ட அலுவலகம்

**உங்கள் சட்டத் தேவைகளுக்கு எம்மை நாடுங்கள்**

Matrimonial/Family
- property equalization, custody, access, child/spousal support, domestic agreements, divorce

Real Estate
- residential purchase, sale & refinance transactions

Powers of Attorney, Guardianship, Wills
Notary Public/Commissioner

**SAROJINI SINIVASAN**
Barrister, Solicitor & Notary Public
250 Consumers Road, Suite 517
Toronto, Ontario M2J 4V6
**Office: (416) 613 8998**
Fax: (416) 494 8938 --- Email: atsinlaw@gmail.com

### உணவகத்தில் வேலை வாய்ப்பு

**ஸ்காபுறோவில் பின்ச் - மார்க்கம் வீதிச் சந்திப்புக்கு அருகில் உள்ள உணவகத்தில் இலங்கை-இந்திய உணவு தயாரிக்கக் கூடிய சமையல் வல்லுனர்களும் சமையல் உதவியாளர்களும் உடன் தேவை. பயிற்சியும் வழங்கப்படும்.**

**தொடர்புகளுக்கு:**
**(647) 300-8856**

### HOUSE/BASEMENT for RENT

**McCowan / Alton Tower சந்திப்புக்கு அருகில் detached two-story house with 4 bedroom, 2 ½ washrooms, & 2 parking வாடகைக்கு உண்டு.**
**Available as of January 1st, 2022**
**-------------------------------**
**Staines / Steeles சந்திப்புக்கு அருகில் 1 bedroom basement with separate entrance வாடகைக்கு உண்டு.**
**Available Immediately.**

**தொடர்புகளுக்கு:**
**(416) 836-0010**

### House & Basement for Rent

**Pharmacy / Eglinton** சந்திப்பில் அமைந்துள்ள **Elm Bank Road, Scarborough M1R 1J3** என்னும் விலாசத்தில் அமைந்துள்ள **bungalow house** ல் வீடும் பேஸ்மண்டும் தனித்தனியாக வாடாகைக்கு உள்ளன. **Upstairs 3 bedrooms, 1 washroom.**
**Basement 4 bedsroom, 1 ½ washroom.**
**Bus Stop** ஒரு நிமிட நடை. **Grocery store 3** நிமிடத்தில் வாகனத்தில் செல்லலாம். **Good Life Gym 3** நிமிடத்தில் வாகனத்தில் செல்லலாம்.

**தொடர்புகளுக்கு:**
**(416) 302-9022**

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

# வீடற்றவர்களுக்காக அரசியல்வாதிகள் வடிக்கும் கண்ணீர் 'தூய்மை'யானதா?

உலகெங்கும், வறிய நாடுகளில் மாத்திரமல்ல, அமெரிக்கா கனடா போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளிலும் பல மக்கள் வீடற்றவர்களாக தங்கள் வாழ்க்கையை தொடர்ந்து வருகின்றார்கள். இந்த பிரச்சனையை தீர்த்து வைப்பதற்காக ஒவ்வொரு நாடும் தன்னாலான முயற்சிகளை எடுத்து வருகின்றது.

கடந்த சில வாரங்களாக எமது பார்வைக்கு உட்பட்ட இந்தியாவின் தமிழ்நாடு மற்றும் இலங்கை போன்ற நாடுகளில் உள்ள ஆட்சியில் உள்ள அரசியல்வாதிகள் அங்குள்ள வீடற்ற மக்களின் துன்பங்களைக் கண்டு கண்ணீர் வடிப்பை நாம் செய்திகள் வாயிலாக அறிகின்றறோம். இந்த பக்கத்தை நாம் வடித்துக்கொண்டிருந்த போது. இலங்கையில் வீடற்றவர்கள் தொடர்பாக பிர-தமர் மகிந்த ராஜபக்ச ஓர வைபவத்தில் உரையாற்றுகையில் தெரிவித்த கருத்துக்களை படித்துப் பார்க்கக் கூடியதாக இருந்தது.

இலங்கையின் தற்போதைய நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரும், பிரதமருமான அவர் வீடமைப்பு தொடர்பாக கருத்துக்கள் தெரிவிப்பதற்கு உரித்துடையவர் என்பது மறுப்பதற்குரிய விடயமல்ல.

ஆனால் மகிந்த ராஜபக்ச என்னும் தனி மனிதர் இவ்வாறு தெரிவித்திருப்பதில் எந்தளவிற்கு 'தூய்மை' உள்ளது என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

கொழும்பு களனிவெலி புகையிரத பாதையை விரிவுபடுத்தும் நடவடிக்கையின் போது அகற்றப்பட்ட மக்கள் உள்ளிட்ட குறைந்த வருமா-னம் பெறும் குடும்பத்தினருக்காக நிர்மாணிக்கப்பட்ட 528 வீடுகளை கொண்ட கொலொம்தொட சரசவி உயன தொடர் மாடிக் குடியிருப்பை திறந்துவைத்து உரையாற்றுகையிலேயே மகிந்த ராஜபக்ச இவ்வாறு குறிப்பிட்டார்.

வீடற்ற மக்களுக்கு அவர்களின் தாயகத்தின் உண்மையான உரிமை-களை வழங்குவதே எமது நோக்கமாகும். நாங்கள் அமுல்படுத்தும் வீட்டுத் திட்டங்களில் சிங்களவர், தமிழ், முஸ்லிம் என்ற இனப் பாகுபாடு கிடையாது. மேலும், கட்சி பாகுபாடும் இல்லை. என்றெல்லாம் மகிந்த ராஜபக்ச உரையாற்றி உள்ளார். ஆனால் மகிந்தா போன்ற தலைவர்களினால் அகதிகளாக்கப்பட்டு தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்துள்ள ஈழத்தமிழ் மக்கள் அங்கும் வீடற்றவர்களாகவே உள்ளார்கள் என்பதையும் அவர் நன்கு அறிவார்.

மேலும். மக்களுக்குள்ள வீடற்ற நிலையை எடுத்துச்சொல்லி கண்ணீர் வடிக்கும் இவர்கள், தங்களுக்கு வாக்களித்து ஆட்சியமைக்க உதவியவர்களை மறந்து நாட்டைச் சூறையாடி எத்தனை வீடுகளுக்குச் தற்போது சொந்தக்காரர்களாக உள்ளார்கள் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மக்களுக்கு வீடுகளைப் பெற்றுக்கொடுக்க திட்டமிடுவது அரசியல் நோக்கம் அற்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆனால் நாம் அவர்களிடம் ஒன்றை மட்டுமே கேள்வியாக முன்வைக்க வேண்டும். நாங்கள் நாட்டை உங்களிடம் ஒப்படைத்தோம். ஆனால் அன்றிலிருந்து நீங்கள் எத்தனை மாளிகைகளுக்கு சொந்தக்காரராக மாறிவிட்டீர்கள்? நீங்கள் நாட்டைப் பற்றியும் யோசிக்கவில்லை. எங்கள் வீட்டைப் பற்றியும் இத்தனை ஆண்டுகளாக எண்ணிப்பார்க்கவில்லை. இத்தனை ஆண்டுகளிலும் உங்களைப் போன்றவர்கள் சேர்த்துக்கொண்ட சொத்துக்களில் எத்தனை வீடுகளை எமக்குத் தரப்போகின்றீர்கள்' என்று..

*பின்பக்கத் தொடர்ச்சி*

# ஜனாதிபதி கோட்டாபாயவின் கட்டளைகளின்படி மனித உரிமை மீறல்களில் ...

மனிதகுலத்திற்கு எதிரான மிகமோசமான மீறல்களில் ஈடுபட்டதாக நம்பத்தகுந்த ஆதாரங்களின் அடிப்படையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்' மற்றும் அவரது கட்டளையின்கீழ் செயற்பட்டவர்களுக்கு எதிராகப் பயணத்தடை விதிப்பதுடன் அவர்களது சொத்துக்களை முடக்குவது தொடர்பில் அமெரிக்காவைப்போன்று ஏனைய ஜனநாயக நாடுகளும் விசேட அவதானம் செலுத்தவேண்டும் என்று அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், கனடா, அயர்லாந்து, சுவிஸ்லாந்து ஆகிய நாடுகளைத் தளமாகக் கொண்டியங்கும் 9 புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.

அதுமாத்திரமன்றி இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆதாரங்களைத் திரட்டுவதற்கான நடவடிக்கைகள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலை-யில், அதனூடாக குற்றவாளிகள் அனைவரும் அடையாளங்காணப்படுவார்கள் என்று நம்புவதாகவும் அவ்வமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களிலும் மனித உரிமை மீறல்களிலும் ஈடுபட்டதாக நம்பத்தகுந்த ஆதாரங்களின் அடிப்படையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள கோட்டாபய ராஜபக்' மற்றும் அவரது கட்டளையின்கீழ் செயற்பட்டவர்களுக்கு எதிராகப் பயணத்தடை விதிப்பதுடன் அவர்களது சொத்துக்களை முடக்குவது குறித்து அவதானம் செலுத்தவேண்டும

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையினால் முன்னெடுக்கப்பட்டுவருகின்ற ஆதாரங்களைத் திரட்டுவதற்கான பொறிமுறையின் ஊடாக அனைத்துக் குற்றவாளிகளும் மிகத்தெளிவாக அடையாளங்காணப்படுவார்கள் என்று நாம் உறுதியாக நம்புகின்றோம்.

மனிதகுலத்திற்கு எதிரான மிகமோசமான மனித உரிமை மீறல்களுடன் தொடர்புபட்டிருப்பதாகக்கூறி 'நேவி சம்பத்' என்று அறியப்படும் கடற்படைப் புலனாய்வுப்பிரிவின் முன்னாள் அதிகாரி லெப்டினன் கொமாண்டர் சந்தன பிரசாத் ஹெட்டியாராச்சி மற்றும் இராணுவத்தின் முன்னாள் சார்ஜன்ட் சுனில் ரத்நாயக்க ஆகி-யோர் தமது நாட்டிற்குள் பிரவேசிப்பதற்கு அமெரிக்கா தடைவிதித்துள்ளது. இத்தடை குறித்த அறிவிப்பு சர்வதேச மனித உரிமைகள் நாளான கடந்த வெள்ளிக்கிழமையன்று அமெரிக்க இராஜாங்கத்திணைக்களத்தினால் வெளியிடப்பட்டது.

அமெரிக்காவின் இத்தீர்மானம் குறித்து அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ், பிரித்தானிய தமிழர் பேரவை, அயர்லாந்து தமிழர் பேரவை, பிரான்ஸ் தமிழ் ஈழம், கனடிய தமிழர் தேசிய அவை, அமைதி மற்றும் நீதிக்கான ஒன்றிணைவு, சுவிஸ்லாந்து தமிழ் செயற்பாட்டுக் குழுமம், இனப்படுகொலைக்கு எதிரான தமிழ் செயற்திட்டம் மற்றும் அமெரிக்க தமிழ் செயற்பாட்டுக் குழுமம் ஆகிய 9 புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் இணைந்து வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

இலங்கைப் பாதுகாப்புப்படையின் முன்னாள் உறுப்பினர்கள் இருவரால் நிகழ்த்தப்பட்ட மிகமோசமான மனித உரிமை மீறல்களைக் கருத்திற்கொண்டு அவர்களும் அவர்களது குடும்பத்தினரும் அமெரிக்காவிற்குள் நுழைவதற்குத் தடைவிதித்து அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட அறிவிப்பைத் தமிழ் மக்கள் பெரிதும் வரவேற்கின்றார்கள்.

இதனையொத்ததாக இலங்கையின் இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா சட்டவிரோத படுகொலைகள் மற்றும் மிகமோசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக நம்பத்தகுந்த ஆதாரங்களின் அடிப்படையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நிலையில், அவர் அமெரிக்காவிற்குள் பிரவேசிப்பதைத் தடைசெய்யும் அறிவிப்பு கடந்த ஆண்டு பெப்ரவரி 14 ஆம் திகதி முன்னாள் அமெரிக்க இராஜாங்க செயலா-ளர் மைக் பொம்பியோவினால் வெளியிடப்பட்டது.

இவையனைத்தும் இலங்கையில் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கான பாதையின் முக்கிய நகர்வுகளாகும். இவற்றை வரவேற்கும் அதேவே-ளை, தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட மோசமான மீறல்களுக்குப் பொறுப்புக்கூறவேண்டியவர்களை அடையாளங்காண்பதற்கு செயற்திறன்மிக்க பொறிமுறையொன்றைக் கையாள்வது அவசியமாகும்.

தற்போது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையினால் முன்னெடுக்கப்பட்டுவருகின்ற ஆதாரங்களைத் திரட்டுவதற்கான பொறிமுறையின் ஊடாக அனைத்துக் குற்றவாளிகளும் மிகத்தெளிவாக அடையாளங்காணப்படுவார்கள் என்று நாம் உறுதியாக நம்புகின்றோம்.

இலங்கை ஜனாதிபதியும் அமெரிக்கப்பிரஜையுமான கோட்டாபய ராஜபக்ச, பாதுகாப்புச்செயலாளராகப் பதவி வகித்தபோது கடந்த 2009 ஆம் ஆண்டில் இராணுவத்தினரைப் பயன்படுத்தி மிகமோசமான மீறல்களில் ஈடுபட்டதுடன் அதன் விளைவாக 70,000 இற்கும் அதிகமான அப்பாவி தமிழ்மக்கள் கொல்லப்பட்டிருக்கக்கூடுமென ஐக்கிய நாடுகள் சபை மதிப்பீடு செய்துள்ளது.

கடந்த 2011 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி மன்னார் மறைமாவட்ட பேராயர் அருட்தந்தை இராயப்பு ஜோசப்பினால் ஜனாதிபதி ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் இலங்கை அரசாங்கத்தின் குடித்தொகை மதிப்பீடுகளின்படி போர் முடிவிற்குக்கொண்டுவரப்பட்டதிலிருந்து சுமார் 146,679 தமிழர்களுக்கு என்ன நேர்ந்தது என்பது தெரியவில்லை.

உலகின் ஏனைய ஜனநாயக நாடுகள் அமெரிக்காவின் நகர்வை ஒத்த நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும். அதன்படி மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களிலும் மனித உரிமை மீறல்களிலும் ஈடுபட்டதாக நம்பத்தகுந்த ஆதாரங்களின் அடிப்படையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள கோட்டாபய ராஜபக்ச மற்றும் அவரது கட்டளையின்கீழ் செயற்பட்டவர்களுக்கு எதிராகப் பயணத்தடை விதிப்பதுடன் அவர்களது சொத்துக்களை முடக்குவது குறித்து அவதானம் செலுத்தவேண்டும்.

அதுமாத்திரமன்றி இலங்கை அரசாங்கமும் போர்க்குற்றங்களுடன் தொடர்புபட்டிருப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருப்பவர்களும் சுயாதீனமான சர்வதேச விசாரணைப்பொறிமுறைக்கு உட்படுத்தப்படவேண்டும் என்று அவ்வமைப்புக்கள் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.

*பின்பக்கத் தொடர்ச்சி*

# 'கனடா போன்ற ஒரு நாட்டில் இவ்வாறான சம்பவம் ஒன்று நடந்திருக்கக் கூடாது'

கனடாவின் பல்கலாச்சார மற்றும் அதன் உள்ளடக்கம் ஆகியவற்றுக்கு பொறுப்பான அமைச்சரான ஹசன் அவர்கள் முன்னர் குடிவரவு மற்றும் பிரஜாவுரிமைகள் அமைச்சராகப் பணியாற்றியவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அவர் மேலும் தெரிவிக்கையில்.

"2021 ஆம் ஆண்டில், மக்கள் தங்கள் மத நம்பிக்கைகளால் வேலை-யை இழக்கும் சூழ்நிலையை நாம் அனுபவிக்கக்கூடாது என்பதே எனது உணர்வு" என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அவர் இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்.

"ஒரு ஆசிரியை வேலையைச் செய்வதற்கான அந்த பெண்மணியினது தொழில்முறைத் திறனின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டும், அவளுடைய மதத்தின் அடிப்படையில் அல்ல."

கியூபெக்கின் பில் 21 இன் விதிகளின்படி வகுப்பறையில் இருந்து அன்வாரி அகற்றப்பட்ட பிறகு, கடந்த வாரத்தில் பல அரசியல்வாதிகளால் பகிரப்பட்ட கருத்துக்கள் இவையாக இருந்தன.

2019 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட ஒரு சட்டம் குறிப்பிட்ட சில இடங்களில் பொது ஊழியர்கள் மற்றவர்களின் கண்களுக்குத் தெரியும் மதச் சின்னங்களை அணிவதை தடை செய்கிறது. இந்த சட்டத்தை எதிர்த்து தற்போது நீதிமன்றத்தில் வழக்கும் தொடரப்பட்டுள்ளது. என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்

இந்த விடயம் தொடர்பாக கனடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அவர்கள் கடந்த திங்களன்று கூறியபோது,"சில நேரத்தில்" சட்டங்கள் தொடர்பான கடுமையான சவால்களுக்கு மத்திய அரசு முகம் கொடுக்க வேண்டியிருக்கும். ஆனால் அதனோ-டு சம்பந்தப்பட்ட சாத்தியமான அம்சங்களை நான் நிராகரிக்க மாட்டேன் என்று தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் இஸ்லாமியர்களின் மதம் தொடர்பான பண்பாட்டு அடையாளங்களை அணிவதை நிச்சயமாக, ஆதரிப்பேன். என்றார்.

பிரதமரின் கருத்து தொடர்பாக அமைச்சர் ஹசனிடம் பத்திரிகையாளர்கள் கேட்ட நேரத்தில் நிச்சயமாக, இது தொடர்பான வழக்குகள் மததிய நீதிமன்றங்களுக்கு விசாரணைகளுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டால் பிரதமர் அரசின் தலையீட்டிற்கு ஆதரவு தருவாரா கொடுப்பாரா என்ற கேள்விக்கு 'ஆம்' என்று பிரதமர் பதிலளித்ததாகவும் அமைச்சர் ஹசன் தெரிவித்துள்ளார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தலைமன்னார் மேற்கில் வன வளத்திணைக்களத்தினரின் காணி அளவிடும் நடவடிக்கைகளுக்கு மக்கள் கடும் எதிர்ப்பு




மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தலைமன்னார் மேற்கு பகுதியில் திங்கட்கிழமை (13) காலை வன வளத் திணைக்களத்தினரின் காணி அளவிடும் நடவடிக்கைகளுக்கு அப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ளனர்.

மன்னார் - தலைமன்னார் மேற்குப் பகுதியில் வனவளத் திணைக்களத்தினரின் காணி அளவிடும் நடவடிக்கை திங்கட்கிழமை (13) காலை இடம் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. குறித்த பகுதிக்கு வனவளத் திணைக்களத்தினர் காணிகளை அளவிடுவதற்காக சென்றிருந்தனர்.

இதன்போது அங்கு ஒன்று கூடிய குறித்த பகுதிகளைச் சேர்ந்த மக்கள் கடும் எதிர்ப்பினை வெளியிட்டிருந்தனர். குறிப்பாக காணி அளவிடும் பணிகளை கைவிட்டு அங்கிருந்து செல்ல வேண்டும் எனவும் மக்கள் வலியுறுத்தியிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து வன வளத்திணைக்களத்தினருக்கும், தலைமன்னார் பங்குத்தந்தை அருட்தந்தை மாக்கஸ் அடிகளார் மற்றும் பொதுமக்களின் பிரதிநிதிகளுக்கிடையில் முக்கிய கலந்துரையாடல் இடம் பெற்றிருந்தது.

குறித்த கலந்துரையாடலினைத் தொடர்ந்து வன வளத்திணைக்களத்தினர் காணி அளவீட்டு பணிகளை கைவிட்டு அங்கிருந்து சென்றுள்ளதாக அருட்தந்தை மாக்கஸ் அடிகளார் தெரிவித்தார்.

- மன்னார் நிருபர்

# காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பெற்றோர்கள் இதுவரை சுமார் 110 பேர் வரை மரணித்துள்ளனர் — இதனால் எங்களின் சாட்சிகளும் மறைக்கப்பட்டுக் கொண்டே போகிறன

## சங்க தலைவி மனுவல் உதையச்சந்திரா

காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்காக சுமார் 13 வருடங்களுக்கு மேலாக நாங்கள் போராட்டத்தை முன்னெடுத்து வந்தாலும் நாங்கள் சிறுபான்மை மக்கள் என்பதால் எவ்வித பதிலும் வழங்காது அரசு கண்ணை மூடிக்கொண்டு இருக்கிறது என மன்னார் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதையச்சந்திரா தெரிவித்தார்.

சர்வதேச மனித உரிமைகள் தினமான வெள்ளிக்கிழமை (10) காலை மன்னார் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் மன்னார் பேருந்து தரிப்பிட்திற்கு முன் கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

இதன் போது கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், சர்வதேச மனித உரிமைகள் தினமான வெள்ளிக்கிழமை, மன்னார் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் மன்னார் பேருந்து தரிப்பிட்திற்கு முன் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுத்தோம்.

மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் எல்லோரும் கலந்து கொண்டார்கள். உலக நாடுகளும் அவதானித்துக் கொண்டிருக்கிறது.எமது நாடும் பார்த்துக் கொண்டிருக்கிறது.

சர்வதேச நாடுகளும் பார்த்துக் கொண்டே இருக்கிறது. ஆனால் இன்று வரை மனித உரிமை மீறல்கள் நடந்து கொண்டே இருக்கின்றது. ஆனால் எல்லோரும் கண்களை மூடிக் கொண்டு இடம்பெற்று வருகின்ற மனித உரிமை மீறல்களை பார்த்துக் கொண்டு இருக்கின்றனர். ஆனால் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் எவ்வித பதிலும் கூறுவதாக இல்லை.

நாங்கள் ஒவ்வொரு வருடமும் சர்வதேச மனித உரிமைகள் தினமாக இருந்தாலும் சரி, சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தினமாக இருந்தாலும் சரி கடந்த 13 வருடங்களாக போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம்.

நாங்கள் சிறுபான்மை மக்கள் என்பதால் எவ்வித பதிலும் கிடைப்பதில்லை. அரசு கண்ணை மூடிக்கொண்டு இருக்கிறது.எங்களுக்கு நீதி ஒன்று வேண்டும். அதற்காகவே வடக்கு கிழக்கில் 8 மாவட்டங்களில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் வீதிகளில் இறங்கி சுமார் 1800 நாட்களாக போராடி வருகின்றனர்.

இதுவரை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பெற்றோர்கள் சுமார் 110 பேர் வரை மரணித்துள்ளனர். ஒவ்வொரு மரணங்களும் இதில் மறைந்து கொண்டே செல்கிறது. இதனால் எங்களின் சாட்சிகளும் மறைக்கப்பட்டுக் கொண்டே போகிறது.

அதனையே அரசாங்கம் எதிர் பார்த்துக் கொண்டு இருக்கிறது. அதற்கு சர்வதேச நாடுகளும், ஜெனீவாவும் பக்க பலமாக இலங்கை அரசாங்கத்திற்கு துணையாக நின்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறது எங்களுக்கு தெரிகிறது.




கடந்த 5 வருடங்களுக்கு முன் ஒரு கதை வெளியாகியது காணாமல் போனவர்கள் துண்டு துண்டாக வெட்டப்பட்டு முதலைக்கு போட்டதாக கதை வெளிவந்தது. தற்போது ஒரு கதை வெளியாகி உள்ளது. பாகிஸ்தானுக்கு 35 ஆயிரம் கண்கள் தானம் கொடுக்கப்பட்டுள்ளது என்று.

ஓ.எம்.பி என்று ஒரு அலுவலகத்தை திறந்து உள்ளார்கள்.அந்த அலுவலகத்தினால் எவ்வித நன்மையும் இல்லை. சர்வதேசத்தின் கண் துடைப்பிற்காகவே குறித்த அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது.ந ாங்கள் யாரிடம் சென்று எதை கூறுவது என்று தெரியவில்லை.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக வீதிகளில் இறங்கி கண்ணீர் சிந்தும் தாய்மாரை சற்று நிமிர்ந்து பாருங்கள். இறந்தவர்களுக்காக நாங்கள் போராடவில்லை. உயிருடன் ஒப்படைக்கப்பட்ட எமது பிள்ளைகளுக்காகவே நாங்கள் போராடி வருகிறோம்.

இனி எங்களிடம் தொலைப்பதற்கு எதுவும் இல்லை. எங்களின் துயரம் உங்களுக்கு ஒரு கதையாகவே தெரிகிறது. சர்வதேசமாக இருந்தாலும் சரி ஜெனிவவாக இருந்தாலும் சரி ஒரு தடவை எங்கள் பக்கம் நின்று பாருங்கள். அப்போது தான் நாங்கள் படுகின்ற துயரங்கள் உங்களுக்கு தெரியும்.

அரசு பேருந்துகளில் மக்களை ஏற்றி வந்து முகாம் அமைத்து அங்கே இறக்கப்பட்டனர். அந்த முகாம்களில் இருந்து தெரிவு செய்து இளைஞர்களை ஏற்றிச் அரச பேரூந்திலேயே அழைத்துச் சென்றனர். அந்த இடத்தில் பதிவு ஒன்றை மேற்கொண்ட பின்னரே எமது பிள்ளைகளை ஏற்றிக் கொண்டு சென்றிருப்பார்கள்.

அந்த பதிவுகள் எங்கே?என்று அரசாங்கத்திடம் கேளுங்கள். நாங்கள் கேட்டால் அரசு கூறுகிறது இல்லை. எனவே சர்வதேசம் கேட்டு எங்களுக்கு நீதியை பெற்றுத் தாருங்கள் என அவர் கோரிக்கை விடுத்தார்.

- மன்னார் நிருபர்



# மன்னாரில் 30 வயதுக்கு மேற்பட்டோருக்கு பூஸ்டர் தடுப்பூசிகள் செலுத்தும் நடவடிக்கை முன்னெடுப்பு

மன்னார் மாவட்டத்தில் 30 வயதுக்கு மேற்பட்ட இரண்டு தடுப்பூசிகளையும் பெற்று மூன்று மாதம் நிறைவடைந்த வர்களுக்கான 3 வது பூஸ்டர் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தலைமையில் திங்கட்கிழமை (13) காலை தொடக்கம் மன்னார் நகர சபை மண்டபத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை க்கு உட்பட்ட பகுதிகளில் கடந்த ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் கொரோனா தடுப்பூசியின் இரண்டு டொஸ் களை பெற்ற 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசி செலுத்தும் பணிகளே மேற்படி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.



அதன் அடிப்படையில் இராணுவத்தினர், விமானப்படையினர் மற்றும் சுகாதார ஊழியர்களின் ஒத்துழைப்புடன் அதிகளவானவர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தடுப்பூசிகளை பெற்று வருகின்றனர்.

எதிர்வரும் வாரம் வரை குறித்த தடுப்பூசிகள் செலுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் கோந்தை பிட்டி கடலில் காணாமல் போனவர்களில் ஒருவர் சடலமாக மீட்பு



மன்னார் கோந்தைப்பிட்டி கடற்பரப்பில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த இரண்டு மீனவர்கள் ஞாயிற்றுக்கிழமை (12) மதியம் காணாமல் போன நிலையில் திங்கட்கிழமை காலை ஒரு மீனவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்டவர் யாழ்ப்பாணம் பருத்தித்துறையை சேர்ந்த தர்ஷன் (வயது-19) என தெரிய வந்துள்ளது. மேலும் அதே இடத்தைச் சேர்ந்த செந்தூரன் (வயது-28) என்கின்ற இரண்டு பிள்ளையின் தந்தையான இளம் குடும்பஸ்தர் காணாமல் போயுள்ளார். அவரை தேடும் நடவடிக்கையில் மீனவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை (12) மதியம் மூன்று மீனவர்கள் கோந்தை பிட்டி கடலில் தமது படகை செலுத்தி தொழிலுக்குச் செல்ல சரி பார்த்துள்ளனர். இதன் போது மூன்று மீனவர்கள் உள்ளடங்களாக 8 பேர் படகில் இருந்துள்ளனர்.

இதன் போது படகில் வெளி இணைப்பு இயந்திரத்தை இணைந்து படகை செலுத்தி பார்த்துள்ளனர். இதன் போது படகின் வெளி இணைப்பு இயந்திரம் திடீரென இயங்காத நிலையில் காணப்பட்டுள்ளது.

இதன் போது காற்றின் காரணமாக படகு கடலில் சென்று கொண்டிருந்தது. இதன் போது படகின் முன் அணியத்தில் நின்ற ஒருவர் திடீரென கடலில் வீழ்ந்து கடல் நீரில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் மற்றைய மீனவர் அவரை காப்பாற்ற கடலில் குதித்துள்ளார்.

எனினும் குறித்த மீனவரும் கடல் நீரில் இழுத்துச் செல்லப்பட்டார். எனினும் ஏனையவர்கள் போராடியும் குறித்த இருவரையும் மீட்க முடியவில்லை.நீண்ட நேரத்தின் பின்னர் குறித்த படகின் வெளி இணைப்பு இயந்திரம் இயங்கிய நிலையில் இவர்கள் கரை திரும்பி ஏனைய மீனவர்களின் உதவியுடன் தேடியுள்ளனர்.

எனினும் ஞாயிற்றுக்கிழமை (12) இரவு வரை மீனவர்கள் மீட்கப்படவில்லை. திங்கட்கிழமை (13) காலை முதல் மீனவர்கள் கடலில் தேடுதல் மேற்கொண்டனர். இதன் போது கோந்தை பிட்டி கடலில் இருந்து சற்று தொலைவில் தர்ஷன் (வயது-19) என்பவர் சடலமாக மீட்கப்பட்ட நிலையில் அவரது சடலம் மீனவர்களால் மீட்கப்பட்டு கோந்தைப்பிட்டி கடற்கரைக்கு கொண்டு வரப்பட்டது. மற்றைய மீனவரை மீனவர்கள் தேடி வருகின்றனர். மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

- மன்னார் நிருபர்

இலங்கை செய்திகள் Sri Lanka News

# முன்பள்ளி ஆசிரியர்கள் ஆற்றுகின்ற பணி மன்னார் மறை மாவட்டத்திற்கு பாரிய பங்கினை வகிக்கின்றது எனப் பாராட்டினார் மன்னார் மறைமாவட்ட ஆயர்

மன்னார் மறைமாவட்ட பராமரிப்பில் உள்ள முன் பள்ளி ஆசிரியர்கள் கொரோனா தொற்று காலப்பகுதியில் முன் பள்ளி மாணவர்களுக்கு மேற்கொண்ட சேவையையும், உங்கள் முயற்சிகளையும் பாராட்டுகின்றோம். என மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.

ஜேர்மனியில் உள்ள திரு அவையின் தேவையில் உள்ளோருக்கு உதவும் கத்தோலிக்க சர்வதேச உதவி வழங்கும் நிறுவனத்தின் நிதி அனுசரணையில், மன்னார் மறைமாவட்ட பராமரிப்பில் உள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கு விசேட உதவி திட்டம் வழங்கும் நிகழ்வு மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதயத்தில் புதன்கிழமை (15) காலை 10 மணியளவில் இடம் பெற்றது.

மன்னார் மறைமாவட்ட விசேட திட்டங்கள் மற்றும் இளைஞர் ஆணைக்குழு இயக்குனருமான அருட்தந்தை விக்டர் சோசை அடிகளார் தலைமையில் இடம்பெற்றது. இதன் போது மன்னார் மறைமாவட்ட பராமரிப்பில் உள்ள 171 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மன்னார் மறைமாவட்ட ஆயரினால் விசேட உதவி திட்டம் வழங்கி வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.






அவர் மேலும் தெரிவிக்கையில், முன்பள்ளி ஆசிரியர்களாகிய நீங்கள் ஆற்றி வருகின்ற பணி மன்னார் மறை மாவட்டத்திற்கு பாரிய பங்கினை வகிக்கின்றது.முன் பள்ளி என கூறும் போது கல்வியை ஆரம்பிக்கும் ஓர் அடித்தளமாகும். மாணவர்கள் பாடசாலைகளுக்கு செல்வதற்கு முன்பாக தமது ஆரம்பக் கற்றலை கற்றுக் கொடுக்கும் அந்த கால கட்டத்தில் முன் பள்ளி ஆசிரியர்களாகிய நீங்கள் இருக்கிறீர்கள்.

முன்பள்ளி ஆசிரியர்களாகிய நீங்கள் மாணவர்களின் உருவாக்கத்திற்கு பாரிய பங்களிப்பு செய்கின்றீர்கள். எனவே உங்கள் சேவையை பாராட்டுகிறேன். கொரோனா தொற்று காரணமாக முன் பள்ளியை நடத்த முடியாத நிலையில் ஆசிரியர்களாகிய நீங்கள் பல்வேறு இடையூரை சந்தித்துள்ளீர்கள்.

அவ்வாறான சந்தர்ப்பத்திலும் சில ஆசிரியர்கள் மாணவர்களை தனியாக அழைத்து அவர்களுக்கு கற்றல் நடவடிக்கைகளை முன்னெடுத்து உள்ளீர்கள். உங்கள் முயற்சிகளை நாங்கள் ஏற்று பாராட்டுகின்றோம்.என அவர் தெரிவித்தார்.

**- மன்னார் நிருபர்**





MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்

⇒ Private 1st Mortgage (No Income Verification)

⇒ 2வது, 3வது மோட்கேஜ் (Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்

⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

MORTGAGE IN ANY SITUATION

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

MORTGAGE CLINIC



ஜெ(Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843



www.mortgageclinicCanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

எமது முகவரி

1504 Markham Rd,

Toronto, ON, M1B 2V9

(Markham & HWY 401)

RIGHT AT HOME REALTY INC.

MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto ON M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto ON M2J 5B4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# எமது கட்சியின் பொதுச் செயலாளரின் கோரிக்கைக்கு அமைவாகவே தமிழரசுக் கட்சிக்கு ஆதரவு வழங்கினேன்

## சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நானாட்டான் பிரதேச சபை உறுப்பினர் பெனடிக்ட் ஜக்கோபிள்ளை



சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர அவர்களின் கோரிக்கைக்கு அமைவாகவே நானாட்டான் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின் போது தமிழரசுக் கட்சிக்கு ஆதரவு வழங்கியுள்ளதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நானாட்டான் பிரதேச சபை உறுப்பினர் பெனடிக்ட் ஜக்கோபிள்ளை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நானாட்டான் பிரதேச சபையின் வரவு செலவுத் திட்டத்திற்கு எமது கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர அவர்கள் 9-12-2021 அன்று காலை 9 மணியளவில் எனக்கு தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டு நானாட்டான் பிரதேச சபையின் வரவு செலவுத் திட்டத்தில் தமிழரசுக் கட்சிக்கு ஆதரவு வழங்குமாறு என்னிடம் கூறினார்.

அதனால் நான் இந்த பட்ஜெட்டில் தமிழரசுக் கட்சிக்கு ஆதரவாக வாக்களித்து இருந்தேன். ஆனால் எதிர்க் கட்சியினர் என்னை ஒரு கொலையாளி மாதிரி இரண்டு நாட்களாக மிக மோசமான வார்த்தை பிரயோகங்களை பாவித்தும் தேடி வந்தனர்.

ஆகவே என்னை எவரும் கடத்தவில்லை. மறைத்து வைக்கவும் இல்லை. எனது கிராமமான கற்கிடந்த குளத்தில் எனது நண்பனின் வீட்டில் தான் இருந்தேன். என்னை எவரும் அச்சுறுத்த வில்லை.என அவர் மேலும் தெரிவித்தார்.

நானாட்டான் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் மேலதிகமான ஒரு வாக்கினால் 9 வாக்குகள் பெற்று நிறைவேறியுள்ளது. ஆதரவாக தலைவர் உள்ளிட்ட 7 உறுப்பினர்களும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் ஒருவர் உள்ளடங்களாக 8 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர்.



தவிசாளரின் மேலதிக வாக்கினால் வரவு செலவு திட்டம் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**

# வடக்கு மாணவர்களிடையே We Feeders அமைப்பின் ஏற்பாட்டில் Speak for Speechless கருத்தரங்கு



இலங்கையின் வடக்கு பிரதேசத்தில் உள்ள ஆதரவற்ற வாயில்லா ஜீவன்களுக்கு உணவளித்து வரும் We Feeders அமைப்பினால் பாடசாலை மாணவர்களிடையே Speak for Speechless நிகழ்வு நடாத்தப்பட்டு வருகின்றது.

அண்மையில் யாழ்ப்பாணம் திருநெல்வேலி சைவதமிழ் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டதுடனர்.

அடுத்த தலைமுறையினரிடையே Animal Love சிந்தனைகளை அதிகரிப்பதற்காகவும், ஆதரவற்ற வாயில்லா ஜீவன்கள் பற்றிய விழிப்புணர்ச்சிகளை நம் சமூகத்தில் விதைப்பதற்காகவும் இவற்றின் பயனாக இனிவருங்காலங்களில் வீட்டு விலங்குகள் தெருக்களில் பசியோடும், விபத்துகளோடும், அங்கவீனங்களோடும், நோய்களோடும் வாழ நேரிடுவதை குறைப்பதற்காகவும் Speak for Speechless We Feeders Awareness Events - school edition நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

We Feeders அமைப்பானது வீடற்ற விலங்குகளுக்கான உணவினை வழங்கி வருதல், வாயில்லா ஜீவன்களுக்கான இலவச மருத்துவ சேவைகள், தெருவோர நாய்க்குட்டிகள், பூனைக்குட்டிகள் போன்றவற்றினை வீடுகளில் வளர்க்க தயாராக உள்ளவர்களிடம் சேர்ப்பித்தல், பாடசாலை, பல்கலைகழகம், இளைஞர் அமைப்புக்கள் மற்றும் சமூகத்திடையே விலங்கு நலன்சார் விளிப்புணர்வு நிகழ்வுகளை நடாத்துதல் என இலங்கையின் வட பகுதியில் சேவையாற்றி வருகின்றது.

இணைந்து சேவையாற்ற தயாராகவுள்ள இளைஞர் யுவதிகளை வரவேற்பதுடன் இவர்களது செயல்பாடுகளை சமூக வலைத்தளங்களில் உடனுக்குடன் அறிந்து கொள்ளவும் தொடர்பு கொள்ளவும் முடியும்.

தன்னார்வலர்களாக இணைந்து பணியாற்றும் இப்படியான இளைஞர்களுக்கு நம் தமிழ் சமூகம் வரவேற்ற வேண்டியதும் ஆதரவளிக்க வேண்டியதும் நம் ஒவ்வொருவரினதும் கடமை.








# பரப்புக்கடந்தான் பகுதியில் மின்சாரம் தாக்கி 35 வயதுடைய யானை பலி



மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பரப்புக்கடந்தான் கிழக்கு பகுதியில் உள்ள தோட்ட காணி ஒன்றில் இறந்த நிலையில் காட்டு யானை ஒன்று புதன்கிழமை (15) காலை கிராம மக்களினால் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கிராம மக்கள் உடனடியாக உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்தனர். சம்பவ இடத்திற்கு வருகை தந்த வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் குறித்த யானையின் உடலை மீட்டனர்.

இதன் போது உயிரிழந்த குறித்த யானை சுமார் 35 வயதுடைய பெண் யானை என தெரிய வந்துள்ளது. இந்த நிலையில் சம்பவ இடத்திற்கு வருகை தந்த வட மாகாண வன ஜீவராசிகள் திணைக்களத்தின் வைத்திய அதிகாரி உயிரிழந்த யானையின் உடலத்தை மீட்டு சடல பரிசோதனைகளை மேற்கொண்டார்.

இதன் போது குறித்த யானை சட்டவிரோதமாக வைக்கப்பட்ட மின்சார இணைப்பில் அகப்பட்டு மின்சாரம் தாக்கிய நிலையில் உயிரிழந்துள்ளதாக தெரிவித்தார். இந்த நிலையில் மேலதிக விசாரணைகளை அடம்பன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

**- மன்னார் நிருபர்**

சினிமா

# குரலற்றவர்களின் குரல்: சூர்யாவின் "ஜெய்பீம்" படத்திற்கு இயக்குனர் ஷங்கர் பாராட்டு

சூர்யா நடிப்பில் வெளிவந்த ஜெய்பீம் படத்தை இயக்குனர் ஷங்கர் வெகுவாக பாராட்டியுள்ளார். இது தொடர்பான அவரது சமூக வலைதளப் பதிவு வைரலாகி வருகிறது. தமிழகத்தில் 1990-களில் நடந்த பல்வேறு உண்மைச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு காண்போரின் சிந்தையைத் தூண்டும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள திரைப்படம் தான் “ஜெய் பீம்”. நீதிபதி சந்துருவின் வழக்காடு பயணத்தில் இருந்து நிறையவே ஈர்க்கப்பட்டு இத்திரைப்படம் உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு வழக்கறிஞராக, நீதிபதியாக நீதியரசர் சந்துரு தனது கடமையைச் செய்ய, நீதியை நிலைநாட்டு தன் எல்லைகளைத் தாண்டியும் எப்படிப் போராடினர் என்பதை ஜெய்பீம் விவரிக்கிறது.

இத்திரைப்படத்தை த.செ.ஞானவேல் எழுதி, இயக்கியுள்ளார். படத்தில் சூர்யாவுடன், பிரகாஷ் ராஜ், ராவ் ரமேஷ், ரஜிஷா விஜயன், மணிகண்டன், லிஜோ மோல் ஜோஸ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். படத்திற்கு ஷான் ரால்டன் இசையமைத்துள்ளார். எஸ்.ஆர்.கதிர் ஒளிப்பதிவு செய்துள்ளார். ஃபிலோமின்ராஜ் எடிட்டராகவும், கலை இயக்குநராக கதிரும் பணியாற்றியுள்ளனர். தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி பல்வேறு அரசியல் கட்சியினரும் படத்திற்கு பாராட்டும், படக்குழுவினருக்கு வாழ்த்தும் தெரிவித்துள்ளனர்.





இந்நிலையில் பிரபல இயக்குனர் ஷங்கரும் ஜெய்பீம் படத்தை பார்த்து விட்டு படக்குழுவினரை பாராட்டியுள்ளார். இது தொடர்பாக ஷங்கர் தனது ட்விட்டர் பக்கத்தில், “குரலற்றவர்களின் குரலாக ஜெய்பீம் அமைந்துள்ளது. விரிவான விவரங்களையும், யதார்த்தமான பதிவுகளையும் இடம்பெறச் செய்து, காண்போரை படத்துடன் ஒன்றச் செய்த இயக்குனர் பாராட்டுக்குரியவர். சமூகத்தின் மீதான நடிகர் சூர்யாவின் அக்கறையை பாராட்டத்தக்கது. வலிமையான படங்கள் மிகப்பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதை ஜெய்பீம் மீண்டும் நிரூபித்துள்ளது” என கூறியுள்ளார்.

கனடிய செய்திகள்
Canadian News

## 'Scarborough Frontline Community Centre' hosted its 7th Annual Appreciation Event

# தனது 7வது ஆண்டு பாராட்டும் நன்றியும் தெரிவிக்கும் வைபவத்தை நடத்திய "Scarborough Frontline Community Centre"

'Scarborough Frontline Community Centre' hosted its 7th Annual Appreciation Event at Amana Event Centre in Scarborough yesterday. The Executive Director Mrs Vijaya Kula, with the support of the volunteers and staff, made this event very successful.

கனடா ஸ்காபுறொ நகரில் கடந்த 7 வருடங்களாக வெற்றிகரமாக சேவை நோக்குடன் இயங்கிவரும் 'Scarborough Frontline Community Centre' தனது 7வது ஆண்டு பாராட்டும் நன்றியும் தெரிவிக்கும் வைபவத்தை நேற்று புதன்கிழமை மாலை ஸ்காபுறோவில் உள்ள அமனா விழா மண்டபத்தில் சிறப்பாக நடத்தியது. நிறுவனத்தின் ஸ்தாபகரும் நிறைவேற்றுப் பணிப்பாளருமான திருமதி விஜயா குலா தனது பணியாளர்கள் மற்றும் தொண்டர் சேவையாளர்கள் ஆகியோருடன் இணைந்து வெற்றிகரமாக நடத்தினார்.

அரசியல் பிரமுகர்கள் ஊடக நண்பர்கள் மற்றும் வர்த்தக நண்பர்கள் மூத்தோர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.





**செய்தியும் படங்களும்: சத்தியன்**






## Royal LePage Ignite & United Realty Brokerage in Scarborough & Mississauga celebrated its Annual Awards Festival and Christmas Gala

# கனடா ஸ்காபுறோவில் Royal LePage Ignite & United Realty Brokerage வீடு விற்பனை முகவர்கள் நிறுவன விருதுகள் வைபவம் மற்றும் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்





MP Mr. Gary Anadasangaree and MPP Mr. Vijay Thanigasalam were invited as the Special Guests and the President of the Royal LePage Ignite Realty Brokerage Inc welcome both of them to the stage and had them to present two TOP PRODUCERS Awards.

Canada Uthayan Editor also attended the very graceful event along with Roobam Media Group.

Royal LePage Ignite & United Realty Brokerage in Scarborough & Mississauga, which is owned and operated Mr. Sugan Sivarajah, celebrated its Annual Awards Festival and Christmas Gala on last Saturday at Markham Convention Centre in Scarborough.

கனடா ஸ்காபுறோ நகரில் வெற்றிகரமாக இயங்கிவரும் Royal LePage Ignite Realty Brokerage Inc. வீடு விற்பனை முகவர்கள் நிறுவனத்தின் வருடாந்த விற்பனை விருதுகள் வழங்கும் வைபவம் மற்றும் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்











ஆகியன சனிக்கிழமை 11ம் திகதி ஸ்காபுறோ நகரில அமைந்துள்ள Markham Convention Centre மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

Royal LePage Ignite Realty Brokerage Inc. நிறுவனத்தின் அதிபரும் நிறுவனருமான சுகன் சிவராஜா அனைவரையும் வரவேற்று உரையாற்றினார். சுமார் 200க்கும் அதிகமான வீடு விற்பனை முகவர்கள் தங்கள் விற்பனைச் சாதனைகளுக்கு ஏற்ப விருதுகளைப் பெற்றுக்கொண்டார்கள். திரு ஜே பரமநாதன் அதி உயர் விற்பனை விருதினையும் திரு ஸ்டீபன் சராசின் இரண்டாவது நிலை உயர் விற்பனை விருதினையும் பெற்றுக்கொண்டார்கள்.



இந்தியா செய்திகள்
India News

# இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் மகள் திருமணம் சென்னையில் நடந்தது



சென்னையில் இசையமைப்பாளர் ஏ.ஆர் ரகுமானின் மகள் ருஷ்டா ரஹ்மான்- அல்தாப் நவாப் என்பவருடன் மிகவும் கோலாகலமாக திருமண வரவேற்பு விழா நடைபெற்றுள்ளது.

இதில் முதல்வர் மு.க ஸ்டாலின் கலந்து கொண்டார். தமிழ் சினிமாவில் ரோஜா படத்தின் மூலம் இசையமைப்பாளராக அறிமுகமானவர் ஏ.ஆர் ரஹ்மான். இப்படத்தில் இடம்பெற்ற பாடல்கள் அனைத்தும் மக்கள் மத்தியில் மாபெரும் வரவேற்பை பெற்று செம ஹிட்டானது.

அதனைத் தொடர்ந்து அவருக்கு வாய்ப்புகள் குவிந்த நிலையில் அவர் தமிழ், தெலுங்கு, இந்தி, ஆங்கிலம் என பல மொழிளிலும் எக்கச்சக்கமான படங்களுக்கு இசையமைத்துள்ளார்.

ஏ.ஆர் ரகுமானின் மகள் ருஷ்டா ரஹ்மான். இவருக்கு அல்தாப் நவாப் என்பவருடன் சென்னையில் மிகவும் கோலாகலமாக திருமண வரவேற்பு விழா நடைபெற்றுள்ளது. அந்தத் திருமண வரவேற்பு விழாவில் பிரபலங்கள் பலரும் கலந்து கொண்டுள்ளனர். மேலும் அந்த விழாவிற்கு தமிழக முதல்வர் மு.க ஸ்டாலினும் வருகை தந்துள்ளார். மணமக்களை வாழ்த்திய அவர் அவர்களுக்கு பசுமை கூடை மரக்கன்றுகளை பரிசாக கொடுத்துள்ளார். அவரை தொடர்ந்து இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் சுப்பிரமணியன் கலந்து கொண்டுள்ளார்.

# தேசிய இனங்கள் ஒன்றிணைந்து நின்றால் உறுதியாக நம் உரிமைகளை வென்றெடுக்க முடியும்! - சீமான்




தேசிய இனங்கள் ஒன்றிணைந்து நின்றால் உறுதியாக நம் உரிமைகளை வென்றெடுக்க முடியும்! - பஞ்சாப் அமிர்தசரசில் நடைபெற்ற மக்கள் உரிமை ஒன்றுகூடல்-2021 நிகழ்வில் முழங்கிய சீமான்.

நாம் தமிழர் கட்சியின் தலைமை அலுவலகச் செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

டிசம்பர் 10, மனித உரிமைகள் நாளையொட்டி, பஞ்சாப் மாநிலத்தைச் சார்ந்த "தல் கல்சா" அமைப்பு சார்பாக அமிர்தசரசில் பல்வேறு தேசிய இனங்களின் அரசியல் ஆளுமைகள், மனித உரிமை ஆர்வலர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் பலர் பங்கேற்கும் "மக்கள் உரிமை ஒன்றுகூடல் 2021" நடைபெறவிருக்கின்றது. இதில் பங்கேற்பதற்காக விமானம் மூலம் அமிர்தசரஸ் சென்றடைந்த நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.



ம ன ி த உரிமைகளுக்கான நாகா மக்கள் இயக்கம், திரிபுரா மக்கள் முன்னணி, தல் கல்சா மற்றும் நாம் தமிழர் கட்சி உள்ளிட்ட அமைப்புகள் இந்நிகழ்வில் பங்கேற்றன.

ஹர்பால் சிங் சீமா, ஹர்சரஞ்சித் சிங் தாமி, கன்வர்பால் சிங், பரம்ஜித் சிங் மாண்ட் மற்றும் பரம்ஜித் சிங் தாண்டா, முனைவர் குமார் சஞ்சய் சிங், பேராசிரியர் ஜக்மோகன் சிங், செந்தமிழன் சீமான் மற்றும் காஷ்மீரைச் சேர்ந்த மனித உரிமை ஆர்வலர்கள் பலரும் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

இந்த நிகழ்வில் பங்கேற்ற அனைத்துத் தலைவர்களுடன் சீமான் அவர்களும் கூட்டாக சேர்ந்து காரத்பூரில் உள்ள பொற்கோயில் மற்றும் தேரா பாபா நானக் ஆகியவற்றைப் பார்வையிட்டனர். சீக்கியத் தலைவர்கள் சீமான் உள்ளிட்ட அனைத்து தேசிய இனங்களின் ஆளுமைகளுக்கும் சிறப்பான வரவேற்பு அளித்து, பொற்கோயில் மற்றும் தேரா பாபா நானக் குறித்த வரலாற்றுச் சிறப்புகளையும் விளக்கி கூறினர்.

அதனைத்தொடந்து தர்பார் சாஹிப் எனுமிடத்தில் நடைபெற்ற "மக்கள் உரிமை ஒன்றுகூடல் 2021" நிகழ்வு, இந்திய ஒன்றிய அரசின் அதிகாரக் குவியல், ஒற்றைமயமாக்கல் கொள்கை, மாநிலங்களின் உரிமைகள் பறிப்பு, சகிப்புத்தன்மையின்மை, இஸ்லாமியர், கிறித்துவர் மற்றும் ஒடுக்கப்பட்டவர்கள் மீது உருவாக்கப்படும் தவறான கருத்துருவாக்கங்கள், தனிமனித உரிமைகள் பறிப்பு மற்றும் மறுக்கப்படும் அரசியல் கைதிகளின் விடுதலை உள்ளிட்டவற்றுக்கு எதிராகவும், தேசிய இனங்களின் ஒற்றுமையை வெளிப்படுத்தும் விதமாகவும் அமைந்தது.

இந்நிகழ்வில் பங்கேற்ற பல்வேறு தேசிய இனங்களின் ஆளுமைகளும் கருத்துரையாற்றுகையில், மனித உரிமைகள், சட்ட உரிமைகள் மிகவும் மூர்க்கத்தனமான தாக்குதலை எதிர்கொள்வது, மனித உரிமை ஆர்வலர்கள் மீதான தொடர்ச்சியான துன்புறுத்தல் மற்றும் ஒட்டுமொத்த மனித உரிமைகள் சீரழிந்து வரும் சூழ்நிலை ஆகியவற்றுடன் நாட்டில் அதிகரித்து வரும் கொடுங்கோன்மை மற்றும் பெரும்பான்மைவாதத்திற்கு எதிராக ஒன்றுபட்ட குரலை எழுப்பினர்.

சிஏஏ எதிர்ப்பு, வேளாண் சட்டங்களை திரும்பப்பெறக் கோரி போராடிய விவசாயிகளை கொடூரமான முறையில் கொலை, நாகா மக்களின் அரசியல் கோரிக்கைகள், சிறுபான்மையினர், தலித்துகள் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான அட்டூழியங்கள், 370 சட்டப்பிரிவு நீக்கம் உள்ளிட்டவை முதன்மையாக இந்நிகழ்வில் விவாதிக்கப்பட்டன.

தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அவர்களுக்கு சீக்கியர்களின் புனித அடையாளமான பொற்கோயில் படம் பொறித்த நினைவுப்பரிசு வழங்கப்பட்டது. பல்வேறு தேசிய இனங்களின் ஆளுமைகளின் முன்னிலையில் சீமான் அவர்கள் வரலாற்றுச் சிறப்புமிக்க உரையாற்றினார். அதன் காணொளி மற்றும் எழத்தாக்கத்தின் சுருக்கம் பின்வருமாறு, https://youtu.be/VwuAf_iPILI

மனித உரிமைக்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து நிற்கும் நாள் இன்று!

"சுதந்திரம் என்ற சொல்லுக்கு அர்த்தம் தெரியாதவனுக்குக்கூட சுதந்திரம் தேவைப்படுகிறது. பறவைக்கு இறக்கை போல, வண்டிக்கு அச்சாணிபோல, மனித உடலுக்கு முதுகெலும்புபோல ஒவ்வொரு மனிதனுக்கும் சுதந்திரம் தேவை" என்கிறார் ஹோரேசே மார்த்தி. பல்வேறு தேசிய இனங்களின் மக்களாகிய நாம் நம்முடைய மேலதிக உரிமைக்காகப் ஒன்றிணைந்து இங்கே கூடியிருக்கிறோம்.

அழித்தொழிக்கப்பட்ட ஒரு இனத்தின் மகன் நான். ஈழத்தில் 2008-2009 ஆண்டுக் காலக்கட்டத்தில் ஒரு இலட்சத்து 76 ஆயிரம் எம்மினச் சொந்தங்கள் கொன்றொழிக்கப்பட்டார்கள். பச்சிளங்குழந்தைகள் பல்லாயிரக்கணக்கில் கொல்லப்பட்டார்கள். பெண்கள் வன்புணர்வு செய்யப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்கள். வீடுகள், பள்ளிக்கூடங்கள் இடிக்கப்பட்டன. எல்லாவற்றையும் இழந்து நாங்கள் நிற்கதியாக நின்றுகொண்டிருந்தோம். ஆனாலும், தேசிய இனத்தின் மக்களான நாம் அனைவரும் ஒன்றிணைந்து மனித உரிமைக்காக இன்று கூடியிருக்கிறோம். ஸ்டான் லூர்து சாமி அவர்களுக்கு உரிய மருத்துவத்தைக்கூடக் கொடுக்காமல் அவரை மரணிக்கச் செய்துவிட்டார்கள் என்பதை இங்கே பேசிய தலைவர் பெருமக்கள்கூடக் குறிப்பிட்டார்கள். அதைப்போலவே, இன்று என்னுடைய சகோதரன் யாசின் மாலிக் ஐந்தாண்டுகளாக திகார் சிறையிலே வாடிக்கொண்டிருக்கிறார்.

மேடைப்பதாகையில் என்னுடைய அன்புத்தம்பி பேரறிவாளன், அன்பு அக்கா நளினி ஆகியோரது படமும் இருக்கிறது. அவர்கள் 30 ஆண்டுகளாகச் சிறையில் வாடிக்கொண்டிருக்கிறார்கள். ஏழு பேர் விடுதலைக்காக எண்ணற்ற போராட்டங்களைச் செய்துகொண்டிருக்கிறோம். தமிழக மீனவர்கள் 840 பேருக்கும் மேல் இலங்கை கடற்படையினரால் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அண்மையில்கூட ராஜ்கிரண் என்ற ஒரு தம்பியை சிங்கள இராணுவம் கொலை செய்துவிட்டது. ஆனால், பாஜகவின் ஆட்சியாளர்கள் ஒரு சிறுகண்டனம், சிறு வருத்தத்தைக்கூடப் பதிவு செய்யவில்லை என்பது மிகப்பெரியக் கொடுமை.

ஒன்றிணைந்துப் போராடினால், உறுதியாக நின்றுப்போராடினால் வெற்றிபெற முடியும் என்று நிரூபித்தவர்கள் நீங்கள். டெல்லியிலே நடந்த வேளாண் சட்டங்களைத் திரும்பப்பெறக்கோரியப் போராட்டத்திலே தொடர்ச்சியாகக் களத்திலே நின்று நீங்கள் வென்று காட்டியதுபோல, தேசிய இனங்களான நாம் அனைவரும் ஒன்றிணைந்து நின்றால் உறுதியாக நம் உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்ற உறுதியை நான் உங்களுக்குத் தருகிறேன்.

பாராளுமன்றத்தில் எந்த விவாதங்களும் நடத்தாமல் கொடும் சட்டங்களை இயற்றிக்கொண்டே இருக்கிறது இந்திய ஒன்றிய அரசு. அதுமட்டுமின்றி, என்னுடைய அலைபேசி உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் பலரின் அலைபேசி ஒட்டுக் கேட்கப்படுகிறது. ஆனால், அலைபேசி ஒட்டுக்கேட்பதில் எவ்விதத் தனி-மனித சுதந்திர மீறலோ, தனிமனித உரிமைப்பாதிப்போ இல்லை என்று அரசு நீதிமன்றத்தில் வாதிடுகிறது.

பல்வேறு தேசிய இனங்களின் அரசியல் ஆளுமைகள், மனித உரிமை ஆர்வலர்கள், சமூகச்செயற்பாட்டாளர்கள் எனப் பலர் பங்கேற்றுள்ள இம்மாபெரும் நிகழ்வை ஒருங்கிணைத்த "தல் கல்சா" அமைப்பிற்கும், என்னுடைய போற்றுதற்கும், வணக்கத்துக்கும் உரிய ஐயா ஜக்மோகன் சிங் அவர்களுக்கும், ஒன்றுகூடல் நிகழ்வில் பங்கேற்றுள்ள தேசிய இனங்களின் தலைவர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியும், வாழ்த்துகளும்! தொடர்ந்து மனித உரிமைக்காக நாம் ஒன்றிணைந்து நிற்போம்!




இவ்வாறு சீமான் அவர்கள் உரையாற்றியுள்ளார்.

அதனைத்தொடர்ந்து மாலை அமிர்தசரஸ், சஞ்சோக் விடுதியில் கருத்தரங்கம் நடைபெற்றது.

# நடனக்கலைஞர் ஜாகீர் உசைனுக்கு ஸ்ரீரங்கம் கோயிலில் அனுமதி மறுப்பு – மன அழுத்தத்தால் மருத்துவமனையில் அனுமதி



கலைமாமணி விருது வென்ற நடனக்கலைஞரும் திமுகவை சேர்ந்தவருமான ஜாகீர் உசேன் திருச்சி ஸ்ரீரங்கம் கோயிலுக்கு தரிசனம் செய்ய அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் மன அழுத்தம் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள சம்பவம் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

நடனக்கலைஞரான ஜாகீர் உசேன் பிறப்பால் இஸ்லாமிய குடும்பத்தில் பிறந்திருந்தாலும், பரதநாட்டியம் மீதான ஈர்ப்பு காரணமாக குடும்பத்தினர் எதிர்ப்பையும் மீறி வீட்டைவிட்டு வெளியேறியவர். குருகுல முறையில் தங்கி பரதம் பயின்று வைணவத்தின் சிறப்புகளை விளக்கும் வகையில் பல்வேறு இடங்களில் நடன நிகழ்ச்சிகளை நடத்தியவர். இவரின் பரதநாட்டிய பங்களிப்பை பாராட்டி இவருக்கு தமிழ்நாடு அரசின் கலைமாணி விருதும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தான் ஸ்ரீரங்கம் கோயிலுக்கு செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளது தொடர்பாக நடனக்கலைஞர் ஜாகீர் உசேன் பதிவிட்டுள்ள முகநூல் பதிவில், நான் என் தாய்வீடாக கருதும், தினம் என் நாவிலும் நெஞ்சிலும் ஏற்றித் தொழும் தென்னரங்கனை என்னரங்கனாக கணப்பொழுதும் மறவாது கருதிக் கொண்டிருக்கும் திருவரவங்கத்திலிருந்து ஒரு மத வெறியனால் வலுக்கட்டாயமாக வெளியேற்றப் பட்டேன். காரணம் என் பெயர். முதன்முறையாக நான் இம்மதத்திற்கு தொடர்புடையவன் அல்ல என ஒரு மிகப்பெரும் சமூகமே பார்த்துக் கொண்டிருக்க அரங்கனைக் காண தடைசெய்யப்பட்டு, பல அவமானங்களுக்கிடையே துரத்தப் பட்டேன். இக்காயம் என்னை என்றென்றும் உறுத்திக் கொண்டே இருக்கும். ஆனாலும் என் பற்று அரங்கனையும் ஆண்டாளையும் விட்டு அணு அளவும் அகலாது. என்னை துரத்தியவன் ஒரு நடத்தை கெட்டவன் மட்டுமல்ல. இந்நாட்டின் இறையாண்மைக்கும் மத நல்லிணக்கத்திற்கும் எதிரானவன். காலம், திருப்பாணனை உள்ளழைத்தது போல் என்னையும் என் நம்பிக்கையையும் ஒருநாள் ஏற்கும். அரங்கன் என்றும் எமக்குத் துணை என பதிவிட்டுள்ளார். இந்த நிலையில் எனக்கு மன அழுத்தத்தால் ஏதேனும் நிகழ்ந்தால், அதற்கு என்னை திருவரங்கத்தை விட்டு வெளியேற்றியவனே பொறுப்பு எனவும் முகநூலில் பதிவிட்டு சென்னை ராஜீவ் காந்தி மருத்துவனையில் சிகிச்சை பெறும் படங்களும் முகநூலில் பதிவேற்றப்பட்டுள்ளது. ஜாகீர் உசேன் என்று பெயர் வைத்த காரணத்தால் பரதநாட்டிய கலைஞர் கோயிலுக்கு செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளது தொடர்பாக ஆதரவாகவும் எதிராகவும் பல்வேறு விவாதங்கள் சமூகவலைத்தளங்களில் எழுந்துள்ளது. இது தொடர்பாக கவிதா ராமு ஐஏஎஸ் தனது முகநூல்பக்கத்தில் பகிர்ந்துள்ள பதிவும் கவனம் பெற்று வருகிறது.



அதில் வைணவத்தலங்களில் ஜாகீர் உசேன் செய்துள்ள கைங்கரியங்களை விளக்கி அதில் பதிவிடப்பட்டுள்ளது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# உண்மையான தொழிலாளர் தலைவர்கள் போராடுவது குறுகிய அரசியல் நலன்களுக்காக அல்ல என்கிறார் மஹிந்த ராஜபக்ஷ



உண்மையான தொழிலாளர் தலைவர்கள் போராடுவது குறுகிய அரசியல் நலன்களுக்காக அல்ல என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் தெரிவித்தார்.

முப்பத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக தொழிற்சங்கத் துறையில் பணியாற்றி, உழைக்கும் மக்களுக்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய தொழிலாளர் தலைவர்கள் மற்றும் அரச சேவையில் ஈடுபட்டு தொழிலாளர்களின் முன்னேற்றத்திற்காக தமது சேவை காலத்தை அர்ப்பணித்த அரச அதிகாரிகளை கௌரவிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு அலரி மாளிகையில் வைத்து இவ்வாறு குறிப்பிட்டார்.

கௌரவிப்பு விழாவில், தொழிலாளர் சமூகத்தினருக்காக உன்னத சேவையாற்றிய 09 பிரபல தொழிற்சங்கத் தலைவர்கள் மற்றும் ஓய்வுபெற்ற இரண்டு அரசாங்க அதிகாரிகள் பிரதமரினால் கௌரவிக்கப்பட்டனர்.

தொழிற்சங்க தலைவர்களான மெரெஞ்சுகே தயாரத்ன முனிதாச பெர்னாண்டோ (அகில இலங்கை மோட்டார் தொழிற்சங்கம்) லெஸ்லி ஷெல்டன் தேவேந்திர (இலங்கை சுதந்திர சேவை சங்கம்), சுப்பையா சுப்ரமணியம் ராமநாதன் (தோட்டத் தொழிலாளர் சங்கம்), ஹேம அமரதுங்க பியதாச (அகில இலங்கை வர்த்தக மற்றும் கைத்தொழில் தொழிலாளர் சங்கம்), ரெங்கசாமி பழனிமுத்து (இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்), விஜேவந்த பத்மசிறி அமரசிங்க (இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம்), ரெங்கையா மருதமுத்து கிருஷ்ணசாமி (விவசாய மற்றும் தோட்டத் தொழிலாளர்கள் சங்கம்), ஆறுமுகம் முத்துலிங்கம் (ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கம்), துவான் மன்சூர் ரஹீம் ரசிதீன் (இலங்கை தொழிலாளர் சம்மேளனம்) மற்றும் தொழில் அமைச்சின் செயலாளராக சேவையாற்றி தற்போது அரச சேவையில் இருந்து ஓய்வுபெற்ற மஹிந்த மதிஹஹேவ மற்றும் தொழிலாளர் ஆணையாளர் நாயகமாக கடமையாற்றி அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்ற குணசிறி வீரகோன் ஆகியோர் கௌரவ பிரதமரிடம் கௌரவ பாராட்டு விருதுகளை பெற்றுக்கொண்டனர்.

உழைக்கும் மக்களின் நலனை மேம்படுத்தி திருப்திகரமான இலங்கை உழைக்கும் மக்கள் சக்தியை உருவாக்குவதற்கு கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் தொழில் அமைச்சராக இருந்த போது அவர்களினால் முன்வைக்கப்பட்ட பிரேரணையின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட சிரம வாசனா நிதியத்தின் அனுசரணையில் தொழில் அமைச்சும், நிதி அமைச்சும் இணைந்து இவ்விழாவை ஏற்பாடு செய்திருந்தன.

மேற்படி விழாவில் கௌரவ பிரதமர் ஆற்றிய முழுமையான உரை வருமாறு, நமது நாடு சுதந்திரம் அடைந்து எதிர்வரும் பெப்ரவரி 4ம் திகதியுடன் 74 ஆண்டுகளாகின்றன. அந்த சுதந்திரத்தை நாம் சாதாரணமாக பெறவில்லை. அந்த சுதந்திரத்தை பெறுவதற்கு தொழிலாளர் இயக்கம் பெரும் தியாகங்களை செய்தது. அவர்களின் அர்ப்பணிப்பு இல்லாவிட்டால், நமது சுதந்திரம் தாமதமாகியிருக்கும்.

அன்று முதல் நமது நாட்டின் தொழிலாளர் தலைவர்கள் இந்நாட்டில் சுதந்திரம், ஜனநாயகம், சமத்துவம் ஆகியவற்றுக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டனர். அது மாத்திரமன்றி தொழிற்சங்க இயக்கங்களைக் கட்டியெழுப்பி, நாடு எதிர்நோக்கும் சவால்களை ஒவ்வொன்றாக முறியடிப்பதே அவர்களது எதிர்பார்ப்பாக காணப்பட்டது.

ஏ.ஈ.குணசிங்க, கலாநிதி என். எம். பெரேரா, கொல்வின் ஆர். டி சில்வா, பீட்டர் கெனமன், கலாநிதி எஸ்.ஏ. விக்கிரமசிங்க, பிலிப் குணவர்தன இவ்வாறு பல தொழிலாளர் தலைவர்களை நாம் நினைவு கூருகின்றோம். இவர்கள் தலைமையிலான தொழிற்சங்க இயக்கம் இன, மத அடிப்படையில் பிரிந்து போராடவில்லை. மேலும், உழைக்கும் மக்கள் இனம், மதம், சாதி அடிப்படையில் பிரிக்கப்படவில்லை.

அனைவரும் ஒரே வர்க்கத்தினர் என்ற அடிப்படையிலேயே பணியாற்றினர். நமது நாட்டில் தொழிற்சங்க இயக்கம் இன்றும் இவ்வாறு வலுப்பெற்று வருவது அன்று போடப்பட்ட அடித்தளத்தின் காரணமாகவே என்று நான் நம்புகிறேன்.

தொழிற்சங்க போராட்டம் என்பது குளிரூட்டப்பட்ட அறையிலிருந்து செய்யக்கூடியதொன்றல்ல. அடிவாங்குவதற்கும் நேரிடும். சிறையில் அடைப்படவும் நேரிடும். இன்று இங்குள்ள தொழிலாளர் தலைவர்களுக்கு அது குறித்து புதிதாக கூற வேண்டிய அவசியமில்லை. எமது லெஸ்லி தேவேந்திர அவர்களுக்கு இவ்விடயத்தில் 57 வருட அனுபவம் உள்ளது. ஜே.ஆரின் காலத்தில் தொழிலாளர்களுக்காக போராடச் சென்று 12 வருடங்களாக பொய் வழக்குகள் போடப்பட்டு வேலையை இழந்தது எனக்கு நினைவிருக்கிறது. மேலும் அவருக்கு ஒன்றரை ஆண்டுகள் சிறை தண்டனையும் விதிக்கப்பட்டது. இதேபோன்ற கசப்பான அனுபவங்களை இங்குள்ள பிற தொழிலாளர் தலைவர்களும் கொண்டுள்ளனர். ஆனால் அந்த விடயங்களை கொண்டு தொழிலாளர் தலைவர்களின் வாய்களை யாராலும் அடைக்க முடியாது.




உண்மையான தொழிலாளர் தலைவர்கள் போராடுவது குறுகிய அரசியல் நலன்களுக்காக அல்ல. வேலையிழந்து சிறை சென்றாலும் எத்தனை இன்னல்கள் வந்தாலும் சகித்துக் கொண்டு போராடுகிறார்கள். இன்று இங்குள்ள தொழிலாளர் தலைவர்கள் உழைக்கும் மக்களுக்கு தங்களால் இயன்றவரை நேர்மையாக சேவையாற்றியிருக்கிறார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.

இவர்களில் பெரும்பாலானோர் தங்கள் வாழ்க்கையின் பெரும்பகுதியை தங்கள் தொழில்முறை சக ஊழியர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காகவே செலவிட்டுள்ளனர். அவர்களின் போர்க்குணம் இன்றும் இளமையாக உள்ளது. தொழிலாளர்களின் போராட்டக் களத்தில் இன்றும் முன்னணியில் இருப்பவர்கள் இவர்கள்தான் என்பதைப் பார்க்கிறோம். இன்று உழைக்கும் மக்கள் அனுபவிக்கும் பல உரிமைகள் மற்றும் சலுகைகள் இந்த தலைவர்களின் அர்ப்பணிப்பிலிருந்து பெறப்பட்ட உரிமைகள் மற்றும் சலுகைகள் என்று புதிதாக கூற வேண்டியதில்லை.

இந்த தலைவர்களில் பலர் உழைக்கும் மக்களின் வியர்வை மற்றும் கண்ணீருக்காக தங்கள் இன்னுயிரை தியாகம் செய்திருந்தாலும், அவர்கள் தங்களுக்கு எதுவும் செய்யவில்லை. அதற்காக நேரத்தையும், உழைப்பையும் மட்டுமின்றி செல்வத்தையும் அர்ப்பணிக்கும் தொழிலாளர் தலைவர்கள் இருக்கிறார்கள். உயிரை பணயம் வைத்து இரவு பகலாக போராடிய இவர்கள் அடையும் ஒரே திருப்தி உழைக்கும் மக்களின் தொழிற்சங்க உரிமைகளை வென்றெடுப்பது தான். அதனால் தான், நான் தொழில் அமைச்சராக இருந்தபோது, தங்கள் தொழிற்சங்கங்களுக்காக அரை நூற்றாண்டு காலமாகப் போராடும் தொழிலாளர் தலைவர்களை பாராட்டும் திட்டத்தை வகுத்தேன்.

நாட்டின் பொருளாதாரத்தின் உந்து சக்தி உழைக்கும் மக்களே. அவர்களுக்கு ஒரு பாதிப்பின் போது தேவைப்படும்போது நிவாரணம் வழங்க அரசு பணத்தை செலவழிப்பதற்கு 1995 ஆம் ஆண்டு வரை முறையொன்று காணப்படவில்லை. நான் தொழில் அமைச்சராக இருந்தபோது, இந்த தொழிலாளர் தலைவர்களில் பலர் என்னுடன் நெருங்கிய நண்பர்களாக இருந்தனர். நீண்ட நாட்களாக ஒருவரையொருவர் அறிந்தவர்கள். எனவே, இவர்களின் துயரமும் வேதனையும் நமக்கு புரியும். இதன் விளைவாக, அந்த தோழர்களின் நலனை மேம்படுத்தவும், அவர்களை திருப்திகரமான தொழிலாளர் சக்தியாக உருவாக்கவும் "சிரம வாசனா நிதியத்தை நிறுவ முடிந்தது.





அது மட்டுமின்றி, உழைக்கும் சமுதாயத்திற்காக தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்த தொழிலாளர் தலைவர்களையும், அதிகாரிகளையும் அங்கீகரித்துப் பாராட்ட வேண்டும் என்று நினைத்தோம். அப்படித்தான் சிரம வாசனா நிதியத்தை சட்டப்பூர்வ நோக்கமாக்கி, தொழிலாளர் தலைவர்களுக்கு அரச அங்கீகாரத்துடன் இந்த அங்கீகாரம் கிடைக்க வழி வகுத்தது. எனினும், தொழிலாளர்களின் சார்பாக நான் நின்றதால், தொழில் அமைச்சில் இருந்து மீன்பிடி அமைச்சுக்கு மாற நேர்ந்தது. அந்த கடந்த காலம் உங்களுக்கு நினைவிருக்கும்.

ஓய்வுபெற்ற அரச அதிகாரிகள் இருவருடன் மேலும் தொழிலாளர் தலைவர்கள் பத்து பேர் பாராட்டப்பட்டனர். 2008ஆம் ஆண்டு பலானம்போ, அலெவி மௌலானா, பிட்ரோ, விமல் சிறி டி மெல், காரியவசம், ராமையா, செல்லசாமி ஆகிய தொழிலாளர் தலைவர்கள் 10 பேர் இவ்வாறு பாராட்டப்பட்டனர். ஆனால் இதில் தொழிற்சங்க தலைவிகள் இல்லாமையை நான் குறையாக காண்கிறேன்.

சர்வதேச ரீதியில் கவனத்தில் ஈர்க்கப்பட்ட பொன்சினாஹாமி, எமலியா ஆகிய போராட்ட தொழிற்சங்க தலைவிகள் பற்றியும் எமது நாட்டின் வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. மரதானை சுதுவெல்லவில் வசித்த சாதாரண குடும்பத்தை சேர்ந்த பெண்மணியான பொன்சினா ஹாமிகே போராட்டக்குணம் குறித்து 1923ஆம் ஆண்டு இடம்பெற்ற மாபெரும் வேலைநிறுத்த போராட்டம் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் சர்வதேச ரீதியில் விருது பெற்ற தொழிற்சங்க தலைவியாவார். எமலியா 53 ஹர்தாலின் போது பாரிய பங்காற்றியிருந்தார்.

எமது தோழர் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அவர்கள், அந்த அமைச்சினதும், நிறுவனங்களினதும் அதிகாரிகள் இணைந்து இவ்வாறான கௌரவிப்பு விழாவொன்றை ஏற்பாடு செய்தமை குறித்து எமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். நாட்டின் சவால்களை வெற்றிகொள்ள எமக்குள்ள பலம் தொழிலாளர் பெருமக்களே என்பதை மீண்டும் நினைவூட்டி, இன்று கௌரவிக்கப்பட்ட தலைவர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் சிறந்த எதிர்காலம் அமைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என குறிப்பிட்டார்.

குறித்த சந்தர்ப்பத்தில் கௌரவ அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, காமினி லொகுகே, வாசுதேவ நாணயக்கார, பாராளுமன்ற உறுப்பினர் டப்ளிவ்.டீ.ஜே.செனெவிரத்ன, தொழில் அமைச்சின் செயலாளர் எம்.பீ.டீ.யூ.கே.மாபா பதிரன, தேசிய லொத்தர் சபையின் தலைவர் லலித் பியும் பெரேரா, சிரம வாசனா நிதியத்தின் பணிப்பாளர்களான லலித் கன்னங்கர, சுதத் பண்டார, ஹிமாலி ஒருகொடவத்த உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# யாழ்ப்பாணத்தில் கடும் பாதுகாப்பிற்கு மத்தியில் சீனத்தூதுவர்!

இலங்கைக்கான சீன தூதுவர் கடும் பாதுகாப்பிற்கு மத்தியில் யாழிற்கு வருகை தந்துள்ள நிலையில், சீன தூதுவர் உள்ளிட்ட தூதரக அதிகாரிகள் புதன்கிழமை மதியம் பருத்தித்துறை முனைப் பகுதியையும் பார்வையிட்டுள்ளனர்.



சீன தூதுவர் கீ சென்ஹொங் தலைமையில் சீன அதிகாரிகள், இரண்டு நாள் பயணமாக வடக்கு மாகாணத்திற்கான விஜயத்தினை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை கடந்த சில காலங்களில் வடக்கிலுள்ள மூன்று தீவுகள் சீனாவிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக வெளியான தகவல் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி இருந்தது.

அதோடு வடக்கின் மூன்று தீவுகளில் முன்னெடுக்கப்பட விருந்த மின் திட்டத்தை சீனா கைவிட்டு உள்ள நிலையில் சீன தூதுவர், வடக்குக்கான பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

இந்த நிலையில் அவரது விஜயம் பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.



# பெட்ரோல், டீசல் மீதான வரிகளால் 3 ஆண்டுகளில் இந்திய அரசு ஈட்டிய வருவாய் ரூ. 8 லட்சம் கோடி

பெட்ரோல், டீசல் மீதான வரிகளால் கடந்த 3 ஆண்டுகளில் மத்திய அரசுக்கு 8 லட்சம் கோடி ரூபாய் வருவாய் கிடைத்துள்ளதாக, நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

மக்களின் அன்றாடத் தேவைகளான பெட்ரோல், டீசல், சமையல் கியாஸ் உள்ளிட்ட எரிபொருட்களின் விலைகள் கடந்த சில ஆண்டுகளாக தாறுமாறாக உயர்த்தப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டு 75 ரூபாய் அளவில் இருந்த பெட்ரோல் விலை இப்போது 100 ரூபாயைத் தாண்டி விட்டது. டீசல் விலையும் அதற்கு நிகராக வந்து நிற்கிறது.

இந்த நிலையில், எரிபொருள் வரி மூலம் கடந்த 3 ஆண்டுகளில் 8 லட்சம் கோடி அரசுக்கு வருவாய் கிடைத்திருப்பதாக, மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி, மாநிலங்களவையில் இன்று கேள்வி ஒன்றுக்கு எழுத்துப்பூர்வமாக பதில் அளித்த நிர்மலா சீதாராமன் கூறியதாவது: "கடந்த 2018ம் ஆண்டு அக்டோபர் 5ம் தேதி பெட்ரோல் மீதான கலால் வரி லிட்டருக்கு 19 ரூபாய் 48 காசாக இருந்தது. இது 2021ம் ஆண்டு நவம்பர் 4ம் தேதி 27 ரூபாய் 90 காசாக உயர்த்தப்பட்டது. இதே காலக்கட்டத்தில், டீசல் மீதான கலால் வரி 15 ரூபாய் 33 காசிலிருந்து 21 ரூபாய் 80 காசாக அதிகரிக்கப்பட்டது.



குறிப்பாக 2020-21 நிதியாண்டில் அரசுக்கு 3 லட்சத்து 71 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் வருவாய் கிடைத்துள்ளது.

ஒட்டுமொத்தமாக கடந்த 3 ஆண்டுகளில், பெட்ரோல், டீசல் மீதான வரி மற்றும் செஸ் வரியால் மத்திய அரசுக்கு 8 லட்சம் கோடி ரூபாய் வருவாய் கிடைத்துள்ளது". இவ்வாறு நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.




தீபாவளியை முன்னிட்டு கடந்த நவம்பர் 4ம் தேதியன்று, பெட்ரோல், டீசல் மீதான கலால் வரி குறைக்கப்பட்டது. பெட்ரோல் விலை லிட்டருக்கு 5 ரூபாய், டீசல் லிட்டருக்கு 10 ரூபாய் என குறைக்கப்பட்டது. அதற்கு முன்னதாகவே, தமிழக அரசு பெட்ரோல் விலையை லிட்டருக்கு 3 ரூபாய் குறைத்தது.

மத்திய அரசைப் பின்பற்றி பல்வேறு மாநில அரசுகளும் வாட் வரியை குறைத்தன. அதற்குப்பிறகும், பெட்ரோல் விலை 100 ரூபாயைத் தாண்டிய நிலையிலேயே உள்ளது.

விரைவில் உத்தரபிரதேசம், பஞ்சாப், மணிப்பூர், உத்தரகாண்ட், கோவா ஆகிய 5 மாநில சட்டசபைகளுக்குத் தேர்தல் வர இருப்பதால், பெட்ரோல்-டீசல் விலையை மத்திய அரசு அதுவரை உயர்த்தாது என்று அரசியல் பார்வையாளர்கள் கருதுகிறார்கள்.

**- மணிராஜ், திருநெல்வேலி**

# வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கோவிலுக்குச் சென்று வழிபாட்டில் ஈடுபட்ட இலங்கை சீனத் தூதுவர்



வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர் கோவிலுக்கு வியாழக்கழமை (16) இலங்கைக் கான சீனத் தூதுவர் சென்றுள்ளார்.

குறித்த நிகழ்வானது மிகவும் அரிதான மற்றும் குறிப்பிடத்தக்க விஜயங்களில் ஒன்றாக மாறியுள்ளது.

உலகெங்கிலும் உள்ள யாத்ரீகர்கள் மற்றும் பக்தர்கள் வருடந்தோறும் வருகை தரும் வரலாற்று சிறப்புமிக்க வழிபாட்டுத் தலத்துக்கு, சீனத் தூதரக உயர் அதிகாரி ஒருவர் விஜயம் செய்துள்ளார்.

(16-12-2021)

# மன்னாரிற்கு இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹொங் விஜயம்

வடக்கு மாகாணத்திற்கான விஜயத்தினை மேற்கொண்டுள்ள இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹொங் வியாழக்கிழமை (16) மாலை மன்னார் மாவட்டத்திற்கான விஜயத்தை மேற்கொண்டார்.

யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர்களுக்கு சீனா வினால் சுமார் 20 மில்லியன் ரூபாய் பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ள நிலையில்,மன்னார் மாவட்ட கடற்தொழிலாளர்களுக்கும் குறித்த வாழ்வாதார உதவிகள் பகிர்ந்தளிக்கப்பட்டது.



வியாழக்கிழமை (16) மாலை 4 மணியளவில் மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்திற்கு விஜயம் செய்த இலங்கைக்கான சீனத் தூதுவர் மன்னார் மாவட்ட கடற்தொழிலாளர் களை சந்தித்தார்.



இதன் போது மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட கடற்தொழிலாளர்களுக்கு உணவுப் பொதிகள் மற்றும் வலை தொகுதிகளையும் வழங்கி வைத்தார்.

மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் கே.திலீபன் கலந்து



கொண்டு, இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹொங் இணைந்து கடற்தொழிலாளர்களுக்கு வழங்கி வைத்தனர். இதன் போது மன்னார் மாவட்ட மீனவ அமைப்புகளின் பிரதி நிதிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

**- மன்னார் நிருபர்**



# மனித உரிமை என்ற சொல் மருந்துக்கும் இல்லாத இலங்கை

- தீபச்செல்வன்

எம்முடைய நிலத்தில் நாம் வாழ முடியாது. நம்முடைய அடையாளங்களுடன் நாம் வாழ முடியாது. நாம் நாமாக வாழ முடியாது. நம்முடைய வரலாற்றைப் படிக்க முடியாது. நம்முடைய வரலாற்றை பேச முடியாது. இழந்த உரிமைகளைப் பற்றி பேசவும் அதனைக் கோரவும் முடியாது. உலகமயமாதல் சூழலில் உலகின் ஒவ்வொரு செயற்பாடுகளையும் அவதானிக்கின்ற, அல்லது தட்டிக் கேட்கக்கூடிய காலம் ஒன்றிலேயே நாம் பலவந்தமாக இன்னொரு வாழ்க்கையில் அமிழ்த்தப்படுகிறோம். அப்படியெனில் இலங்கையில் மனித உரிமை என்பது மருந்திற்கும் இல்லாத நாடல்லவா? இந்த அதிர்ச்சி எவரையும் உறுத்தவில்லை என்பதுதான் உலகின் தீராத வியப்பாயிருக்கிறது.

ஒரு மனிதன் தான் பிறந்த மண்ணில் தனக்கான உரிமைகளுடன் வாழ்தலே அடிப்படை உரிமையாகும். ஒரு மனிதன் வாழும் உரிமையைப் பெறுவதும் மற்றவரை வாழ விடும் வகையில் நடப்பதுதான் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பிரகடனத்தின் அடிப்படை அம்சம். அப்படிப் பார்க்கையில், நாம் நமக்கான வாழ்வைத்தான் வாழ்கிறோமா? இலங்கைத் தீவைப் பொறுத்தவரையில், சிங்களப் பேரினவாத அரசின் கீழ் நாம் ஒடுங்கியும் அடங்கியும் வாழ வேண்டும் என ஆள்பவர்கள் நினைக்கின்றனர்., இதுதான் யதார்த்தமான நிலை. நாம் பிறந்த மண்ணில் நமது உரிமைகளுடன் வாழ முடியவில்லை. எமது உரிமைகளுடன் எம்மை வாழவிடாமல் தடுப்பதுவே இங்கே நிகழ்கிறது.

## பேரினவாத மேலாதிக்கம்

மனிதர்களும் எல்லோருமட் சுதந்திரமானவர்கள் என்பதையும் உரிமையிலும் கண்ணியத்திலும் ஒருவருக்கு ஒருவர் சமமானவர்கள் என்பதையே ஐ.நாவின் மனித உரிமைப் பிரகடனம் குறிப்பிடுகிறது. ஒவ்வொரு மனிதனுக்குமான வாழ்தலை வலியுறுத்தும் மனித உரிமைப் பிரகடனம் இனம், மதம், நாடு, மொழி, பால், சாதி போன்ற ஏற்றத்தாழ்வுகளற்ற ரீதியில் மனிதர்கள் அவர்களுரிய சம உரிமையை உடையவர்கள் என்றும் குறிப்பிடுகிறது. ஒடுக்கப்படும் ஈழத் தமிழ் இனத்தின் உரிமைகளுக்கு வழங்கப்பட்ட நீதியைப் பற்றி இன்றைய நாளில் நாம் சிந்திக்க வேண்டியிருக்கிறது.

இலங்கையில் மனித உரிமை மீறல்களின் ஆரம்ப நிலையோ மிகவும் கொடூரமானது. உண்மையில் அதன் அடிப்படையே இன மேலாதிக்கம்தான். சக மனிதர்கள்மீதான ஒடுக்குமுறை பாரிய குற்றமாக உலகில் கருதப்படுகின்றது. மனிதர்களுக்கிடையிலான சமத்துவமின்மை மற்றும் ஒடுக்குமுறை, சிறுவர்கள், பெண்கள் மீதான ஒடுக்குமுறை மற்றும் மீறல்கள் குறித்தெல்லாம் உலகில் நன்றாகப் பேசப்படுகின்றது. மனித உரிமை அவைகளை நடாத்துவதற்கும் வருடாந்தம் அவைகள் பற்றி உரையாற்றுவதற்கும் உலக மனித உரிமைகள் தினத்தை நினைவு கூர்வதற்குமான தேவைகளும் உள்ளடங்களுங்களும் உலகில் தொடர்ந்தும் வாய்த்து வருகின்றன.

ஆனால் மெய்யாகவே அந்த மீறல்களை தடுக்கும் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை உலகில் உள்ள நாடுகளின் அரசுகள்மீது பணிப்பதற்குத்தான் இயலாமல் இருக்கின்றன. இலங்கையில் ஒரு சிறுபான்மை இனம் இன்னொரு பெரும்பான்மை இனத்தால் ஒடுக்கப்படுகின்றது. இது இன உரிமை மீறல். இது இன உரிமை மறுப்பு. ஆனால் இதனை ஒரு மனித உரிமை மீறல் என்பதை ஏற்றுக் கொள்வதற்கே 30 ஆண்டுகள் இந்த உலகிற்கு தேவைப்பட்டுள்ளன என்றால் இந்த உலகம் எவ்வளவு ஆபத்தமானது? பல இலட்சம் மக்களின் உயிர்களை காவு கொடுக்க வேண்டிய நிலைக்கு ஆளாக்கப்பட்டது என்பது எவ்வளவு கொடூரமான விசயம். ஒரு கொடும்போரின் இறுதி நாட்களில் மாத்திரம் ஒன்றரை லட்சம் மக்களை பலிகொடுக்க வேண்டி ஏற்பட்டதே?

## ஐ.நாவும் மனித உரிமைகளும்

ஈழத்தில் மாத்திரமல்ல, ருவாண்டா இனப்படுகொலை, குர்து இனப்படுகொலை, ஆர்மோனியன் இனப்படுகொலை என்று உலகில் நிகழ்ந்தேறிய எல்லா இனப்படுகொலைகளின் போதும் மனித உரிமை என்ற வார்த்தைகள் சாதாரணமாககூட உபயோகிக்கப்பட்டு, அவை தடுத்து நிறுத்தப்படவில்லை. அதனை மனித உரிமை மீறல்களாக ஏற்றுக்கொள்ளவும், இனப்படுகொலைகளாக ஏற்றுக்கொள்ளவும் வெகுகாலம் எடுத்தது. இந்த மக்களின் இனப்படுகொலைக் கல்லறைகள்மீது வெள்ளையும் அடிக்கப்பட்டது. உலகின் அரசியல் தேவைகளின் பிரகாரங்களின்படியே தீர்ப்புக்கள் காலம் தாழ்ந்து கிடைத்தன.

இலங்கை விடயத்தில் ஐ.நா மிகவும் தோற்றுப் போயிருந்தது. இதனை ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள், இந்நாள் செயலாளர் நாயகங்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஐ.நா அதிகாரிகள் இதனை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். காலம் கடந்த இந்த ஒப்புதல்களும் வருத்தங்களும் இந்த மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க தவறியிருக்கின்றன. இராண்டாம் உலகப் போரின் பேரழிவின் பின்னர், உலகின் வல்லரசு நாடுகளின் பாதுகாப்பைத்தான் இத்தகைய தினங்கள் உறுதிப்படுத்த முயலுகின்றனவா? ஒடுக்கப்பட்ட இனங்களும் சிறுபான்மை இனங்களும் உலகின் ஆதிக்க நாடுகளினாலும், அதன் அரசியல் கூட்டு நாடுகளினாலும் உரிமை இழப்புக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

## ஆயுதப் போராட்டத்தின் நியாயம்

இலங்கைத் தீவில் தொடரும் இன உரிமையும் இப்படி ஒரு கணக்கிலேயே தொடர்கின்றது. ஒரு சிறு இனத்தின் பல்லாயிரம் போராளிகள் ஆயுதம் ஏந்தி மாண்டுபோனதின் அரசியல் நியாயத்தின் உண்மையை புரிந்துகொள்வது அவ்வளவு கடினமானதல்ல. உலகெங்கும் அதற்கு பல உதாரணங்கள் இருக்கின்றன. தன்னுடைய மொழியை, தன்னுடைய நிலத்தை, தன்னுடைய அடையாளத்தை, தன் சக மனிதர்களை அழிப்பவர்களுக்கு எதிராக ஆயுதம் தாங்குகிற நிலமை வருகின்றது எனில் அங்கு மனித உரிமை மீறல் என்பது எந்தளவுக்கு முற்றிப் போன பிரச்சினையாக மாறியிருக்கிறது என்பதை வல்லுனர்கள் அறியாதவர்களல்ல. இத்தகைய தினங்களை பிரகடனப்படுத்திய அமைப்புக்களின் கணக்குகளில் ஏன் இவை உள்ளடங்கவில்லை?

ஈழத்தில் மிகக் கொடிய இனப்படுகொலை நடைபெற்று பத்து ஆண்டுகள் ஆகிவிட்டன. போரில் படு பயங்கரமாக ஒரு இன அழிப்பின் அத்தனை நோக்குகளுடனும் கொல்லப்பட்ட மக்கள் குறித்து எந்த நீதியும் இல்லை. மக்கள் கொல்லப்பட்டார்கள் என்பதை ஏற்கவும் அந்த மக்களுக்காக ஒரு விளக்கினை ஏற்றவும், அவர்களுக்காக அழவும்கூட இங்கு உரிமை மறுக்கப்பட்டிருந்தது. இதனைக்கூட இந்த உலகும், இத்தினங்களும் இதுசார் அமைப்புக்களும் கண்டுகொள்ளவில்லை. இறுதியில் ஈழ இனப்படுகொலை குற்றங்களிலிருந்து தப்பிக் கொள்ளும் சர்வதேச நிகழ்ச்சி நிரல்களின் அடிப்படையில் அதிகாரபூர்வமாக ஏற்கப்படாத நிலையில் கள்ள மௌனத்துடன் இணங்கப்பட்டிருக்கிறது.

## இனத்தை இல்லாமல் செய்யும் ஸ்ரீலங்கா

ஒரு மனிதரின் உரிமை குறித்துப் பேசும் சாசனங்கள், ஒரு இனத்தின் பகுதியினரே இல்லாமல் போயிருப்பதை குறித்து பேசாமல் இருப்பது ஏன்? அவர்கள் மிகவும் கொடூரமான வழிகளில் கொல்லப்பட்டமை குறித்தும் காணாமல் ஆக்கபட்டமை குறித்தும் அவர்களின் வாழ் நிலங்கள் பறிக்கப்பட்டமை குறித்தும் பேசாதிருப்பது ஏன்? உலகின் இந்த வஞ்சகங்களிற்கும் இலங்கையில் காணப்படும் இனப் பாரபட்சங்களுக்கும் இடையில் ஒரு வேறுபாடும் இல்லை. ஐக்கிய நாடுகள் சபை போன்றவை இந்த உரிமை மீறல்களை ஊக்குவிக்கின்றன. இத்தனை உலகப் பேரழிவுகளின் பின்னரும் தரவுகளை மதிப்படும் ஒரு சபையாக, ஈற்றில் வருத்தம் தெரிவிக்கும் ஒரு அமைப்பாக ஐ.நா தேவை தானா?

எங்களுக்கு நேர்ந்த இந்தக் கதி உலகில் எந்த இனத்திற்கும் நேரக்கூடாது. உலகில் உள்ள மக்களின் மனித உரிமைகள் மதிக்கப்படவேண்டும். எந்த இனமும் எங்களைப் போல அழிந்துபோகக் கூடாது. ஒடுக்கப்படக்கூடாது. அரசெனப்படுவது மக்களை பாதுகாக்கவும், அந்த மக்களை இறைமையைப் பெற்று ஆள்வதுமாக இருக்க வேண்டும். எங்கள் இழப்பும் சிந்திய குருதியும் உலகில் எவரும் இக் கதி ஏற்படாத நிலையொன்றை வலுவாக்க புதிய மனித உரிமை சாசனம் எழுதப்பட வேண்டும். இத்தகைய தினங்கள் அர்ததமற்றுப் போகாமல் இருக்கவும் மனித உரிமைப் பிரகடனம் வெறுமனே காகித்தில் நினைவு கூரப்படக்கூடாமல் தடுப்பதற்கும் உலகின் அத்தனை ஒடுக்கப்பட்ட, மனித உரிமை மீறல்களுக்கு உள்ளாக்கப்பட்டவர்களின் உரிமைகளும் சுதந்திரமும் உறுதி செய்யப்பட வேண்டும்.








# கனடாவிலிருந்து நாடு திரும்பிய அம்மா

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் - லண்டன்)

**அ**ம்மா வந்தாச்சு.....அம்மா வந்தாச்சு.....

யாராக இருந்தாலும் சரி அம்மாவை மீண்டும் பார்ப்பதென்றால் அது அலாதியான மகிழ்ச்சியளிக்கும். என்னதான் ஸ்கைப் அல்லது வாட்ஸப் அல்லது புகைப்படத்தில் பார்த்தாலும், அம்மாவை நேரில் பார்த்து ஆசி பெறுவதற்கு ஈடு இணை கிடையாது.

இப்படித்தான் கடந்த நவம்பர் மாதம் மத்தியில் அம்மா வருகிறார் என்ற பரபரப்பு மக்களிடம் பற்றிக் கொண்டது.

தமிழில் பிரபலமான "பாமா விஜயம்" என்ற நகைச்சுவை திரைப்படத்தில் எளிமையான முறையில் அண்டை வீட்டில் வாழ்ந்து வரும் திரைப்பட நடிகை கூட்டுக்குடும்பமாக வசிக்கும் தமது வீட்டிற்கு வரும் போது, அந்த வீட்டார் காட்டும் பரபரப்பையும், எதிர்பார்ப்பையும் அற்புதமாகக் காட்டியிருப்பார் காலஞ்சென்ற இயக்குநர் கே.பாலசந்தர். அந்த காட்சி தொடர்பான வசனம் மிகவும் பேசப்பட்டது.

"பாமா தயாராகிட்டாங்க......பாமா படியிறங்கியாச்சு..........பாமா காரில் ஏறிட்டங்க.......பாமா புறப்பட்டாச்சு....." இப்படி நொடிக்கு நொடி அந்தக் காட்சியை நேர்முக வர்ணனை போல் காட்சிப்படுத்தியிருப்பார் பாலசந்தர். பார்ப்பவர்களை எதிர்பார்ப்பின் உச்சத்திற்குக் கொண்டு செல்லும் காட்சியாக அது அமைந்திருந்தது. ஒரு குடும்பத்தில் இருந்த சிலரின் எதிர்பார்ப்பே இப்படியிருந்தது என்றால், ஒரு நாட்டில் இந்த பரபரப்பு எப்படியிருந்திருக்கும் என்று எண்ணிப்பார்க்கும் போது அதன் பிரம்மாண்டம் புரியும்.

ஒரு வழியாக மிக நீ..............................................ண்ட காலத்திற்குப் பிறகு கனடாவிலிருந்து அம்மா வந்தார். ஊரே விழாக்கோலம், ஆண்டி முதல் அரசன் வரை அனைவருக்கும் ஆனந்தம். அம்மாவைக் காண அவர் வரும் வழியெல்லாம் மக்கள் கூட்டம். அம்மவும் கனடாவிலிருந்து வந்த விமானத்தில் இறங்கிய செய்தியை அறிந்ததும் "போடுறா வெடியை" என்கிற கோஷம் விண்ணைப் பிளந்தது.




ஒன்று இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அம்மா நாடு திரும்பவில்லை. இனப்பிரச்சனை மற்றும் போர்ச்சூழல் காரணமாகவோ அம்மா கனடா செல்லவில்லை. அவர் வலிந்து கடத்திச் செல்லப்பட்டார். இது நடந்தது இன்று நேற்றல்ல நூறாண்டுகளுக்கு முன்னர். அப்போது பிரிட்டிஷ் ஆட்சிக் காலம். கண்டது, கேட்டது, கிடைத்தது என்று அனைத்தையும் சுருட்டிக் கொண்டு தமது நாட்டுக்கு கடத்திக் கொண்டு போவது வழக்கமான ஒன்றாக இருந்தது. அப்படித்தான் அன்னபூரணியும் கடத்தப்பட்டாள்.

அம்மா எப்படி, எப்போது கனடாவிற்குச் சென்றார், அதற்கு யார் காரணம் என்பது சற்று தெளிவில்லாமல் உள்ளது, ஆனால் அன்னபூரணி அம்மா குறைந்தது 100 ஆண்டுகளுக்கு முன்னர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டிருக்கலாம். பின்னர் கனடாவுக்குச் சென்றிருக்கலாம் என்பது பொதுவான புரிதல்.

இந்த அன்னபூரணி அம்மா இந்தியாவிலுள்ள அனைவருக்கும் காலங்காலமாக உணவு வழங்கி வருவதாக ஒரு ஐதீகம். அவரது பூர்வீக உறைவிடம் காசி அல்லது வாரணாசி. இப்போது உங்களுக்கு ஓரளவுக்குப் புரிந்திருக்கும் அன்னபூரணி அம்மா யாரென்று! அவர் காசியிலிருந்த ஆலயத்தில் மூர்த்தியாக இருந்து அனைவருக்கும் அமுது படைத்து ஆசீர்வதித்துக் கொண்டிருந்தார். ஆனால் கடந்த நூற்றாண்டில் ஆரம்பத்தில் அடிமைப்பட்டிருந்த இந்தியாவிலிருந்து அன்னபூரணியின் சிலையைக் காசியிலிருந்து களவாடப்பட்டது. இது பற்றி சிறிது காலம் பேசப்பட்டாலும், அது மெல்ல மெல்ல அடங்கிப் போய் அன்னபூரணி நினைவில் மட்டுமே இருக்கும் நிலை ஏற்பட்டது.

கல்லால் செய்யப்பட்ட அந்தச் சிலை சிறியது என்றாலும் காசி நகரத்துடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டது. கோடிக் கணக்கான மக்களின் உணர்வுகளுடன் இரண்டறக் கலந்தது. ஆங்கிலேய ஆட்சியாளர்கள் நாட்டிலிருந்து ஏராளமான மதிப்பு வாய்ந்த கலைப் படைப்புகளை தொடர்ச்சியாகக் களவாடி அதை பிரிட்டனுக்கு எடுத்துச் சென்று தனியாருக்கோ அல்லது அருங்காட்சியகங்களுக்கோ விற்று ஏராளமான பணம் சம்பாதித்தனர்.



அப்படி எடுத்துச் செல்லப்பட்ட பொருட்களில் ஒன்றான அன்னபூரணி மாதாவின் சிலை கனடாவின் ரெஜினா பல்கலைக்கழகத்திலுள்ள மெக்கென்ஸி கலைக் கூடத்தில் இருப்பதாக ஆர்வலர்கள் கண்டறிந்தனர்.

இதை நாட்டு மக்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் வானொலி நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றும் போது பிரதமர் நரேந்திர மோதி உறுதிப்படுத்தி அதை நாட்டிற்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்திருந்தார்.



பிரதமர் இதை அறிவித்தாலும், அது தொடர்பில் கடுமையான ஆய்வுகளையும் முன்னெடுப்புகளையும் செய்தவர்களின் இந்தியா பிரைட் என்கிற தன்னார்வ அமைப்பைச் சேர்ந்த விஜயகுமாருக்கு பெரும்பங்கு உண்டு. சிங்கப்பூரில் வசிக்கும் அவர், களவாடப்பட்ட இந்திய கலைப் பொருட்களை மீண்டும் நாட்டிற்குள் கொண்டுவருவதில் அளப்பரிய பணியைச் செய்துள்ளார். ஒரு சிலை அல்லது கலைப் பொரு-ளை கடத்துவதை விட அதை மீண்டும் நாட்டிற்கு கொண்டுவருவது மிகவும் கடினமான ஒன்றாகும். எனினும் விஜயகுமார் போன்ற ஆர்வலர்கள் இவை நாடு திரும்ப வேண்டும் என்பதில் முனைப்பாகச் செயல்படுகின்றனர். அவரது இந்தியா பிரைட் திட்டத்தின் மூலம் இதுவரை அமெரிக்காவிலிருந்து மட்டுமே 157 கலைப் பொருட்களை மீட்டுள்ளார்.

அன்னபூரணி தேவியின் சிலை நாடு திரும்பிய விஷயத்தில் அவர்கள் இந்தியத் தொல்லியல் அமைப்பிற்கு உறுதுணையாக இருந்துள்ளனர். எனினும் கனடிய அருங்காட்சியகங்கள் தம்மிடமுள்ள அருங்கலைப் பொருட்கள் எப்படி வாங்கப்பட்டன என்பதற்கான சான்றுகளை நீண்ட காலமாக வெளிப்படையாக வெளியிடவில்லை. இதில் "கடத்தல் மன்னன்" என்று அறியப்பட்டு இப்போது கம்பி எண்ணிக் கொண்டிருக்கும் சுபாஷ் கபூரிடமிருந்து வாங்கப்பட்டவையும், சந்தேகத்திற்குரிய வகையில் இதர வழிகளில் வந்தவை குறித்து பலர் மௌனிக-ளாக இருக்கின்றனர். இதில் கடந்த 2012ல் பிரபலமான பம்பர் டெவலப்மெண்ட் கார்பரே'ன், கலஹாரியிலுள்ள கிளென்போ அருங்காட்சியகத்திற்கு அளித்த 80 இந்திய உருவச் சிலைகளும் அடங்கும். இதில் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது என்னவென்றால் தமிழ்நாட்டில் பாதூரிலிருந்து திருடப்பட்ட நடராஜர் சிலையை வாங்க முயன்றவர்கள் இந்த பம்பர் டெவலப்மெண்ட் கார்பரேஷன். ஆனால் 1980 இல் லண்டன் நீதிமன்றம் ஒன்றில் இந்தியா தொடர்ந்த வழக்கில் இந்தியா வெற்றி பெற்றாலும், அந்த நிறுவனம் விற்க முயன்ற மற்ற கலைப் பொருட்கள் குறித்து இந்திய அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்கிற குற்றச்சாட்டு இன்றளவும் உள்ளது. எனினும் 2014 ஆம் ஆண்டு அந்த நிறுவனம் தம்மிடம் இருந்த இதர கலைப் பொருட்களை விற்க முயன்றது. ஆனால் சட்டரீதியாக உரிய ஆவணங்கள் இல்லாததால் அந்த முயற்சி தோல்வியடைந்ததோடு 2015 ஆம் ஆண்டு அந்த நிறுவனமே திவாலானது. ஆனால் வருத்தமளிக்கும் வகையில் அதன் பிறகு இந்தியா களவாடப்பட்ட கலைப் பொருட்களை மீண்டும் நாட்டிற்கு கொண்டுவருவதில் ஆர்வம் காட்டவில்லை.

அதேவேளை இரண்டு ஆண்டுகளாக அம்மா வருகிறார் என்கிற பரபரப்பு இந்தியா முழுவதும் குறிப்பாக வட இந்தியாவில் தொற்றிக் கொண்டது. அன்னபூரணி அம்மாவை வரவேற்க உத்தரப்பிரதேச மாநில அரசு தடபுடலான ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தது.



ஒருவழியாகக் கடந்த மாதம் அன்னபூரணி தேவியில் சிலை டெல்லி வந்தடைந்தது. அங்கிருந்து 800 கி.மீ பயணித்து அதன் பூர்வீக இடமான காசி விஸ்வநாதர் ஆலயத்தை வந்து சேர்ந்தது.

இந்த சிலை ஒன்றும் அவ்வளவு சுலபமாக இந்தியா வந்துவிடவில்லை. வின்னிபெக் நகரிலுள்ள திவ்யா மெஹ்ரா என்ற கலைஞர் 2019 ஆம் ஆண்டு தனது ஆராய்ச்சியின் போது உணவளிக்கும் பாத்திரம் மற்றும் கரண்டு ஆகியவற்றுடன் சிலை ஒன்றை காண நேர்ந்தது. பின்னர் செய்யப்பட்ட ஆய்வில் அது 1913 ஆம் ஆண்டு காசியில் கங்கைக்கரையிலிருந்த கோவில் ஒன்றிலிருந்து நார்மன் மெக்கென்சி என்ற வழக்கறிஞர் எடுத்து வந்தார் என்று கண்டறிந்தார். அவருக்காக அதை வேறொருவர் களவா-டியதாகவும் தெரியவந்தது. பின்னர் அண்மைக் காலத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளை அடுத்து அந்த திருவுருவச் சிலையை இந்தியாவிடம் கையளிக்க மெக்கென்ஸி அருங்காட்சியகத்தின் இடைக்கால தலைமை செயல் அதிகாரி ஜான் ஹாம்டன் உடன்பட்டார். கனேடிய கலாச்சார அமைச்சுடன் இந்திய அரசு தொடர்ந்து நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் காரணமாக ஒரு-வழியாக அன்னபூரணி அம்மா இந்தியா வந்து சேர்ந்தார்.

எனினும் இந்தியாவிலிருந்து திருடப்பட்ட ஏராளமான கலைப் பொருட்கள் இன்னும் உலகின் பல அருங்காட்சியகங்கள் மற்றும் தனியார் வசம் உள்ளன.



# குருத்தோடு அழிக்கும் குற்றங்கள்

**வே.பாலகிருஷ்ணன், இ.கா.ப**
**(மண்டலக் காவல்துறைத் தலைவர், மத்திய மண்டலம், திருச்சி)**

**அ**ம்மா என்று ஆறு வயது பூரணி (பெயர் மாற்றப்பட்டுள்ளது) காக்கி உடை அணிந்த காவலர் பெண்மணியின் கைகளை பிடித்த போது, அந்தக் குழந்தையை வாரி அணைத்த ஒரு உணர்ச்சிகரமான நிகழ்வு மயிலாடுதுறை மாவட்டத்தில் நான் பொதுமக்கள் சந்திப்பிற்க்குச் சென்றபோது நடந்தது இன்றும் கண்களை பனிக்க வைக்கிறது. "காவல் கவசங்கள்" என்றத் திட்டத்தில் 834 கோவிட்-19ல் பெற்றோர்களை இழந்த குழந்தைகளை காவல்துறை தத்தெடுத்து அவர்களுடைய பாதுகாப்பை உறுதி செய்து வருவது காவேரி டெல்டா மாவட்டங்களில் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று.

ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமைகளில் அரை மணி நேரம் முதல் ஒரு மணி நேரம் வரை கோவிட்-19ல் பெற்றோர்களை இழந்த குழந்தைகளிடம் தன்னார்வ தொண்டு உள்ளம் கொண்ட காவலர்கள் நேரில் சென்றோ அல்லது போன் மூலமாகவோ அவர்களிடம் பேசி அவர்களுடைய தன்னம்பிக்கை வளர்ப்பதற்கும், பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், வழிகாட்டுதல் செய்வதற்கும் உதவியாக இருக்கிறார்கள். முக்கியமாக அவர்களை குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்முறை குற்றங்களிலிருந்து பாதுகாப்பதை முக்கிய இலக்காகக் கொண்டு நாங்கள் செயல்பட்டு வருகிறோம்.

குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள், குறிப்பாகப் பாலியல் குற்றங்கள் கொடூரமான குற்றங்களில் ஒன்றாக கருதப்படுகிறது. காரணம் பசுமரத்தாணிபோல இளம் வயதில் நடைபெறும் சம்பவங்கள், உடற் பூர்வமாகவும், உணர்வுபூர்வமாகவும் பெரிய பாதிப்பை வாழ்நாள் முழுவதும் ஏற்படுத்தும். குழந்தைகளின் மனதில் ஆறாத தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அந்தக் குழந்தை வளர்ந்து எவ்வளவு உயரிய நிலையை அடைந்தாலும் ஆழ் மனதில் அது ஒரு அழியாத வடுவாக இருக்கும் என்றால் சந்தேகமில்லை.



ஆகவே, குழந்தைகளுக்கு எதிரானப் பாலியல் குற்றங்களை வரும்முன் தடுப்பது, அக்குற்றங்கள் நடைபெறுவதற்கு அடிப்படையாக இருக்கும் சாதகமான சூழலை சரிப்படுத்துதல், கண்காணிப்பு இல்லாமல் இருக்கும் குழந்தைகளுக்குப் பாதுகாப்பு கொடுத்தல், குற்றம் புரியும் சூழலில் இருக்கும் குழுவினரைச் கண்காணிப்பிற்கு உட்படுத்துதலும், குற்றங்கள் நடந்து விட்டால் முறையாகப் புலன்விசாரணை செய்து குற்றவாளிகளுக்குத் தண்டனைப் பெற்றுக்கொடுப்பதும் என நான்கு கோணங்களில் நடவடிக்கை எடுப்பது அவசியம். அதிலும் முக்கியமாக அந்த குற்றங்கள் நடக்காமல் இருக்க எடுக்கப்படும் தடுப்பு நடவடிக்கைகள் முக்கியத்துவம் வாய்ந்தவை.

"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு"

என்ற வகையில் இந்தக் குற்றங்களை முன்னதாகவே தடுக்காவிட்டால் பாதிப்பு ஏற்பட்ட பின்பு குற்றவாளி மீது எவ்வளவு பெரிய நடவடிக்கை எடுத்தாலும் பாதிக்கப்பட்ட குழந்தையின் நிலை பாதிக்கப்பட்ட நிலையிலிருந்து ஓரளவே மீள முடியும். ஆக, குற்றத்தடுப்பு முறைகளைப் பல்வேறு கோணங்களில் இருந்து நடைமுறை படுத்துவது மிக அவசியம். பெரும்பாலான குழந்தைகள் பள்ளிக்கு செல்வதால் பள்ளியை மையமாக வைத்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. இதுத் தவிர பள்ளிக்குச் செல்லாமல் இடைநின்ற குழந்தைகள், வேலைக்குச் செல்லும் குழந்தைகள், தெருவோரக் குழந்தைகள், பெற்றோர்களை இழந்த குழந்தைகள், போதை வஸ்துக்களுக்கு அடிமையான பெற்றோர்களின் கட்டுப்பாட்டில் உள்ள குழந்தைகள் என அனைத்துத் தரப்பில் உள்ள குழந்தைகளுக்கும் பாலியல் துன்புறுத்தல் பற்றிய அறிவையும் தகவல்களையும் பரப்புதல் எல்லாத் திட்டங்களின் மையக்கருத்தாக இருக்கிறது.

பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் சில நேரம் காதல் வயப்பட்டு 18 வயது நிரம்புவதற்கு முன்பே ஓடிச்சென்று திருமணம் செய்து கொள்வதோ அல்லது சேர்ந்து வாழ்வதோ இந்தியச் சட்டத்திற்குப் புறம்பானது ஆகும். மனதளவில் முதிர்ச்சிப் பெறாத அந்தக்குழந்தைகள் வாழ்க்கையைக் கையாள முடியாமல் தற்கொலை செய்யும் பரிதாப நிலையும் ஏற்படுகிறது.



எதுவாக இருந்தாலும் சோதனை செய்து பார்த்து விடலாம் என்ற ஒரு எண்ணமும், களவும் கற்று மற என்பது போல அனைத்து வகைச் செயல்களையும் அனுபவித்து பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற பரபரப்பும் அந்த வயதில் உந்துதலை ஏற்படுத்தி சரியோ தவறோ பின்பு பார்த்துக் கொள்ளலாம் என்ற அடிப்படையில் செயல்படுவதால் சிலநேரம் பெரிய தவறுகள் நடைபெறுகின்றன.

இந்த உறவில் ஆண்கள் போக்ஸோ குற்றவாளிகளாகவும், பெண்குழந்தைகள் நீங்காத வடுவை மனதில் ஏந்தியும் வாழ்க்கையை தொடர்கின்றனர். மேலும் போக்ஸோ குற்றங்களை பொறுத்தவரைக்கும் பெரும்பாலான நேரங்களில் அருகிலுள்ள நபர்களும், குடும்ப உறுப்பினர்களும் குற்றவாளிகளாகும் சூழலில், பெற்றோர்கள் குழந்தைகளை யாருடைய பாதுகாப்பில் விட்டுச் செல்வது என்ற குழப்பமும் நம்பிக்கையற்ற தன்மையும் ஏற்படுகிறது. இளம் வயதில் திருமணம் செய்யும் தம்பதிகள் வாழ்க்கையில் வெற்றி பெற பொருளாதார காரணங்களுக்காக வேலைக்கு செல்லும் போதுக் குழந்தைகள் பாதுகாப்பற்ற சூழலில் இருக்கின்றன. அவர்களைப் பாதுகாக்க ஒவ்வொரு காவல் நிலையத்திலும் உள்ளப் பெண்கள் மற்றும் குழந்தைகள் உதவி மையம் தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்துகின்றனர்.



கிராம அளவில் தாய் கிராமங்களில், (Mother Villages) கிராம சைபர் குழுக்கள் அமைக்கப்பட்டு இந்தக் குழுக்களில் கணினி மூலமாகவும், இன்டர்நெட், அலைபேசி செயலிகள் மூலமாகவும், சமூக வளைதளம் மூலமாகவும் நடக்கக் கூடிய குற்றங்கள் பற்றிய விழிப்புணர்வை முக்கியமாக குழந்தைகள் மற்றும் பெண்கள் இந்த குற்றங்களில் இருந்து எப்படி பாதுகாத்து கொள்வது என்ற அறிவுரை வழங்கப்படுகிறது. டெல்டா மாவட்டங்களில் 3000 குழுக்கள் செயல்படுகின்றன.

கிராமக் குழந்தைகள் பாதுகாப்பு குழு போக்ஸோ சட்டத்தின் கீழ் இன்றியமையாத ஒன்றாக இருந்த போதும் அவற்றின் கூட்டங்கள் முறையாக நடைபெறுவதற்கு வழிவகுக்கும் வகையில், காவல்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. அந்தக் கூட்டங்களில் காவல் உயரதிகாரிகள், இதர உறுப்பினர்களுடன் சேர்ந்து கிராமங்களில் உள்ள பெற்றோர்கள் மற்றும் குழந்தைகளுக்கு பாலியல் குற்றங்களை களைவதற்கான வழிமுறைகள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துகின்றனர்.

பின்குறிப்பு:
போக்ஸோ (POCSO) Protection of children from sexual offences Act, 2012.

கொடிய கோவிட் நோயால் பெற்றோர்களை இழந்த குழந்தைகள் அனைவரையும் பட்டியலிட்டு அவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டு தன்னார்வம் கொண்ட காவலர்கள் தொண்டு அடிப்படையில் வாரம் ஒரு முறை அவர்களின் இல்லங்களுக்கு சென்று அவர்களின் பாதுகாப்பு தொடர்பான குறைகளை கேட்டறிந்து அவர்களுக்கு வழிகாட்டியாகவும், ரோல் மாடலாகவும், காவலர்கள் விளங்க "காவல் கவசங்கள்" என்ற பெயரில் நடவடிக்கை எடுக்கப்பட்டு அந்த குழந்தைகளை நேரில் சென்று சந்தித்து அவர்களுக்கு பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்தி வருகின்றனர்.

பள்ளி மற்றும் கல்லூரிகளில் சைபர் குழுக்கள் அமைக்கப்பட்டு அவர்களுக்கு இணையதள பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்துவதோடு சட்டப்படி திருமண வயது அடையாதவர்கள் திருமணம் செய்து கொள்வது தடுப்பதற்கும் இது பயன்படும். கல்லூரிகளில் பெண் மாணவர்களுக்குத் தற்காப்புப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.



கடந்த நவம்பர் மாதத்தில் இரண்டு வாரங்களுக்கு காவல்துறையினரும், தன்னார்வத் தொண்டர்களும் இணைந்து வீடுவீடாக சென்று குழந்தைகளுக்கு எதிரானப் பாலியல் குற்றங்களை களைவதற்கான குறைந்தபட்சத் திட்டம் பற்றிய விழிப்புணர்வைக் குழந்தைகளுக்கும், பெற்றோர்களுக்கும் ஏற்படுத்தி 14 நாட்களில் மட்டும் 2 லட்சம் குடும்பங்களைத் தொடர்பு கொண்டோம்.

"குழந்தையும், தெய்வமும் குணத்தால் ஒன்று
அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும்"


குழந்தையும், தெய்வமும் ஒன்றாகச் சித்தரிக்கப்பட்டாலும் குற்றங்களால் பாதிக்கப்படும்போது முக்கியமாக பாலியல் குற்றங்களில் பாதிக்கப்படும்போது தெய்வங்களைப் போலக் குழந்தைகள் நின்று கொல்வதில்லை, குற்றத்தால் ஏற்படும் ஆறாத வடு நித்தம் நித்தம் அவர்களைத்தான் கொல்லும். ஆனால் காக்கி அணிந்தக் காவலர்களாகிய நாங்கள் குற்றவாளிகளைக் கூண்டில் நிறுத்தி தண்டனைப் பெற்றுத் தரும் தெய்வப் பணியைச் செய்வோம்.



குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்களை பற்றி பேசும்பொழுது சமீபத்தில் தமிழக முதல்வர் திரு மு.க.ஸ்டாலின் அவர்கள் "அப்பாவாக நான் இருக்கிறேன்" என்று சொன்ன ஒற்றை சொல் இன்று தமிழக குழந்தைகளுக்கு ஒரு பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்தி இருக்கிறது. அந்த உணர்வை பலப்படுத்துவதும், உறுதிப்படுத்துவதும் காவல்துறையின் கடமை.

# வடக்குக்கு வந்த சீனத்தூதுவர்

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**



**கொ**ழும்பில் உள்ள சீனத் தூதுவர் கீ சென் ஹொங் தலைமையிலான ஒரு குழு கடந்த 15 ஆம் திகதி அதாவது புதன்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தது. வடக்கில் இரண்டு நாட்கள் தங்கியிருந்த இக்குழு யாழ்ப்பாணத்திலும் மன்னாரிலும் மீனவர்களுக்கு நிவாரணப் பொதிகளையும் மீன்பிடி வலைகளையும் வழங்கியது. அதோடு வடக்கில் உள்ள மாவட்டங்களுக்கு நீர் சுத்திகரிப்பு உபகரணங்கள் உட்பட வேறு பல உதவிகளையும் வழங்கியுள்ளது. பருத்தித்துறை முனை, யாழ். பொது நூலகம், கலாசார மண்டபம் போன்றவற்றிற்கு வருகை தந்த இக்குழுவினர் வட மாகாண ஆளுநரை சந்தித்துடன் அளுநர் அலுவலக வளாகத்தில் உள்ள தொல்பொருள் முக்கியத்துவம் மிக்க கட்டங்களையும் பார்வையிட்டனர். பருத்தித்துறை முனையினை சீன தூதுவர் பார்வையிட்ட போது அக்காட்சி ரோன் கமரா மூலம் பதிவுசெய்யப்பட்டது. யாழ். பொது நூலகத்திற்கு வருகை தந்த சீனத் தூதுவர் எதிர்வரும் காலங்களில் யாழ்ப்பாணத்திற்கும் சீனாவிற்கும் இடையில் தொடர்புகளை பேண விரும்புவதாகத் தெரிவித்தார்.

மேலும், ஊடகங்களுக்கு கருத்துக்கூறிய சீனத் தூதுவர்.....தமது பயணத்தை நீண்ட நாட்களுக்கு முதலே திட்டமிட்டிருந்ததாகவும், பெருந்தொற்று நோய் காரணமாக அது சாத்தியமாகவில்லை என்றும் கூறினார்... "எமது உறவை மேம்படுத்துவதற்காக இலங்கையின் ஏனைய இடங்களுக்கும் எதிர்காலத்தில் செல்வேன். இந்தியாவும் சீனாவும் சிறந்த நண்பர்கள், சிறந்த பங்காளர்கள், சிறந்த அயலவர்கள். சீனாவும் இந்தியாவும் இலங்கையுடன் சிறந்த நட்பை பேண முடியும் என நினைக்கின்றேன். இரு தரப்பினராலும் தமிழ் சமூகத்தினருக்கு அனுகூலங்கள் கிட்டமுடியும்" என்றும் தெரிவித்துள்ளார்.

கொழும்புக்கான சீனத் தூதரகம் தமிழர்களுக்கு நிவாரணம் வழங்குவது என்பது இதுதான் முதல் தடவை. இந்த நிவாரண அரசியல் முன்னெடுக்கப்பட்ட காலகட்டத்தை சற்று ஆழமாகப் பார்க்கலாம். முதலாவதாக இக்காலகட்டமானது ஈழத் தமிழ் மீனவர்கள் இந்திய தமிழ் மீனவர்களால் பாதிக்கப்படுவதாக குற்றச்சாட்டுக்கள் அதிகமாக எழுந்திருக்கும் ஒரு காலகட்டமாகும். அண்மையில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு சார்பாக சுமந்திரன் தலைமையிலான ஒரு குழு கடல் வழிப் போராட்டம் ஒன்றையும் நடத்தியது. இந்தப் போராட்டம் தொடர்பாக பல்வேறு விமர்சனங்களும் எழுந்தன. இவ்வாறு இந்திய றோளர்களால் ஈழத் தமிழ் மீனவர்கள் பாதிக்கப்பட்டிருக்கும் ஒரு பின்னணியில் அந்த மீனவர்களுக்கு சீனா நிவாரணம் வழங்குகிறது.

இரண்டாவதாக இக்காலகட்டத்தில் கொழும்பிலுள்ள சீன தூதரகம் வெளியிட்ட ஒரு அறிக்கையை நாம் உற்றுக் கவனிக்க வேண்டும். இம்மாத தொடக்கத்தில் கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் தனது டுவிட்டர் பக்கத்தில் ஒரு செய்தியை பிரசுரித்திருந்தது. அச்செய்தியின்படி யாழ்ப்பாணத்தில் உள்ள மூன்று தீவுகளிலும் சீனா நிர்மாணிக்க திட்டமிட்டிருந்த மீளப் புதுப்பிக்கும் மின்சக்தி திட்டங்களில் இருந்து பின்வாங்குவதாக சீனா அறிவித்திருந்தது. மூன்றாவது தரப்பு ஒன்றின் பாதுகாப்பு தொடர்பான கரிசனைகளை கவனத்தில் எடுத்து அப்படி ஒரு முடிவு எடுக்கப்பட்டதாக சீன தூதரகம் தெரிவித்திருந்தது. அந்த மூன்றாவது தரப்பு இந்தியாதான் என்பது எல்லாருக்கும் வெளிப்படையாக தெரியும். சீனா அவ்வாறு யாழ்ப்பாணத் தீவுகள் மூன்றில் மீள புதுப்பிக்கும் எரிசக்தி திட்டங்களை நிர்மானிக்குமாக இருந்தால் இந்தியாவின் தெற்கு வாசலிலிருந்து ஐம்பதுக்கும் குறையாத கிலோமீட்டர் தொலைவில் சீனா வந்துவிடும் என்ற அச்சம் கலந்த ஊகங்கள் எழுந்தன.

தமிழக யூடியூபர்கள் அவ்வாறான அச்சங்களைப் பெரிதாக்கி காட்டிக்கொண்டிருந்த ஒரு பின்னணியில், இந்தியா இரண்டு நகர்வுகளை முன்னெடுத்ததாக செய்திகள் வெளிவந்தன. முதலாவது நகர்வு தூத்துக்குடி துறைமுகத்தில் இந்திய நீர்மூழ்கி கப்பல்களில் ஒன்று வெளிப்படையாக காணப்பட்டது. இது யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் காலைக்கதிர் பத்திரிகையில் செய்தியாக பிரசுரிக்கப்பட்டிருந்தது. இரண்டாவது இந்தியாவின் மிராஜ் ரக போர் விமானங்கள் ராமேஸ்வரம் கடல் பகுதியில் தாழப் பறந்ததோடு நெடுந்தீவு வான் பரப்புக்குள்ளும் நுழைந்ததாக ஒரு செய்தி வெளி வந்தது. இவ்வாறான செய்திகளின் பின்னணியில் கடந்த டிசம்பர் மாதம் முதலாம் திகதி சீன தூதரகம் அவ்வாறு ஒரு அறிவிப்பை வெளியிட்டிருந்தது.

இவ்வாறு சீனா பின்வாங்கிய அந்த மின்சக்தி திட்டத்தை இந்தியா பொறுப்பேற்க வேண்டும் என்று மனோ கணேசனை போன்றவர்கள் கேட்டிருக்கிறார்கள். ஆனால் இந்தியா இதுதொடர்பாக உத்தியோகபூர்வமாக எதையும் இதுவரை தெரிவிக்கவில்லை. இப்படிப்பட்ட ஒரு சூழலில்தான் சீனா யாழ்ப்பாணத்துக்கு நிவாரணப் பொதி கொண்டுவந்திருக்கிறது அதுவும் யாருக்கு என்று பார்த்தால் இந்திய மீனவர்களால் பாதிக்கப்படும் யாழ்ப்பாணத்து மீனவர்களுக்கு.

மூன்றாவதாக தமிழ் தேசிய கூட்டமைப்பு முன்னெடுக்கும் சில ராஜ்ய நகர்வுகளின் பின்னணியிலும் இக்காலகட்டத்துக்கு ஒரு முக்கியத்துவம் உண்டு. குறிப்பாக கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் இரண்டு ஏனைய கட்சிகளோடு இணைந்து 13வது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்த வேண்டும் என்று இந்தியாவை கேட்கின்றன. ஆனால் அதற்கு கூட்டமைப்பின் பிரதான கட்சியான தமிழரசுக் கட்சி ஒத்துழைக்கவில்லை. இவ்வாறான ஒரு பின்னணியில் கொழும்பிலுள்ள சீன தூதரகம் கூட்டமைப்பை சந்திக்க விரும்பியதாக ஒரு தகவலும் வெளியாகியது. ஆனால் சந்திப்பு நடக்கவில்லை. அதுபோலவே கூட்டமைப்பின் தூதுக் குழு ஒன்றை இந்தியாவுக்கு வருமாறு புதுடில்லி அழைப்பு விடுத்தது. அதையும் தமிழரசுக் கட்சி ஒத்தி வைத்திருக்கிறது.

அதேசமயம் இந்தியாவின் அழைப்பை ஒத்தி வைத்த கையோடு ரெலோவின் அழைப்பை ஏற்று சம்பந்தர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கடந்த கூட்டத்தில் பங்கு பற்றியிருக்கிறார். இருபத்தியோராம் திகதி இந்தியாவுக்கு அனுப்பப்பட வேண்டிய இறுதி ஆவணம் தயாரிக்கப்பட்டு விடும் என்று கூறப்படுகிறது. எனவே இதுவிடயத்தில் இந்தியாவை அனுசரித்துப் போகவேண்டும் என்ற நோக்கத்தோடு சம்பந்தர் ரெலோவின் முயற்சிகளுக்கு தலைமை தாங்கும் முடிவை மிகவும் பிந்தி அதுவும் டெல்லியின் அழைப்பை நிராகரித்த பின் எடுத்திருக்கிறார்.

டெல்லியின் அழைப்பை தமிழரசுக் கட்சி ஏன் அப்படி ஒத்திவைத்தது என்பது சம்பந்தர் சுமந்திரன் தவிர கட்சியின் ஏனைய முக்கியஸ்தர்களுக்கு தெரியாது. தமிழ் மக்கள் தொடர்பான முக்கிய வெளியுறவுக் கொள்கை முடிவுகள் எப்படி எடுக்கப்படுகின்றன? யாரால் எடுக்கப்படுகின்றன? அதற்குரிய துறைசார் கட்டமைப்பு ஏதாவது உண்டா? என்பவை பற்றி கட்சி முக்கியஸ்தர்களுக்கே தெரியாது. ஆனால் சம்பந்தர் இந்தியாவை உள்ளே கொண்டு வருவதற்கு தயங்குகிறார் என்று மட்டும் தெரிகிறது. அதேசமயம் சுமந்திரன் அமெரிக்காவின் மூலம் இந்தியாவை கையாளலாம் என்றும் கருதுவதாகத் தெரிகிறது.

இவ்வாறு கூட்டமைப்பு சீனத் தூதரகத்தின் அழைப்பை நிராகரித்திருக்கின்ற ஒரு காலச் சூழலில், தமிழரசுக் கட்சி இந்திய மத்திய அரசின் அழைப்பை ஒத்தி வைத்திருக்கிற ஒரு காலச் சூழலில், சீனத் தூதரகம் யாழ்ப்பாணத்துக்கு நிவாரணப் பொதியோடு வந்திருக்கிறது.

இதில் சீனா மிகவும் நுட்பமாக காய்களை நகர்த்துகிறது. தமிழ் மக்களுக்கு சீனா மீளப் புதுப்பிக்கும் மின்சக்தியை வழங்க முன்வந்த போதும் அதை இந்தியா தடுத்திருக்கிறது. அதற்கு பின்னரும் சீனா தமிழ் மக்களுக்கு இந்திய தரப்பால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரணம் வழங்க முன்வந்திருக்கிறது என்ற ஒரு செய்தியை சீனா இந்தியாவுக்கும் தமிழ் மக்களுக்கும் உணர்த்த விரும்புகிறது.

இவ்வாறு சீனா நிவாரணப் பொதியுடன் வருவதை தமிழ் மக்கள் எப்படி அணுக வேண்டும்? நிவாரணம் தரும் ஒரு நாட்டை தமிழ் மக்கள் நிராகரிக்க தேவையில்லை. ஆனால் அது வெறும் நிவாரணம் மட்டுமல்ல. அது ஒரு ராஜ்ஜிய நகர்வு அல்லது தூண்டில் என்று பார்த்தால் அந்த ராஜ்ஜிய நகர்வு தமிழ் மக்களுக்கு ஒரு விடயத்தை உணர்த்துகிறது. சீனா தமிழ் மக்களை ஏதோ ஒரு விதத்தில் அணுக முயற்சிக்கிறது என்பதே அது. ஏற்கனவே சுமந்திரனின் தூதுக்குழு அமெரிக்காவுக்கு சென்று திரும்பி இருக்கிறது. இந்தியா கூட்டமைப்பை டெல்லிக்கு வருமாறு கேட்டிருக்கிறது. இப்பொழுது சீனா வடக்குக்கு நிவாரணத்தோடு வந்திருக்கிறது. தமிழ் மக்களை நோக்கிப் பேரரசுகள் வருவது என்பது தமிழ் மக்களின் பேர வாய்ப்புக்கள் அதிகரிப்பதைக் காட்டுகிறது. இலங்கைத்தீவின் பெரிய இனமும் அரசுடைய இனமும் ஆகிய சிங்கள மக்கள் எப்படி பேரரசுகளுக்கு இடையே சுழித்துக் கொண்டு ஓடுகிறார்கள் என்பதிலிருந்து தமிழ் மக்கள் கற்றுக்கொள்ள வேண்டும். அரசியல் என்பது சாத்தியக்கூறுகளைக் கையாளும் ஒரு கலைதான்.


### வீணாவின் கவிக்கணை

உருகும் பனியும், உறையும் குளிரும்,
அடிக்கும் வெயிலும், வெடித்த விரல்களும்
குருதி கசிந்த இதழ்களும்,
தளர்ந்த நடையும், கனத்த இதயமும்
கொண்டு இங்கு உழைத்து வாழும்
சகோதர சகோதரிகளோ, அங்கு
தம் குடும்பம் இனித்து வாழ்ந்திடவே,
பசியும் தூக்கமுமின்றி அவர் வாழும்
நிலை கண்டீராயின்,
மாட மாளிகை வேண்டாம் கண்ணே,
கூரை வீடே போதுமென்பீர்,
மோட்டார் வண்டி வேண்டாம கண்ணே,
மிதி வண்டியே போதுமென்பீர்,
உழைத்து உழைத்து சிவந்த கைகள்,
ஓடி வருவதும் உங்களை நாடி,
அவர்கள் தளர்ந்து போகும் வேளையேனும்
கைகொடுக்க காத்திருங்கள் உறவுகளே!!!

# 59 மணி நேரத்தில் 195மேப்பிள் இலைகளில் 1330 குறள்களையும் எழுதிச் சாதனை புரிந்த கனடிய தமிழ்ப் பெண்மணி புஷ்பா கிறிஸ்டி



**உ**லகெங்கமிருந்து தன் நிலப்பரப்பில் கால்பதிக்கும் கற்றறிந்த அறிஞர்களையும் தொழில் வினைஞர்களையும். கடல் தாண்டி வரும் அகதிகளையும் வரவேற்று அவர்களை உபசரித்து இருப்பிடமும் உணவும் வழங்கி அவர்களை தனது தேசத்தின் நிரந்தரப் பிரஜைகளாகவும் உயர்ந்த நிலையில் அமர்த்துவதில் தன்னிகர் இல்லாத தனித்துவமான நாடு கனடா ஆகும்.



இந்த நாட்டில் மகிழ்ச்சியாக வாழ்ந்து வருபவர்களில் எத்தனை பேர் இந்த மண்ணை மதித்து வாழ்கின்றார்கள் என்பதை அறிந்து அவர்களைப் போற்ற வேண்டும். இவ்வாறு கனடாவில் வாழ்ந்து வரும் ஈழத்தமிழர்களில் ஒருவரும் தமிழ் இலக்கண நூல்களை மாத்திரமல்ல. திருக்குறள் என்னும் வாழ்வியல் நூலையும் கற்றுத் தேர்ந்தவருமான கவிஞர் புஷ்பா கிறிஸ்டி அவர்கள் திருக்குறளை மதித்து ஒரு சாதனை செய்துள்ளார். உலகெங்கும் உள்ள திருக்குறள் சார்ந்த அமைப்புக்களோடு தொடர்புகளை ஏற்படுத்திய வண்ணம் பல கருத்தரங்குகளிலும் கவியரங்குகளிலும் பங்குபற்றி பல தமிழ் அறிஞர்களால் அறியப் பெற்றவராகத் திகழும் கவிஞர் புஸ்பா கிறிஸ்டி அவர்கள் கனடிய தேசத்தையும் அதன் தேசிய அடையாளமாகவும் கனடிய தேசியக் கொடியில் பதிக்கப்பட்டமாக விளங்கும் மேப்பிள் இலைக்கு மரியாதை செய்யும் வகையில் அந்த சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

இந்த ஏற்பாட்டின் படி கனடாவில் *59 மணி நேரத்தில் 195மேப்பிள் இலைகளில் 1330* குறள்களையும் எழுதிப் பதித்து சாதனை. செய்த கனடிய தமிழ்ப் பெண்மணி கவிஞர் புஷ்பா கிறிஸ்டி அவர்களின் சாதனையைப் பாராட்டும் வகையில கடந்த *04-12-2021* அன்று உலகெங்கும் இருந்து நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்ட ஒரு மெய்நிகர் நிகழ்வு இடம்பெற்றது.

தமிழ்நாட்டைச் சேர்ந்த சைவ நெறிச் செம்மல் சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த பாராட்ட நிகழ்வில். பல அறிஞர் பெருமக்கள் பங்குபற்றினார்கள். வரவேற்புரையை திருமதி சுபாஷினி வழங்கினார். பேராசிரியர்கள் டாக்டர் அசோகன் அவர்கள் சம்பத் குமார் அவர்கள். மற்றும் குறள்நெறிச் செம்மல் ஞானசேகரன் அவர்கள். டாக்டர் புதுவை சரவணன் அவர்கள். டாக்டர் உமாராணி அவர்கள். சாதனைப் பெண்மணி செல்வராணி அவர்கள். கவிஞர் கேஜிஆர். கதிரேசன் அவர்கள் கவிஞர் நாயகி அவர்கள் ஆகியயோர் உட்பட பலர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மேற்படி தனது சாதனை முயற்சி தொடர்பாகவும் அதனை தன்னால் எவ்வாறு சாதிக்க முடிந்து என்பதையும் கனடா உதயன் ஆசி-




ரிய பீடத்தின் உறுப்பினர்களோடு புஸ்பா கிறிஸ்டி அவர்கள் கருத்துக்களை பகிர்ந்து கொண்ட போது வியப்பாக இருந்தது. மரங்களிலிருந்து பழுத்த பின்னர் தலையில் விழுந்த காய்ந்த இலைகள் மீது பல வகையான பேனாக்கள் மற்றும் "மார்க்கர்" கள் ஆகியவற்றால் இலைகளில் ஒப்பற்ற குறள்களை எழுதியபோது சிரமங்கள் இருக்கும் என்று தான் எதிர்பார்க்கவில்லை என்றார் பின்னர் தனது சிரமங்களை தகர்க்கவும் தான் சோர்ந்து விடாமல் இருக்க உற்சாகப் படுத்தியும் ஒத்துழைத்தவர்கள் தனது பிள்ளைகளும் மருமக்களும் தான் என்று உற்சாகத்துடன் தெரிவித்தார்.

மேலும். இலைகளின் மேல் அழுத்தமாக எழுத்துக்களை எழுதிப் பதித்த போது. இலைகள்கிழிந்து சேதமடைந்ததாகவும். தொடர்ச்சியாக நான் தூக்கத்தை தவிர்த்து சாதனை முயற்சியில் இறங்கிபோது தனது பிள்ளைகளும் தன்னுடன் ஒத்துழைத்ததாகவும் அவர் தெரிவித்தார்.

**- கனடா உதயன் ஆசிரிய பீடம்**


# MONEY PROBLEMS?
## பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CRP PLAN

**0%வட்டி**

**அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்**

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்ளது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

## நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

## நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




**தமிழில் தொடர்புகளுக்கு:**

**வசந்தி சிவராஜா - 416-616-3077**

## எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

**416-671-0577**

**4 இடங்களில் சேவை**

ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோண்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

**MISSISSAUGA OFFICE**
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

**SCAROBOROUGH OFFICE**
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

**HEAD OFFICE - TORONTO**
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

**RICHMONDHILL OFFICE**
10255 Yonge St. Suite # 204
Richmondhill

**NORTH YORK OFFICE**
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# Carefirst Family Health Team




## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGRÉMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com




# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**




உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**

தமிழ் மண்ணிலிருந்து நேரடியாக

உலகெங்கும்

தமிழ் மண்ணிலிருந்து நேரடியாக உலகெங்கும்...

Tasty தமிழா



இலங்கை மற்றும் தென்னிந்திய மசாலா மற்றும் பாரம்பரிய உணவுகள்...

கனடாவில் Tasty Tamila தயாரிப்புகள் கிடைக்கும் இடங்கள்:-

Shankar & Co (Kennedy & Eglinton)
Gunam Supermarket (Morningside & Sheppard)



தேன் நெல்லி நாட்டு சக்கரை கருப்பட்டி

வியாபார தொடர்புகளுக்கு +1 647 762 9512 +91 7845 00 6977



Chapel Ridge FUNERAL HOME & CREMATION CENTRE



**Serving the Tamil Community of Greater Toronto**



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.

CHRISTEEN SEEVARATNAM
(416) 258-6759



இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாம்
**Pre-Arranging – A Wise Choise**

**FINANCIAL BENEFITS**
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

**EMOTIONAL BENEFITS**
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

Chapel Ridge Funeral Home & Cremation Centre
8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1
www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca

# எங்க வானத்தில் மீண்டும் ஒரு வால்நட்சத்திரம்

- குரு அரவிந்தன்

வானத்தில் மீண்டும் ஒரு வால்நட்சத்திரம் தோன்றி இருக்கின்றது. ஆனால் இந்த மாதம் 12 ஆம் திகதி (12-12-21) ஞாயிற்றுக்கிழமை வானத்தில் காட்சி தர இருக்கும் வால்நட்சத்திரத்தை, மீண்டும் ஒரு முறை பார்க்க உங்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்காது. காரணம் பல ஆண்டுகளின் பின் தான் இது மீண்டும் தோன்றலாம். இந்த வால் நட்சத்திரம் சூரியனை நீண்ட பாதையில் சுற்றி வருவதால் திரும்பி வருவதற்கு சுமார் 3,500 வருடங்கள் எடுக்கலாம் என்று நம்புகிறார்கள். 10-50 தொலைநோக்கும் கருவி **(Binocular)** உங்களிடம் இருந்தால் இந்த சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொள்ளுங்கள். இந்த வால்நட்சத்திரத்திற்கு கொமெட் சி 2021 ஏ1 – லியோநாட் என்ற பெயர் சூட்டியிருக்கிறார்கள். உலகின் வடபகுதியில் இருப்பவர்களால் இப்போது இதைப் பார்க்க முடியும். தென்பகுதியில் இருப்பவர்களுக்கு டிசெம்பர், ஜனவரியில் தெரியும். டிசெம்பர் மாதம் 12 ஆம் திகதி பூமிக்கு அருகே 21 மில்லியன் மைல்களுக்கு அப்பால் கடந்து செல்கின்றது. 158,084 மைல் வேகத்தில் செல்லும் இந்த வால்நட்சத்திரம் 6 நாட்களின் பின் அதாவது டிசெம்பர் 18 ஆம் திகதி வீனஸ் கிரகத்திற்கு அருகே 2.6 மில்லியன் மைல்களுக்கு அருகே செல்கின்றது. விண்வெளியில் பார்க்கும் போது, மிக மெதுவாக நகர்வது போல தெரிந்தாலும், ஜனவரி 3 ஆம் திகதி 2022 சூரியனுக்கு அருகே 56 மில்லியன் மைல்களுக்கு அப்பால் சூரியனைக் கடக்க இருக்கின்றது. **Comet Leonard: Once in a lifetime** இதைக் கணனியிலும் ஒன்லைன் மூலம் பார்க்க வசதிகள் செய்திருக்கிறார்கள்.

சூரியனும் ஒரு நட்சத்திரம்தான். சிலர் ஏற்கனவே வால்நட்சத்திரத்தை ஒரு தடவையாவது பார்த்திருப்பீர்கள். 1976 ஆம் ஆண்டாக இருக்கலாம் என நினைக்கின்றேன், அதிகாலை 5 மணியளவில் பெரியதொரு வால்நட்சத்திரத்தை மிக அருகே பார்க்க எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. மிகத் தெளிவான நீண்ட வால்நட்சத்திரம் கிழக்குவானத்தில் தெரிந்தது. கொழும்பு செல்வதற்காக உத்தரதேவி கடுகதி வண்டி எடுப்பதற்காக காங்கேசந்துறை தொடர்வண்டி நிலையத்திற்கு அதிகாலை எழுந்து சென்ற போது கிழக்கு வானத்தில் தெரிந்த அந்த வால்வெள்ளி என்னை ஆச்சரியப்படுத்தியது இன்றும் நினைவில் நிற்கின்றது. அந்த வால்நட்சத்திரம் தெற்கு ஐரோப்பிய அவதான நிலையத்தைச் சேர்ந்த றிச்சாட் வெஸ்ற் என்பவரால் 1975 ஆம் ஆண்டு முதன் முதலாக் கண்டு பிடிக்கப்பட்டதால் 'கொமெற் வெஸ்ற்' என்று அவரது பெயர் சூட்டப்பட்டது. சூரியனில் இருந்து சுமார் 30 மில்லியன் கிலோ மீட்டருக்கு அப்பால் இது நகர்ந்து சென்றது.

வால்நட்சத்திரம் என்றால் என்வென்று பார்ப்போம். இதை வானத்தில் பார்த்தால் ஒரு பிரகாசமான வெள்ளியும் அதற்குப் பின்னால் விளக்குமாறு போன்ற ஒரு வாலும் தெரியும். இந்த வால் சிறிதாகவும், பெரிதாகவும் இருக்கலாம். பிரகாசம் இல்லாத மங்கிய பல வால் வெள்ளிகள் சாதாரண கண்ணுக்குத் தெரிவதில்லை. இந்த வால்நட்சத்திரங்களின் வால்கள் சிறிய பாறைத் துகள்கள், தூசிகள், கார்பன்டை ஆக்சைடு, கார்பன் மோனோக்சைடு, நீர்ப்பனி, மீத்தேன், அம்மோனியா போன்ற கரிமச் சேர்மங்கள் கலந்து உருவானவையாக இருக்கலாம். நாசா நிறுவனத்தின் விண்கலம் ஒன்று 2009 ஆம் ஆண்டு சேகரித்துக் கொண்டு வந்த வால்நட்சத்திரத் தூசியில் இருந்து கிளைசைன் என்னும் அமினோ அமிலம் இருந்தது உறுதி செய்யப்பட்டுள்ளது. சூரிய மண்டலத்தில் இருக்கும் இந்த பனிப் பந்துகள் போன்ற வால் நட்சத்திரங்கள் தமக்கென ஒரு சுற்றுபாதையை அமைத்துக் கொண்டு சூரிய மண்டலத்தை சுற்றி வருகின்றன. வால்வெள்ளி சூரியனுக்கு அருகே செல்லும் போது வால்வெள்ளியிலுள்ள உருகக்கூடிய பொருள்கள் ஆவியாகின்றன. சூரியனிலிருந்து வீசுகிற சூரியக் காற்று அந்த ஆவிகளைச் சூரியனுக்கு எதிர்ப்புறமாகத் தள்ளுகின்றது. ஆதனால்தான் வால்வெள்ளிகளின் வால்கள் எப்போதும் சூரியனுக்கு எதிர்த் திசையிலேயே காணப்படுகின்றன.

இதை தூசுப் பனிப்பந்துகள் என்றும் அழைப்பர். இவை சூரியனுக்கு அருகே செல்லும் போது, வெப்பமடைந்து வாயுக்களை வெளியிடத் தொடங்குகிறன. எஞ்சியிருக்கும் பாறைத் துண்டுகள்தான் விண் கற்களாக மாறுகின்றன. இவைதான் பூமியிலும் வந்து விழுகின்றன. வால்நட்சத்திரம் அதிக பிரகாசமாக இருந்தால், தொலைநோக்கியின் உதவி இன்றி இங்கிருந்தே பார்க்க முடியும். வால் நட்சத்திரங்கள் பொதுவாக நீள்வட்ட சுற்றுப்பாதையில் சூரியனைச் சுற்றிக் கொண்டிருக்கின்றன. குறுகிய கால வால் நட்சத்திரங்கள் கைபர் பெல்ட் பகுதியில் உருவாகுகின்றன, அவை விண்வெளியில் நெப்டியூன் சுற்றுப்பாதைக்கு அப்பால் இருக்கின்றன. நீண்ட கால வால் நட்சத்திரங்கள் க்யூபர் பெல்ட்டுக்கு வெளியே இருக்கின்றன. இவை எல்லாமே ஈர்ப்பு விசைகளால் இயக்கப்படுகின்றன. சூரியனைப் பல தடவைகள் சுற்றி வரும் போது, பனிப்பந்துகள் ஆவியாகிப் போவதால், வால் நட்சத்திரங்கள் காலப் போக்கில் குறுகிப்போய் அழிந்து விடுகின்றன.

ஹேல் பொப் **(Comet Hale-Bopp)** என்ற வால்நட்சத்திரமும் மிகவும் பிரகாசமாக இருந்ததால், பிரபலமானது. எமது காலமான 1995 ஆம் ஆண்டு யூலை மாதம் இது கண்டு பிடிக்கப்பட்டது. சுமார் 18 மாதங்கள் வெறும் கண்களால் பார்க்கக்கூடியதாக இருந்தது. 1997 ஆம் ஆண்டு சூரியனுக்கு அருகே வந்தபோது, 'பெருவெள்ளி' என்று பலராலும் புகழப்பட்டது. நீண்ட வட்டத்தில் சுற்றி வருவதால் மீண்டும் சூரியனை நோக்கி 4380 ஆம் ஆண்டுதான் வரும் என எதிர்பார்க்கிறார்கள். அலன் ஹேல் மற்றும் தோமஸ் பொப் என்ற இருவரால் இது முதலில் கண்டு பிடிக்கப்பட்டது. ஹெலி வால்நட்சத்திரத்தைவிட ஆறு மடங்கு பெரிதாக இருந்தது. ஏனைய வால்நட்சத்திரங்களை விட இதன் வாலில் அதிக சோடியம் கலந்திருப்பது அவதானிக்கப்பட்டது.

ஹெலி **(Halley's Comet)** என்ற பெயர் கொண்ட வால்நட்சத்திரம் 76 ஆண்டுகளுக்கு ஒருமுறை தோன்றுவதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். வரலாற்றில் 1456, 1531, 1607, 1682 ஆகிய வருடங்களில் ஹெலி வால்நட்சத்திரம் தெரிந்ததாக குறிப்புகள் உண்டு. இதன் அடிப்படையில் ஆங்கிலேயரான சேர் எட்மன்ட் ஹெலி என்பவர் 75 அல்லது 76 வருடங்களுக்கு ஒரு முறை தோன்றும் என்பதைக் கணக்கிட்டார். மார்க் ருவெயின் பிறந்தபோது 1835 ஆம் ஆண்டு வால்வெள்ளி தோன்றியதாகப் பதிவுகள் இருக்கின்றன. 1910 ஆம் ஆண்டு அவர் மறைந்த போதும் வால்வெள்ளியைப் பார்த்தாகப் பதிவுகள் இருக்கின்றன. அதனால் இதன் ஞாபகமாக அமெரிக்காவில் 36 சதம் பெறுமதியான விமானத்தபால் அட்டை வெளியிட்டார்கள். எமது காலத்தில் இது 1986 ஆம் ஆண்டு தோன்றியது. மீண்டும் இது 2062 ஆம் ஆண்டு தோன்றும் என கணக்கிட்டிருக்கிறார்கள். இதனுடைய வால் சுமார் 22 மில்லியன் கிலோ மீட்டர் நீளமானது. ஹவாய் நாட்டு முதலாவது மன்னன் கமே ஹமேகா பிறந்தபோது இந்த வால் நட்சத்திரம் தோன்றியதாகப் பதிவுகள் இருக்கின்றன. சங்க இலக்கியங்களிலும் இதற்கான பதிவுகள் இருக்கின்றன. 2014 ஆண்டு நவெம்பர் மாதம் எடுக்கப்பட்ட கணக்கின்படி, 5,253 வால்நட்சத்திரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் மிகத் தெளிவாகப் பார்க்கக்கூடியதாக, பிரகாசமாக இருந்த வால் நட்சத்திரங்கள் சிலவற்றின் பெயர்களையும் இங்கே தருகின்றேன். **Great Comet of 1680, Great Comet of 1744, Great Comet of 1843, Great September Comet of 1882, Great January Comet of 1910, Comet Skjellerup-Maristanny, 1927, Comet Ikeya-Seki, 1965, Comet West, 1976. Comet Mc-Naught, 2007, 2021's best comet- Leonard.** ஹெலி வால்நட்சத்திரத்தைத் தவிர, நீண்ட பாதையில் சுற்றி வரும் ஏனைய வால்நட்சத்திரங்கள் மீண்டும் எப்போது தோன்றும் என்பது சரியாகத் தெரியவில்லை.




# கேப்டன் வருண் சிங் மறைவு : சோகத்தில் மூழ்கிய நஞ்சப்ப சத்திரம் மக்கள்

## காஷ்மீர் பள்ளி மாணவர்கள் அஞ்சலி



ஹெலிகாப்டர் விபத்தில் பலத்த காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த கேப்டன் வருண் சிங் உயிரிழந்தது நஞ்சப்ப சத்திரம் மக்களை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. குன்னூர் மகளிர் கல்லூரி மாணவிகள் மெழுகுவர்த்தி ஏந்தி ஊர்வலமாகச் சென்று அஞ்சலி செலுத்தினர்.தமிழகத்தின் குன்னூர் அருகே நஞ்சப்ப சத்திரம் பகுதியில் கடந்த 8ம் தேதி நடந்த ஹெலிகாப்டர் விபத்தில் முப்படைகளின் தலைமைத் தளபதி பிபின் ராவத், அவரது மனைவி மதுலிகா உட்பட 13 பேர் உயிரிழந்தனர். 14 பேரும் உயிரிழந்தனர்:ஹெலிகாப்டரில் பயணித்து உயிருடன் மீட்கப்பட்ட வருண் சிங் சிகிச்சை பெற்று வந்தார்.

80% தீக்காயங்களுடன் மீட்கப்பட்ட அவர் வெலிங்டனில் ராணுவ மருத்துவமனையில் ஆபத்தான கட்டத்தில் சிகிச்சை பெற்று வந்தார். வருண் சிங்குக்கு பலத்த காயங்கள் ஏற்பட்டு இருந்தாலும் அவரது உடல்நிலை சீராக இருப்பதாக மருத்துவமனை தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், சிகிச்சைப் பலனின்றி அவர் இன்று பெங்களூரு விமானப்படை மருத்துவமனையில் உயிரிழந்தார். இதையடுத்து ஹெலிகாப்டரில் பயணித்த 14 பேரும் உயிரிழந்துள்ளது நீலகிரி மாவட்ட மக்களைக் குறிப்பாக நஞ்சப்ப சத்திரம் மக்களை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.கடந்த புதன்கிழமை ஏற்பட்ட விபத்தின்போது உயிருடன் மீட்கப்பட்ட வருண் சிங், ஒரு வார காலத்துக்குப் பின்னர் அதே புதன்கிழமையான இன்று உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில், அவரை உயிருடன் மீட்க உதவிய மூர்த்தி கூறும்போது, ''வருண் சிங் உயிரிழந்தது பெரும் அதிர்ச்சியையும், சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது. அவருக்கு உயர் சிகிச்சை அளித்து அவரை உயிருடன் மீட்டு விடுவார்கள் என நம்பியிருந்தோம். அவர் குணமடைந்ததும் அவரைக் காண விரும்பினேன். ஆனால், அவர் துரதிர்ஷ்டவசமாக உயிரிழந்தது என்னை வேதனைக்கு உள்ளாக்கியுள்ளது. அவரது பிரிவு என்னையும், நஞ்சப்ப சத்திரம் மக்களையும் சொல்ல முடியாத துயரத்தில் ஆழ்த்தியுள்ளது'' என்றார்.அஞ்சலி:பெங்களூரில் சிகிச்சை பெற்று வந்த கேப்டன் வருண் சிங் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்ததை அடுத்து, குன்னூரில் உள்ள பிராவிடன்ஸ் மகளிர் கல்லூரியில் மாணவிகள், வருண் சிங் புகைப்படங்களுடன் மெழுகுவர்த்தி ஏந்தி ஊர்வலமாகச் சென்று அஞ்சலி செலுத்தினர்.

# வழக்கில் இருந்து யூடியூபர் மாரிதாஸ் விடுவிக்கப்பட்டது எப்படி? வழக்கறிஞர் அனந்தபத்மநாபன் விளக்கம்



மதுரையைச் சேர்ந்த யூடியூபர் மாரிதாஸ், தன் மீதான வழக்கில் இருந்து எப்படி விடுவிக்கப்பட்டார் என்று அவரது வழக்கறிஞர் அனந்த ப த் ம ந ா ப ன் விளக்கம் அளித்துள்ளார். மதுரையைச் சேர்ந்தவர் யூடியூபர் மாரிதாஸ். இவர் அண்மையில் முப்படைகளின் தலைமை தளபதி பிபின் ராவத் குன்னூர் ஹெலிகாப்டர் விபத்தில் மரணம் அடைந்தது குறித்து, தமிழகத்தின் பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் ட்விட்டரில் கருத்து பதிவிட்டதாக மதுரை மாநகர் சைபர் கிரைம் போலீஸில் திமுக தொழில்நுட்பப் பிரிவு நிர்வாகி பாலகிருஷ்ணன் புகார் அளித்தார்.

அதன்பேரில் மாரிதாஸ் மீது இந்திய தண்டனைச் சட்டம் 505 (1) மற்றும் (2), 124 (ஏ), 504, 153 (ஏ) ஆகிய பிரிவுகளின்கீழ் போலீஸார் வழக்குப் பதிவு செய்து கைது செய்தனர். இந்த வழக்கை ரத்து செய்யக் கோரி, உயர் நீதிமன்றக் கிளையில் மாரிதாஸ் மனு தாக்கல் செய்தார்.இதனை விசாரித்த உயர் நீதிமன்ற நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன், ட்விட்டர் பதிவுக்காக மாரிதாஸ் மீது பதிவு செய்யப்பட்ட வழக்கை முழுமையாக ரத்து செய்து நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

இந்த வழக்கில் மாரிதாஸ் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகி வாதிட்ட வழக்கறிஞர் அனந்த பத்மநாபன் கூறியதாவது:மாரிதாஸ் மீதான முழு வழக்கும் கருத்துரிமை தொடர்பானது. கருத்துரிமை என்பது அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளில் ஒன்றாகும். இருப்பினும், அதில் சில கட்டுப்பாடுகள் உள்ளன. நமது கருத்துரிமை அடுத்தவருக்கு தொந்தரவாக இருக்கக் கூடாது என்பது முக்கியம்.தலைமை தளபதி இறப்பு தொடர்பாக பலர் சமூக வலைதளங்களில் தவறான ஈமோஜிகளை பதிவிட்டனர். விபத்தில் சிக்கிய ஹெலிகாப்டரில் சில தலைவர்களின் பெயர்களை குறிப்பிட்டு அவர்கள் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று கூட பதிவிட்டிருந்தனர். இதுபோன்ற ட்வீட்களை பதிவிட்டால் மட்டுமே நாட்டுக்கு எதிராகச் செயல்பட்டதாகவும், தூண்டிவிட்டதாகவும் அர்த்தம்.'தலைமை தளபதி மரணம் வருத்தம் தரக் கூடியது. அதற்காகதுக்கம் அனுஷ்டிக்க வேண்டாம்.

ஆனால், சிரிப்பது போல் ஈமோஜிகளை பதிவிட்டு மரணத்தைக் கொண்டாடியது தவறு. இபிகோ 153 ஏ பிரிவு மதம், இடம், மொழி, ஜாதி அடிப்படையில் மோதலை தூண்டுவது என்பதாகும். அவரது ட்வீட்டில் மதம், இனம், மொழி, ஜாதி என எந்த அடையாளமும் இல்லை. இதனால் இப்பிரிவு பொருந்தாது.இபிகோ 124 ஏ மாநில அரசுக்கு எதிராக மக்களிடம் கிளர்ச்சியை ஏற்படுத்துவது ஆகும். அரசு என்பது வேறு, ஆட்சி நடத்தும் கட்சி என்பது வேறு. திமுக ஆட்சியில் இப்படியிருக்கிறது. அதை தடுக்க வேண்டும் என்றுதான் சொல்லியுள்ளார். திமுகதான் தூண்டிவிடுகிறது என்றுகூட சொல்லவில்லை. அரசுக்கு எதிராக எதையும் அவர் சொல்லவில்லை. இதனால் இப்பிரிவும் செல்லாது.

தலைமை தளபதி மரணத்துக்கு வருத்தப்பட்டுத்தான் மாரிதாஸ் அந்தப் பதிவை போட்டுள்ளார். அவரது மரணத்துக்கு இவர்கள்தான் காரணம் என யாரையும் அவர் சுட்டிக் காட்டவில்லை. எனவே இபிகோ 504 (அமைதியை சீர்குலைப்பது) பிரிவும் பொருந்தாது. இபிகோ 505 (2) பிரிவு இரு தரப்பினர் இடையே மோதலை உருவாக்குவது ஆகும். இந்த ட்வீட்டில் எந்தப் பிரிவையும் மாரிதாஸ் குறிப்பிடவில்லை. இதனால் இப்பிரிவும் செல்லாது. மொத்தத்தில் மாரிதாஸ் கருத்து சுதந்திரத்துக்கான வரைமுறையை மீறவில்லை. அவரது ட்வீட் யார் மனதையும் புண்படுத்தும் நோக்கில் இல்லை என்று கூறி வழக்கை ரத்து செய்து நீதிபதி உத்தரவிட்டுள்ளார். நீதிமன்றங்கள் இதுவரை கருத்துரிமைக்கு ஆதரவாகவே உத்தரவுகளை பிறப்பித்துள்ளன. நக்கீரன் கோபால் மீது 124 ஏ பிரிவில்தான் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இவ்வழக்கில் கருத்துரிமைக்கு ஆதரவாகவே தீர்ப்பு அளிக்கப்பட்டது.

அப்படியிருக்கும் போது மாரிதாஸ் வழக்கின் தீர்ப்பை விமர்சிப்பது நியாயமல்ல. தீர்ப்பில் ஆட்சேபம் இருந்தால் மேல்முறையீடு செய்யலாம். அதை செய்யாமல் நீதிபதியை விமர்சிப்பது தவறு.இன்று மாரிதாஸ் மீது வழக்குப் பதிவு செய்தவர்கள், தீர்ப்பை இப்போது விமர்சிப்பவர்கள் மீதும் நாளை வழக்குப் பதிவு செய்யலாம். அப்போது அவர்களுக்கும் இந்த தீர்ப்புதான் பயன்படும். பல்வேறு முன்தீர்ப்புகளை ஆராய்ந்துதான் நீதிபதி தீர்ப்பளித்துள்ளார். இவ்வாறு வழக்கறிஞர் அனந்த பத்மநாபன் கூறினார்.

# தமிழகத்தில் மேலும் 8 பேருக்கு ஒமைக்ரான் தொற்று அறிகுறி: ராதாகிருஷ்ணன் தகவல்

தமிழகத்தில் மேலும் 8 பேருக்கு ஒமைக்ரான் தொற்று அறிகுறி இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக சுகாதாரத்துறைச் செயலாளர் ராதாகிருஷ்ணன் இன்று தெரிவித்துள்ளார். ஒமைக்ரான் வைரஸ் இந்தியா உள்ளிட்ட 77 நாடுகளில் கண்டறியப்பட்டுள்ளதாக உலக சுகாதார மையம் தெரிவித்துள்ள நிலையில், தற்போது தமிழகத்திற்குள்ளும் ஒமைக்ரான் பரவியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

தமிழகத்தில் கடந்த ஒருவார காலமாகவே மத்திய அரசின் வழிகாட்டு நெறிமுறைகள்படி தமிழகம் வரும் அனைத்து வெளிநாட்டுப் பயணிகளுக்கும் மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி கடந்த 4 நாட்களுக்கு முன் நைஜீரியா நாட்டிலிருந்து தோஹா வழியாக சென்னை வந்த ஒருவருக்கு கரோனா தொற்று கண்டறியப்பட்டது. அவருடன் தொடர்பில் இருந்த 7 பேருக்கும் தொற்று உறுதியானது. அவர்களின் மாதிரிகள் ஒமைக்ரான் பரிசோதனைக்காக பெங்களூருவில் உள்ள இன்ஸ்டெம் நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

பரிசோதனை முடிவில், நைஜீரியாவில் இருந்து வந்தவருக்கு ஒமைக்ரான் தொற்று உறுதியாகியுள்ளது. மீதமுள்ள 7 பேரின் மாதிரி முடிவுகள் இன்னும் வரவில்லை என்று நேற்று கூறப்பட்டது. தற்போது ஒமைக்ரான் அறிகுறிகள் உள்ளதாக சுகாதாரத்துறைச் செயலாளர் ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து இன்று அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:''நைஜீரியாவிலிருந்து வந்தவருக்கு ஒமைக்ரான் பாதிப்பு உறுதியானதை அடுத்து அவர்களோடு தொடர்பில் இருந்த 7 பேரின் மாதிரிகள் மரபணுப் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டன.

அந்த 7 பேருக்கும் ஒமைக்ரான் தொற்று அறிகுறி இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. எட்டாவதாக காங்கோவிலிருந்து சென்னை வந்து ஆரணிக்குச் சென்ற பெண்ணுக்கும் ஒமைக்ரான் தொற்று அறிகுறி உள்ளது. தற்போது அப்பெண்ணுடன் தொடர்பில் இருந்தவர்களையும் சோதனைக்கு உட்படுத்தும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன''.இவ்வாறு ஜெ. ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.அச்சம் தேவையில்லை கரோனா வைரஸின் உருமாற்றமான ஒமைக்ரான் வைரஸ் தொற்று தென் ஆப்பிரிக்காவில் முதன்முதலில் கண்டறியப்பட்டது. இந்த ஒமைக்ரான் வைரஸ் வேகமாகப் பரவி நுரையீரலுக்குள் சென்றாலும் கூட அது நுரையீரல் திசுக்களில் பாதிப்பு ஏற்படுத்துவது என்பது டெல்டாவை விட 10 மடங்கு குறைவு எனக் கண்டறிந்துள்ளனர். ஒமைக்ரான் தொற்று ஏற்பட்ட 24 மணி நேரத்தில் அது நுரையீரலில் பரவிவிடுகிறது என்றும் அந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வேகமாகப் பரவும் என்றாலும் ஒமைக்ரான் குறித்து அச்சப்படத் தேவையில்லை. ஏனெனில் 77 நாடுகளில் பரவியிருந்தும் இதுவரை ஓர் உயிரிழப்பு கூட ஏற்படவில்லை என்பது மிகவும் ஆறுதலளிக்கும் செய்தியாகும்.

# தமிழகத்தில் இது வரை 1600 கோடி மதிப்புள்ள கோவில் நிலங்கள் மீட்கப்பட்டதாக அமைச்சர் சேகர்பாபு தெரிவிப்பு

இந்தியா செய்திகள் India News



ராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கரில் உள்ள அருள்மிகு லட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயில், ரோப் கார் அமைவிடத்தில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ள ரூபாய் 11 கோடி மதிப்பீட்டில் பல்வேறு திட்டப் பணிகளை மாநில இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பிகே சேகர்பாபு துவக்கி வைத்தார். தமிழகத்தில் வரும் 7 மாதங்களில் 551 கோவில்களுக்கு குடமுழுக்கு நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் இதுவரை இல்லாத அளவிற்கு கடந்த 6 மாதத்தில் ரூபாய் 1600 கோடி மதிப்பிலான கோவில் நிலங்கள் ஆக்கிரமிப்புகளிலிருந்து மீட்கப்பட்டு உள்ளது. தமிழகத்திலுள்ள பிரசித்தி பெற்ற 47 திருக்கோயில்களுக்கு வரைவு திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் அந்த கோவில்களுக்கு பேருந்து வசதிகள், கழிவறை வசதிகள், மலைப்பாதையில் உள்ள கோவில்களுக்கு மருத்துவமனைகள், மடப்பள்ளி, ரோப் கார் வசதி,தானியங்கி வசதி, உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. வரும் 5 ஆண்டுகளில் இந்து அறநிலையத்துறையில் மறுமலர்ச்சி ஏற்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் மொழி, இன, ஜாதி, மதங்களை கடந்து இந்து அறநிலைத்துறை செயல்பட்டு வருகிறது. தமிழகத்தில் பழனி கோவிலுக்கு அடுத்தபடியாக திருச்செந்தூர் கோவிலுக்கு பக்தர்களின் வருகை அதிகரித்து வருகிறது. எனவே ரூபாய் 300 கோடி மதிப்பீட்டில் பக்தர்களின் வசதிக்காக பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் நடைமுறைப்படுத்த ஆணை பிறப்பித்து இருப்பதாகவும் தெரிவித்தார். சோளிங்கரில் ஆஞ்சநேயர் கோயிலுக்கு 53 ஆண்டுகளுக்குப் பிறகு குடமுழுக்கு நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் சேகர் பாபு, சோளிங்கர் நரசிம்மர் சாமி கோவிலுக்கு வரும் ஆறு மாத காலத்திற்குள் ரோப்கார் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும். முதலில் பாதுகாப்பு கருதி மூன்று மாத காலத்திற்குள்ளாக வெள்ளோட்டம் விடப்பட்டு, பின்னர் ரோப் கார் இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இந்து அறநிலை துறை யில் உள்ள காலிப்பணியிடங்கள் படிப்படியாக நிரப்பப்பட்டு வருகிறது குறிப்பாக அவசியம் தேவைப் படுகின்ற இடங்கள் நிரப்பப்பட்டு வருகிறது. சென்னை கபாலீஸ்வரர் கலைக்கல்லூரியில் இந்த ஆண்டு 240 மாணவர்கள் சேர்ந்துள்ளனர். இக் கல்லூரியில் சேர மாணவர்கள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். சைவ மற்றும் வைணவ கோப்புகளில் 150 மாணவர்கள் சேர்ந்து இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில் மாநில கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர் காந்தி அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகத்ரட்சகன் மாவட்ட ஆட்சியர் பாஸ்கர பாண்டியன் உள்பட பலர் பங்கேற்றனர்.

# பெண்களின் குறைந்தபட்ச திருமண வயதை 21 ஆக உயர்த்துகிறது, மத்திய அரசு

பெண்களின் குறைந்தபட்ச திருமண வயதை 18-ல் இருந்து 21 ஆக உயர்த்தும் திட்டத்திற்கு மத்திய மந்திரிசபை ஒப்புதல் அளித்துள்ளது.

2020-ம் ஆண்டு சுதந்திர தின உரையின் போது பேசிய பிரதமர் மோடி, "மகள்கள் மற்றும் சகோதரிகளின் உடல்நலம் குறித்து இந்த அரசு தொடர்ந்து அக்கறை கொள்கிறது. ஊட்டச்சத்து குறைபாட்டில் இருந்து மகள்களை பாதுகாக்க அவர்கள் சரியான நேரத்தில் திருமணம் செய்துகொள்வது அவசியம். பெண்களின் குறைந்தபட்ச திருமண வயதை உயர்த்த திட்டமிட்டுள்ளோம்" என்றார்.

இதைத்தொடர்ந்து ஜெயா ஜெட்லி தலைமையில் நிதி ஆயோக் சிறப்புக்குழு அமைக்கப்பட்டு பெண்களின் குறைந்தபட்ச திருமண வயதை மறு நிர்ணயம் செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தனர்.

இந்த குழு பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு பெண்களின் குறைந்தபட்ச திருமண வயதை 18-ல் இருந்து 21 ஆக உயர்த்த பரிந்துரை செய்து தங்கள் ஆய்வறிக்கையை மத்திய அரசிடம் டிசம்பர் மாதம் சர்ப்பித்தது.

இந்த பரிந்துரையின் அடிப்படையில் பெண்களின் குறைந்தபட்ச திருமண வயதை 18-ல் இருந்து 21-ஆக உயர்த்த ஒன்றிய மந்திரிசபை ஒப்புதல் அளித்துள்ளது.

ஒன்றிய மந்திரிசபை ஒப்புதல் வழங்கியதையடுத்து பெண்களின் குறைந்தபட்ச திருமண வயதை 21-ஆக உயர்த்தும் இந்த திட்டம் மசோதாவாக நாடாளுமன்றத்தில் விரைவில் தாக்கல் செய்யப்பட்டு சட்டமாக அமலுக்கு வர உள்ளது.

இந்தியாவில் ஆண்களின் குறைந்தபட்ச திருமண வயது 21 ஆக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.


## கனடா இந்து மாமன்றம் சுவையுடன் படைத்திடும் சர்க்கரைப் பொங்கல் விழா - 2022 சமயப் போட்டிகள்

CANADA HINDU MAAMANTRAM

இடம்: SRI SATHYA SAI BABA CENTRE OF SCARBOROUGH
5321 Finch Ave East, Scarborough ON. M1S 5W2

காலம்: Jan 2nd 2022 (Sunday) 9.00 AM

**போட்டிகளுக்கு உரிய பிரிவுகள் :**

மழலைகள் : 01-01-2017 இற்குப் பின் பிறந்தோர்
ஆரம்பப் பிரிவு : 2016ஆம் ஆண்டில் பிறந்தோர்
பிரிவு 1 : 2015ஆம் ஆண்டில் பிறந்தோர்
பிரிவு 2 : 2014 ஆம் ஆண்டில் பிறந்தோர்
பிரிவு 3 : 2013 ஆம் ஆண்டில் பிறந்தோர்
பிரிவு 4 : 2012ஆம் ஆண்டில் பிறந்தோர்
பிரிவு 5 : 2011 ஆம் ஆண்டில் பிறந்தோர்
பிரிவு 6 : 2010-2009 ஆம் ஆண்டுகளில் பிறந்தோர்
பிரிவு 7 : 2008-2007 ஆம் ஆண்டுகளில் பிறந்தோர்
பிரிவு 8 : 2006 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்பும் பிறந்தோர்

- மாற்றுத் திறன் மாணவர்களுக்கான சிறப்புப் போட்டிகள் தனிப்பிரிவாக நடாத்தப்படும்.

குறிப்பு: 1. சமய அறிவுப் போட்டிகள் பிரிவு 4ம் அதற்கு மேல் உள்ள பிரிவுகளுக்கு மட்டும் இடம்பெறும். கீழ்ப் பிரிவு மாணவர்கள் விரும்பினால் 4ஆவது பிரிவில் பங்குபற்றலாம்.

2. புதிய பாடத்திட்டத்தின்படி போட்டிகள் இடம்பெறும். விபரங்களை, தரப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

3. போட்டியாளர் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணத்தைப் போட்டியின்போது கொண்டுவரல் வேண்டும்.

4. மேற்கண்ட போட்டிகளில் பங்குபற்ற ஒரு போட்டியாளருக்கு 5 டொலர்கள் அறவிடப்படும்.

**டிசெம்பர் 29, 2021க்கு முன் தரவேண்டிய தகவல்கள்:**

முதல் பெயர்: ----------------------------------------
குடும்பப் பெயர்: ----------------------------------------
பிரிவு: ----------------------------------------
பிறந்த திகதி: ----------------------------------------
தொலைபேசி எண், email: ..........................................
பங்குகொள்ளும் போட்டிகள்:
பேச்சு ☐ பண்ணிசை ☐ சமய அறிவுப் போட்டி ☐

**விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:**

Secretary,
Canada Hindu Maamantram,
41, Longbow Sq, Scarborough, ON. M1W 2W6
email : canadahindumaamantram@gmail.com

**மேலதிக தொடர்புகளுக்கு:**

416 496 0587, 416 496 9595, 416 278 9432, 416 451 8427, 416 356 7323, 416 532 7897, 416 560 6926, 647 343 7283, 416 492 4908, 416 497 4741, 416 363 2445, 905 294 0623, 905 785 6526, 416 797 1517, 416 531 1650

**விண்ணப்ப முடிவு திகதி: டிசெம்பர் 29, 2021**

# இஸ்லாமியர்களின் பிரச்சினையோ, அல்லது ஏழு தமிழர்களின் பிரச்சினையோ மட்டுமல்ல. இது தமிழ் இனத்தின் உரிமை பிரச்சினை என்கிறார் சீமான்

இந்தியா செய்திகள் India News



இது இஸ்லாமியர் பிரச்சினையோ, ஏழு தமிழர் பிரச்சினையோ மட்டுமல்ல. இது இனத்தின் உரிமை பிரச்சினை! தன்மான பிரச்சினை! - சீமான் சீற்றம்

நாம் தமிழர் கட்சியின் தலைமை அலுவலகச் செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, 20 ஆண்டுகளுக்கும் மேலாகக் கொடுஞ்சிறைவாசம் அனுபவித்து வரும் இசுலாமிய சிறைவாசிகளை மதத்தினைக் காரணமாகக் காட்டி விடுதலை செய்ய முடியாது என அரசாணை வெளியிட்டுள்ள திமுக அரசின் மதவாதப்போக்கைக் கண்டித்தும், ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிக்குண்டு 30 ஆண்டுகளாகச் சிறைக்கொட்டடியில் வாடும் ஏழு தமிழர்களையும் விடுதலை செய்ய 161வது சட்டப்பிரிவின்படி மாநில அரசுக்கே அதிகாரமிருக்கும்போது குடியரசுத்தலைவருக்குக் கடிதமெழுதி மாநிலத் தன்னுரிமையையும், தன்னாட்சியையும் காவுகொடுத்திருக்கும் திமுக அரசின் வஞ்சகப் போக்கைக் கண்டித்தும், 12.12.2021 அன்று காலை 10 மணியளவில், சென்னை - வள்ளுவர் கோட்டத்தில் நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைத்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில், நாம் தமிழர் கட்சியின் மாநில ஒருங்கிணைப்பாளர்கள் வழக்கறிஞர் இராவணன், விருகை ராஜேந்திரன், அன்வர் பேக், நாம் தமிழர் தொழிற்சங்கத் தலைவர் அன்புத்தென்னரசன் மற்றும் செயலாளர் வழக்கறிஞர் சுரேஷ்குமார், உழவர் பாசறை மாநில ஒருங்கிணைப்பாளர் சின்னண்ணன், கோவை அப்துல் வகாப், சென்னை புகழேந்திமாறன், செய்திப்பிரிவுச் செயலாளர் பாக்கியராசன், தலைமை நிலையச் செயலாளர் செந்தில்குமார் உள்ளிட்ட மாநில, மாவட்ட, தொகுதி, பாசறைப் பொறுப்பாளர்களும், நாம் தமிழர் உறவுகளும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சார்ந்தவர்களும் பெருந்திரளாகப் பங்கேற்று இஸ்லாமிய சிறைவாசிகளின் விடுதலை மற்றும் எழுவரின் விடுதலையை வலியுறுத்தி கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

அதனைத்தொடர்ந்து, மருது மக்கள் இயக்கத்தின் நிறுவனத் தலைவர் செ.முத்துப்பாண்டி, இந்திய தேசிய லீக் நிர்வாகி கோவை நாசர், தமிழ் தேசிய கிறித்துவர் இயக்கம் அருட்தந்தை மை.பா. சேசுராஜ், வனவேங்கைகள் கட்சி தலைவர் இரணியன், தமிழர் நலப் பேரியக்கத் தலைவர் மு.களஞ்சியம், ஆதித்தமிழர் விடுதலை இயக்கம் பொதுச்செயலாளர் அ.வினோத், தமிழ் தேசத் தன்னுரிமை கட்சித் தலைவர் அ.வியனரசு ஆகியோரும், நாம் தமிழர் கட்சியின் மாநில ஒருங்கிணைப்பாளர் ஹுமாயூன் கபீர், மாநில இளைஞர் பாசறை ஒருங்கிணைப்பாளர்கள் துருவன், சல்மான், மகளிர் பாசறை ஒருங்கிணைப்பாளர் கோவை கார்த்திகா, மாநில மாணவர் பாசறை ஒருங்கிணைப்பாளர்கள் இடும்பாவனம் கார்த்திக், அபூபக்கர் சித்திக் ஆகியோரும் கண்டனவுரையாற்றினர்.

நிகழ்வின் இறுதியாக, நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அவர்கள் கண்டனப் பேருரையாற்றினார். அதன் சுருக்கம் பின்வருமாறு, கனத்த இதயத்தோடு நாம் இந்தக் களத்திலே நின்றுகொண்டிருக்கிறோம். இருபதாண்டுகளுக்கும் மேலாகச் சிறையில் வாடுகின்ற நம்முடைய இசுலாமியச் சொந்தங்களை விடுதலை செய்யக்கோரியும், முப்பதாண்டுகளாகச் சிறையில் வாடிக்கொண்டிருக்கின்ற அக்கா நளினி உள்ளிட்ட ஏழு தமிழர்களை விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்னிறுத்தி நடைபெறுகிற ஆர்ப்பாட்டம் இது. அநீதியைக் கண்டு அச்சம் கொள்ளாமல் துணிந்து எதிர்த்துப் போராடுகிறவன் எவனோ அவனே உண்மையான புனிதப்போராளி என்கிறார் நபிகள் நாயகம் அவர்கள்.

இசுலாமியக் கைதிகளுக்கும் சீமானுக்கும் என்ன தொடர்பு என்று கேட்கிறார்கள்? எனக்கு இல்லாத தொடர்பு இந்த நிலத்தில் எவருக்கும் இல்லை. புழலைத் தவிரத் தமிழ்நாட்டின் பல சிறைகளில் நான் இருந்துள்ளேன். எல்லாச் சிறைகளிலும் இசுலாமிய சிறைவாசிகள் அனைவருடனும் நான் வாழ்ந்துள்ளேன். தம்பி ரிஸ்வான் இறுதி நிகழ்வில் நான் கலந்துகொண்டபோது, அவருடைய தாய், தங்கைகள் கதறிய காட்சிகள் இன்னும் என் கண்ணில் நிற்கிறது. அந்தக் கண்ணீர் காட்சிகள் என் கண்ணை விட்டு என்றும் மறையாது. அவரைப்போன்ற மற்றொரு சிறைவாசி ஐயா அபுதாகிர் உடல் சோர்ந்து, பார்வை மங்கி, சிறுநீரகம் பழுதுபட்டு மருத்துவமனையில் படுத்திருக்கும்போது அவரைச் சென்று பார்த்தேன். என் கையைப் பிடித்துக்கொண்டு கண்ணீர் சிந்தினார். பல்லாயிரம் வலிகளைத் தாங்கி நாம் நிற்கிறோம். மக்களுடைய பிரச்சனைகளை அரசு கையிலெடுக்காதபோது மக்கள் அரசை கையிலெடுப்பதைத் தவிர வேறு வழியில்லை. இந்தப் போராட்டத்தினை நடத்தினால் இசுலாமியர் அனைவரும் எங்களுக்கு வாக்கு செலுத்திவிடுவார்கள் என்பதால் நடத்தவில்லை. இது என் பிறவிக் கடமை அதனால் செய்கிறேன். இது இசுலாமியர் பிரச்சினையோ, ஏழு தமிழர் பிரச்சினையோ மட்டுமல்ல. இது இனத்தின் உரிமை பிரச்சினை, தன்மான பிரச்சினை.

திராவிட ஆட்சியாளர்கள் செய்த துரோகங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. இத்தனை இசுலாமியச் சிறைவாசிகளையும் கைது செய்து சிறையில் அடைத்த பெருந்தகை ஐயா கருணாநிதிதான். தமிழ்நாடு சட்டசபையில் முதன் முதலாக இசுலாமியர் தீவிரவாதிகள் என்ற வார்த்தையைப் பதிவு செய்த பெருந்தகையும் அவர்தான். ஐயா தா.கிருட்டிணனை, அம்மா லீலாவதியை கொலை செய்த திமுகவினரை விடுதலை செய்ய வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் கொண்டு வரப்பட்டதுதான் பத்தாண்டுகளுக்கு மேல் சிறைத் தண்டனை பெற்ற சிறைவாசிகளை விடுதலை செய்ய வேண்டும் என்ற அரசாணை. அவர்களை விடுதலையும் செய்துவிட்டார்கள். ஆனால் அந்த விடுதலை அறிவிப்பு ராஜீவ் கொலையில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கும், இசுலாமியச் சிறைவாசிகளுக்கும் பொருந்தாது என்று அந்த அரசாணையில் குறிப்பிட்ட திமுக அரசு இசுலாமியச் சிறைவாசிகளை விடுதலை செய்யும் என்று எப்படி நம்ப முடியும்? குஜராத் கலவரத்தில் பல்லாயிரக்கனான இசுலாமியர்களைக் கொன்று குவிக்கும்போது அந்தப் படுகொலையை ஆதரித்து இந்திய நாடாளுமன்றத்தில் பேசியதும் டிஆர். பாலு, முரசொலிமாறன் உள்ளிட்ட திமுக நாடாளுமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும்தான். பாபர் மசூதி இடிப்பு வழக்கில் இறுதித் தீர்ப்பு எப்படி வந்தாலும் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று தீர்ப்பு வெளியாகும் முன்பே அறிக்கை வெளியிட்டவர் ஐயா ஸ்டாலின் அவர்கள். ஆர்.எஸ்.எஸ் தலைவர் கொடுத்த அறிக்கையும், மு.க.ஸ்டாலின் கொடுத்த அறிக்கையும் ஒரே மாதிரியாக இருந்தது.

இசுலாமியச் சிறைவாசிகள் விடுதலை என்பது மதம் சார்ந்த பிரச்சினை இல்லை. இனம் சார்ந்த பிரச்சினை. மனித உரிமை சார்ந்த பிரச்சினை. இசுலாமியர் என்பதாலேயே அவருக்குக் கிடைக்க வேண்டிய நீதி மறுக்கப்பட்டு அநீதி இழைக்கப்படுமாயின் அதை எதிர்த்துப் போராடவேண்டியது ஒவ்வொரு தமிழ் மகனின் கடமை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். யார் நிலத்தில் வந்து யார் விடுதலையை யார் தீர்மானிப்பது? சிறுபான்மை மக்களின் பாதுகாவலர்கள் திமுக தான் என்று சொல்லி சொல்லி, கடைசியில் சிறையில் அடைத்து வைத்துப் பாதுகாக்கிறார்கள்.

இசுலாமியர் விடுதலை குறித்து அம்மையார் ஜெயலலிதாவிடம் கோரிக்கை விடுத்தபோது அது எங்கள் கொள்கை முடிவே இல்லை என்றார். திமுகவுக்கோ அது கொள்கையே இல்லை. எதிர்க்கட்சியாக இருக்கும்போது எழுவர் விடுதலையைச் சாத்தியப்படுத்த முடியாதா? என்று கேள்வி எழுப்பியவர் ஐயா ஸ்டாலின்தான். ஆனால் நாங்கள் நேரில் சென்று வலியுறுத்தியபோது வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது என்று தட்டிக் கழித்துவிட்டார். அதேபோல் இசுலாமியச் சிறைவாசிகளை விடுதலை செய்வதற்காவது திமுகவிற்கு வாக்களியுங்கள் என்று தேர்தல் பரப்புரையின்போது பேசிவிட்டு, தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சி அதிகாரத்திற்கு வந்த பிறகு அதைப் பற்றி வாயே திறக்கவில்லை.

ஐயா எடப்பாடி பழனிச்சாமி ஆட்சிக்காலத்தில் 100 பேர் விடுதலை செய்யப்பட்டார்கள். ஒருவர் கூட இசுலாமியர் இல்லை. இப்போது திமுக ஆட்சிக்காலத்தில் 700 பேர் விடுதலை செய்யப்பட்டார்கள். ஒருவர் கூட இசுலாமியர் இல்லை. கேட்டால் சட்டம் அப்படி இருக்கிறது என்கிறார்கள். அந்தச் சட்டத்தை இயற்றியவர்களே இந்தத் திராவிட ஆட்சியாளர்கள்தானே. திரும்பப் பெறமுடியாது என்று சொன்ன வேளாண் சட்டங்களைத் தொடர்ச்சியாகப் போராடித் திரும்பப்பெறச் செய்ததுபோல், இசுலாமியர் விடுதலையை வலியுறுத்தியும் மாவட்டங்கள் தோறும் தொடர்ச்சியாகப் போராட நாங்கள் தயாராக உள்ளோம். மதவாதத்திற்கு எதிரானவர்கள் தாங்கள் என்று திமுக சொல்வது உண்மையானால் மதவாதத்திற்கு எதிராக வாழ்நாளின் இறுதி நொடிவரை போராடி அதற்காக உயிர்ப்பலியான பழனிபாபா அவர்களின் நினைவுநாளை அரசு நிகழ்வாக முன்னெடுக்க வேண்டும்.

இசுலாமிய மக்களின் வாக்கு வேண்டும், அவர்களின் வாழ்க்கை வேண்டாம். இசுலாமிய மக்களின் ஓட்டு வேண்டும். அவர்களின் உரிமை வேண்டாம் என்று திமுக செயல்படுவது மிகப்பெரிய கொடுமை. இசுலாமியச் சிறைவாசிகளை விடுதலை செய்வதில் என்ன சிக்கல் உள்ளது என்பதை திமுக அரசு தெளிவுபடுத்த வேண்டும். கொளத்தூரில் புதிதாகத் தொடங்கப்பட்ட அரசுக் கலைக்கல்லூரியில் இந்துக்கள் மட்டுமே பணியாற்ற வேண்டும் என்று திமுக அரசு அறிவித்ததுதான் இந்துத்துவம். அதை எதிர்த்து குரல் கொடுத்தது நாம் தமிழர் கட்சி மட்டும்தான். பிரச்சினைகளின் அடிப்படையில் பாஜகவிற்கு ஆதரவளிப்போம் என்கிறது திமுக. இங்குப் பிரச்சினையே பாஜகதான். காஷ்மீரை ஒன்றிய பாஜக அரசு மூன்றாகப் பிரித்தபோது பிரித்ததில் தவறில்லை, பிரித்த விதத்தில்தான் தவறு என்று கூறியவர் ஐயா ஸ்டாலின் அவர்கள். இசுலாமிய, கிறித்துவ மக்களுக்கு திமுக செய்த ஒரு நன்மை ஏதாவது உண்டா? 20 ஆண்டுகளுக்கும் மேலாகச் சிறையில் வாடும் இசுலாமியச் சிறைவாசிகளை விடுதலை செய்கின்ற இந்த ஒரு நன்மையையாவது திமுக செய்ய வேண்டும்.

நாம் தமிழர் கட்சிக்கு அதிகாரத்தைக் கையளித்தால் மக்களின் பிரச்சனையைத் தீர்ப்போம். இல்லையென்றால் மக்களின் பிரச்சினைக்காக வீதியில் நின்று போராடுவோம். இது எங்கள் பிறவிக் கடமை என்ற நிறைவோடு செய்கின்றோம். இசுலாமியர்கள் என்றாலே பயங்கரவாதி, தமிழர்கள் என்றாலே பயங்கரவாதி என்ற சமூக உளவியலை முதலில் மாற்ற வேண்டும். வாக்களித்து ஆட்சியில் அமர்த்திய இசுலாமிய மக்களுக்குச் செலுத்த வேண்டிய நன்றி கடனுக்காவது திமுக அரசு இசுலாமியச் சிறைவாசிகளை விடுதலை செய்ய வேண்டும். விடுதலை செய்யாவிட்டால் வரலாறு திமுகவை விடுதலை செய்யாது. ஒரு நாள் மக்கள் மன்றத்தில் இதற்கு திமுக பதில் சொல்லியாக வேண்டிய நிலையை உருவாக்குவோம்.

எனவே திமுக அரசு, இசுலாமியச் சிறைவாசிகளது குடும்பங்கள், அவர்களின் பிள்ளைகள் நாள் தோறும் சிந்தும் கண்ணீர்த் துளிகளைத் துடைக்கவாவது அவர்களை விடுதலை செய்ய வேண்டும். அரசுக்கு நெருக்கடியைக் கொடுக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு இந்தப் போராட்டத்தைச் செய்யவில்லை. சிறைவாசிகளின் விடுதலையை வேண்டியே போராட்டத்தை முன்னெடுக்கிறோம். முன்னாள் சிறைவாசியான தம்பி கோவை நாசர் பேசும்போது, இரு கைகளைத் துணையாகக் கேட்டார். நாங்கள் எங்கள் உயிரையே கொடுக்க ஆயத்தமாக இருக்கிறோம். ஏனென்றால் உயிர் உன்னதமானதுதான், ஆனால் அதைவிட உன்னதமானது இனத்தின் உரிமை, விடுதலை, அதன் பெருமை என்று கற்பித்த தலைவனின் பிள்ளைகள் நாங்கள். உயிரை இழப்பது ஒருவரின் தனிப்பட்ட இழப்பு. ஆனால் உரிமையை இழப்பது ஒட்டுமொத்த இனத்திற்கான இழப்பு. அதனால் உயிரைக் கொடுத்தேனும் உரிமையை மீட்போம். இந்த ஆர்ப்பாட்டம் ஒரு தொடக்கம்தான். அடுத்தகட்ட போராட்டங்களுக்கான முன்னறிவிப்புதான். நம்முடைய தாய், தந்தையரும் உடன் பிறந்தார்களும் சிந்துகின்ற கண்ணீரைத் துடைப்பதற்குப் போராட்டங்களைத் தவிர, வேறு வழிகிடையாது. எனவே கோரிக்கைகள் வெல்லும்வரை தொடர்ச்சியாகப் போராடுவோம்.

புரட்சி எப்போதும் வெல்லும்!
நாளை நமது வெற்றி அதைச் சொல்லும்!
இலக்கு ஒன்றுதான் இனத்தின் விடுதலை!
இனம் ஒன்றாவோம். இலக்கை வென்றாவோம்!
நாம் தமிழர்!

இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

மலேசிய மடல்

# டான்ஸ்ரீ சோமா அறவாரியத்தின் தமிழ்ப் பணி தொடர்கிறது 6–ஆவது பன்னாட்டு புத்தகப் பரிசுப் போட்டிக்கு ஆயத்தம்




நக்கீரன்

**கோ**லாலம்பூர், டிச.17:

மலேசியத் திருநாட்டின் தலைநகரான கோலாலம்பூரில் தமிழர்தம் பெருமைக்கு கட்டியம்கூறும் வண்ணம் அமையப் பெற்றுள்ள ஒரேக் கட்டடம் துன் சம்பந்தன் மாளிகை.

அந்த மாளிகையை கட்டியெழுப்பிய பெருமைக்குரிய தேசிய நில நிதி கூட்டுறவு சங்கத்தின் 29 ஆம் ஆண்டு (2021) இலக்கியப் போட்டியின் முடிவுகள் அண்மையில் அறிவிக்கப்பட்டன.



ஒரு கூட்டுறவு அமைப்பான தேசிய நில நிதி கூட்டுறவு சங்கம், தன்னையும் நிலநிறுத்திக் கொண்டு இந்த மண்ணில் வாழ்கின்ற தமிழர்களின் தாய் மொழியாம் தமிழை வளர்க்கும் அரும்பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, தொடர்ந்து 29 ஆண்டுகளாக தமிழ் இலக்கியப் போட்டியை தொய்வின்றி நடத்தி வருகின்றது.

தற்போதைய கொரோனா ஆட்கொல்லி கிருமியின் தாக்கத்தால் மக்கள் ஒன்றுகூடுவதைத் தவிர்க்கும் முகமாக வழக்கமாக விழா நடத்தி பரிசு அளிப்பதைத் தவிர்த்துவிட்டு, போட்டியில் வென்றவர்களுக்கான பரிசுத் தொகையை அஞ்சல்வழி அனுப்பி வைத்தது.

தேசிய நில நிதி கூட்டுறவு சங்கம், 1992 ஆம் ஆண்டு முதல் இந்த இலக்கியப் போட்டியை நடத்திவரும் வேளையில், 2010-ஆம் ஆண்டில் இந்தக் கூட்டுறவு சங்கத்தால் தொடங்கப்பட்ட டான்ஸ்ரீ கே.ஆர். சோமா மொழி-இலக்கிய அறவாரியம் இந்த இலக்கியப் போட்டியை நடத்தி வருகின்றது.

நாட்டில் புதிய எழுத்தாளர்கள் உருவாக வேண்டும் என்பதுடன் தமிழ் மொழியின் பரிணாம வளர்ச்சியினை பதிவு செய்ய வேண்டும் என்ற நோக்கத்திலும் இந்தப்போட்டி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

அந்த வகையில் 29-ஆவது ஆண்டாக (2021) நடைபெற்ற இலக்கியப் போட்டிகளில் ஏராளமான படைப்பாளர்கள், நாட்டின் பல மாநிலங்களில் இருந்து ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

இந்த இலக்கியப் போட்டியில் வெற்றிபெறும் படைப்பாளர்களுக்காக வழக்கமாக ஆண்டுதோறும் நடைபெறும் பரிசளிப்பு விழா நடைபெறாது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்வதாக அறவாரியத்தின் செயலாளரும் கூட்டுறவு சங்கத்தின் நிர்வாக இயக்குனருமான மதிப்புமிகு டத்தோ பா.சகாதேவன் தெரிவித்துக் கொண்டார்.

போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குரிய பரிசுத்தொகையும் (காசோலை) சான்றிதழும் அஞ்சல்வழி அனுப்பி வைக்கப்பட்டன.

29-ஆம் ஆண்டு இலக்கியப் போட்டியின் சிறுகதைப் பிரிவில் கெடா மாநிலம் பீடோங்கைச் சேர்ந்த அண்ணாமலை சவரிமுத்துவும் மரபுக் கவிதைப் பிரிவில் கோலாலம்பூரைச் சேர்ந்த மாரிமுத்து காசியும் கட்டுரைப் பிரிவில் கெடா மாநில லூனாஸைச் சேர்ந்த குமாரசாமி தண்ணீர்மலையும் மாணவர் சிறுகதைப் பிரிவில் மலாயாப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவி மித்ரா முருகையாவும் புதுக் கவிதைப் பிரிவில் ஜோகூர் மாநிலம் தங்காக்கைச் சேர்ந்த தமிழ்ச் செல்வி த/பெ நளதிருவனும் முதல் பரிசை வென்றனர்.

அத்துடன், உரிய நேரத்தில் வெற்றியாளர்களைத் தேர்வு செய்து ஒத்துழைப்பு நல்கிய நடுவர்களுக்கு அறவாரியத்தின் சார்பில் டத்தோ பா.சகாதேவன் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

இதற்கிடையில், இந்த அறவாரியம், 6-ஆவது பன்னாட்டு புத்தகப் பரிசுப் போட்டிக்கான ஆயத்தப் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

ஈராண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படும் இந்த பன்னாட்டு புத்தகப் பரிசுப் போட்டி வரிசையில், 5-ஆவது போட்டியில், மதுரைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன் பன்னாட்டுப் பிரிவிலும் மலேசியாவின் மூத்த இலக்கியவாதியும் படைப்பாளருமான சை.பீர்முகம்மது உள்நாட்டுப் பிரிவிலும் வெற்றி பெற்றனர்.

மலேசியவாழ் தமிழர்களிடையே தமிழை வளர்ப்பதிலும் பாதுகாப்பதிலும் முனைப்பும் அக்கறையும் காட்டிவரும் கூட்டுறவு சங்கம், அதற்கான தளமாக டான்ஸ்ரீ கே.ஆர்.சோமா மொழி-இலக்கிய அறவாரியத்தை கடந்த 11 ஆண்டுகளாகப் பயன்படுத்தி வருகிறது.

உலகெங்கும் புலம்பெயர்ந்து வாழும் தமிழ்களிடையே தமிழ் வளர்ச்சியை முன்னெடுக்கும் விதமாக பன்னாட்டு புத்தகப் பரிசுப் போட்டியை நடத்தி வரும் இந்த அறவாரியம், தற்பொழுது 2022-ஆம் ஆண்டுக்குரிய 6-ஆவது உலகத் தமிழ்ப் புத்தகப் பரிசுப் போட்டிக்கு ஆயத்தமாகி வருகிறது.

தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழ்கின்ற நாடுகளில் குறிப்பிடத்தக்க நாடு மலேசியா. தமிழகம், தமிழ் ஈழத்தை அடுத்து தமிழர்கள் அதிகமாக வாழும் நாடான மலேசியாவைச் சேர்ந்த தமிழ்ச் சமூகம் பன்னாட்டு அளவில் தமிழ் எழுத்தாளர்களுக்காக இத்தகையப் போட்டியை நடத்துவது கண்டு, உலகத் தமிழர்கள் வியந்து நோக்குகின்றனர்.



இந்தப் போட்டியின்வழி இலக்கியப் படைப்பாளர்களுக்கு கிடைக்கும் பாராட்டும் பரிசும் அவர்களை இன்னும் எழுத ஊக்குவிக்கும். உலகெங்கும் பரந்து வாழும் தமிழினத்தின் பண்பாடு காக்கப்பட வேண்டுமென்றால், தமிழர்கள் எங்கிருந்தாலும் தங்களின் அடிப்படை வேர்களை நோக்கிய கவனத்தைக் கொண்டிருக்க வேண்டும். தமிழர்கள் தமிழைப் படிப்பதில் நாட்டம் கொள்வதுடன், இலக்கியவாணர்கள் தமிழ் இலக்கியத்தைப் படைப்பதில் ஆர்வம் கொள்ள வேண்டும் என்பதுதான் இந்த அறவாரியத்தின் இலக்கு என்று அறவாரியத் தலைவர் டான்ஸ்ரீ கே.ஆர். சோமசுந்தரம் குறிப்பிட்டார்.

தமிழ் மொழியில் தரம் வாய்ந்த இலக்கியப் படைப்புகள் மலேசியாவிலும் உலக நாடுகளிலும் வெளிவர வேண்டும் என்ற நோக்கில் நடத்தப்படும் இந்தப் போட்டியில் பன்னாட்டுப் பிரிவில் ஒரு வெற்றியாளரும் மலேசிய அளவில் ஒரு வெற்றியாளரும் ஒவ்வொரு போட்டியின்போதும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர் என்று இந்த அறவாரிய தலைமை இயக்குநர் டத்தோ பா.சகாதேவன் தெரிவித்தார்.

பொதுவாக மலேசியா, சிங்கப்பூர், இந்தியா, இலங்கை நாடுகளில் இருந்து நான்கு நடுவர்களும் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து ஒரு நடுவரும் என ஐந்து நடுவர்கள் இந்தப் போட்டிக்கான வெற்றியாளர்களைத் தேர்வு செய்து வருகின்றனர்.

2012-ஆம் ஆண்டில் நடைபெற்ற முதல் போட்டியில் "திறனாய்வின் புதிய திசைகள்" என்ற படைப்பிற்காக ஈழ எழுத்தாளர் மு.பொன்னம்பலம் பத்தாயியிர டாலரையும் விடியல் என்ற நூலிற்காக மலேசியப் படைப்பாளி அ.ரெங்கசாமி பத்தாயிர வெள்ளியையும் பரிசாகப் பெற்றனர்.

அதைப்போல, 2014-ஆண்டு நடத்தப்பட்ட இரண்டாவது போட்டியில் பன்னாட்டுப் பிரிவில் "மூன்றாம் உலகப் போர்" என்ற நூலிற்காக தமிழகத்தின் கவிப்பேரரசு வைரமுத்துவும் மலேசியப் பிரிவில் "செலாஞ்சார் அம்பாட்" என்னும் படைப்பிற்காக கோ.புண்ணியவானும் பரிசுகளை வென்றனர்.

2016-ஆம் ஆண்டு இடம்பெற்ற மூன்றாவது போட்டியில் பன்னாட்டுப் பிரிவு, உள்நாட்டுப் பிரிவு ஆகிய இரண்டிலுமே மலேசியர்கள் வென்றனர். அழகான மௌனம் என்னும் நூலிற்காக முனுசாமி கன்னியப்பன் பத்தாயிர டாலரும் காத்திருந்த விடியலுக்காக திருமதி விமலா ரெட்டி பத்தாயிர வெள்ளியும் பரிசாகப் பெற்றனர்.

2018 நவம்பர் 17-ஆம் நாள் கூட்டுறவு சங்க தோட்ட மாளிகையில் நடைபெற்ற நான்காவது போட்டி பரிசளிப்பு விழாவில் பன்னாட்டுப் பிரிவில் "1801" என்ற நூலை இயற்றியதற்காக தமிழகத்தின் முனைவர் மு.இராஜேந்திரன் (ஐ.ஏ.எஸ்.) தேர்ந்தெடுக்கப்பட்டு பத்தாயிர டாலர் பணப்பரிசு, கேடயம், பாராட்டுப் பத்திரத்துடன் சிறப்பு செய்யப்பட்ட வேளையில் மலேசியப் பிரிவில் "புதிய பதிவுகள்" என்னும் சிறுகதைத் தொகுப்பு நூலுக்காக கௌரி சர்வேசன் பத்தாயிர வெள்ளி வெகுமானத்துடன் சிறப்பு செய்யப்பட்டார்.

**நக்கீரன்** - Nakkeeran 013-244 36 24

# "நேர்மறை எண்ணமும், நம் வாழ்க்கையும்"



**ந**ம்மில் பலருக்கு "நேர்மறை எண்ணங்களை வளர்ப்பது எப்படி" என்ற கேள்வி மனதினுள் இருக்கும்.

**"எண்ணம் போல் வாழ்க்கை"**

எண்ணங்கள் எப்படியோ அப்படியே தான் நம் வாழ்க்கையும் இருக்கும். "நம் எண்ணங்கள் தூய்மையாக நேர்மறையாக இருக்கும் போது வாழ்க்கையும் மகிழ்ச்சியாக இருக்கும்.

**நேர்மறை எண்ணங்களை வளர்ப்பது எப்படி?**

***தியானம் செய்தல்.**

தியானம் செய்வதால் உடலும் மனதும் சுறு சுறுப்பாக இருக்கும். மன-அமைதியை வளர்த்துக்கொள்ள சிறந்த வழி தியானம் மட்டுமே.

தேவையற்ற எதிர்மறை எண்ணங்களை கட்டுப்படுத்தி நேர்மறை எண்ணங்களை வளர்க்க தியானம் பெரிதும் உதவியாக இருக்கிறது.

***நல்ல சிந்தனை உள்ள மனிதர்களை அருகில் வைத்துக் கொள்ளுதல்.**

நம்முடன் நம் அருகில் இருக்கும் மனிதர்ள் பற்றி கவனமாக இருங்கள். தூய நல்ல சிந்தனை உள்ள மனிதர்களை அருகில் வைத்துக் கொள்ளுங்கள். இது உங்களிடத்தில் நேர்மறை எண்ணங்களை வளர்க்க இலகுவாக இருக்கும்.

***நல்ல விடங்களை படியுங்கள்.**

நீங்கள் படிக்கும் புத்தங்கள் மற்றும் கல்வி என்பன உங்கள் மனதில் நல்ல சிந்தனைகளையும் செயல்களையும் தூண்டுவதாக இருக்க வேண்டும்.

நல்ல விடயங்களை படிப்பதன் மூலம் உங்கள் மனதில் நேர்மறை எண்ணங்களை விதைத்துக் கொள்ளலாம்.

***உங்களை நீங்கள் வளர்த்துக் கொள்ளுங்கள்.**

கற்றுக் கொள்ளுதல் , சிறந்த பயிற்சி மூலம் உங்களை நீங்கள் எப்போதும் வளர்த்துக் கொண்டு இருங்கள். இதனால் உங்கள் மீது நீங்களே உயர்வான எண்ணங்களை வளர்த்துக்கொள்ள முடியும்.

உங்களை வளர்த்துக்கொள்ளுவதன் மூலம் நீங்கள் எப்போதும் உயர்ந்தவராக உணர முடியும்.



***எதிர்மறை மனிதர்களிடம் இருந்து தள்ளி இருங்கள்.**

நம் அருகில் இருப்பவர்கள் நம் எண்ணங்களை மாற்றும் சக்தி கொண்டவர்கள். எதிர்மறை எண்ணங்கள் கொண்ட மனிதர்களை எப்போதும் உங்கள் அருகில் இருந்து தள்ளியே வையுங்கள்.

***மற்றவர்களுக்கு உதவி செய்யுங்கள்.**

மற்றவர்களுக்கு உதவி செய்யும் மனப்பாங்கினை எப்போதும் கொண்டிருங்கள். இயன்றவரை சமூக சேவைகளில் ஈடுபடல் மற்றவர்களுக்கு உதவி செய்தல் போன்றவற்றை செய்யுங்கள்.

இந்த நல்ல பழக்கவழக்கங்கள் உங்கள் மனதில் நேர்மறை எண்ணங்களை வளர்த்துக்கொள்ள பெரிதும் உதவியாக இருக்கும்.

***சிறந்த விடங்களை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.**

உங்கள் பழைய நினைவுகளை ஞாபகபடுத்திக்கொள்ளும் போது உங்களுடைய நல்ல விடயங்களையும் உங்கள் வாழ்க்கையில் நடந்த நல்ல சம்பவங்களையும் நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.

***உடற்பயிற்சி செய்தல்.**

தினமும் சரியான நேரத்தில் உடற்பயிற்சி செய்வது என்பது உடல் ஆரோக்கியத்திற்கு மட்டுமல்ல உள ஆரோக்கியத்திற்கும் சிறந்தது.

உடல் பயிற்சி நம்முள் ஆரோக்கியமான எண்ணங்களை வளர்க்க உதவியாக அமையும்.

**"எண்ணமும் செயலும் சிறப்பாக இருந்தால் வாழ்க்கையும் சிறப்பாகவே அமையும்"**

**- இரா. சஹானா**

# ஈழத்துத் திருக்கோவில்கள் 977



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## ஆரையம்பதி ஸ்ரீ பரமநயினார் (ஐயனார்) கோயில் மட்டக்களப்பு

*"ஆரையம்பதி பதிவாழ் ஐயனே வருக*
*கணநாதர் போற்றும் கடவுளே வருக*
*ஓம்ஆம் எனுமுயர் பராபரனே*
*ஆம்ஓம் எனும் ஆதியே வருக*
*ஐந்து கடவுளா ஐந்தொழில் நடாத்தும்*
*எந்தையே தந்தியிலிவர்ந்து நீ வருக*
*வஞ்சனை சூனியம் மாறிடவருக*
*பவமறுத் தருட்கண் பார்த்திட வருக வருகவே..."*

ஆரம்ப காலத்திலிருந்து ஐயனார்வழிபாடு, கிராமிய வழிபாட்டு முறை தழுவியதாகவே காணப்பட்டுள்ளது. பிற்காலத்திலே இவ்வழிபாடு ஆகமநெறிக்குட் பட்டதாக மாற்றம் பெற்றுள்ளது. ஆரையம்பதி பரமநயினார் ஆலயத்தில், 1970 ஆம் ஆண்டுவரை சடங்குகளைப் பூசாரிகளே செய்து வந்துள்ளனர். ஆனி மாதத்து பூர்வபட்சத்து நாலாம் பிறைக்கு முன், புதன், சனி, ஆகிய வாரங்கள் தவிர்ந்த நாட்களில் சடங்கு நடைபெறுவது வழக்கம். ஈழத்திலுள்ள ஐயனார் கோயிலின் சடங்கு முறைகள் ஊருக்கேற்ப தனித்தன்மை கொண்டவையாகக் காணப்படுகின்றன. ஆரையம்பதி ஐயனார் கோயிலில் சடங்கு செய்யும் பூசாரி, முறைப்படி நோர்ப்புக் கட்டியபின் சடங்கு நடைபெறும். மஞ்சள் சோற்றைச் சமைத்து, சாமவேளையிலே அதனை ஒரு முடிச்சிலே கட்டி, ஆலயத்தின் முன்பு தொங்க விடுவதையே நோர்ப்புக் கட்டுதல் என்று கூறுவர். நோர்ப்புக் கட்டியபின் அடுத்த நாளே பரமநயினார் சடங்கு நடைபெறும்.

பரமநயினாரின் கணங்களாக வதனமார் கோலத்திலும், மாரியம்மன், பேச்சியம்மன், வீரபத்திரன் முதலிய தெய்வங்களின் கோலங்களிலும் உருக்கொண்டு ஆண்கள் ஆடுவார்கள். வதனமாரின் உருவிலே வருவோர் வில், அம்பு, பொல்லு ஆகியவற்றைக் கையிலேந்தியவண்ணம் ஆடுவார்கள். மாடுகளைப் பிடிக்கும் பாவனையில் மழுக் கயிற்றை வீசி, ஆட்களை இழுப்பர். தெய்வங்களின் பாவனையிலே ஆடுவோரை மந்திவாதிகள் படுகளம் போட்டு ஆடவிடாது மந்திரத்தாற் தடுப்பர். எதிர்தரப்பிலுள்ள மந்திரவாதிகள் கட்டுக்களை மந்திரத்தால் வெட்டி, தெய்வ கோலந் தாங்கியவர்களை ஆடவைப்பர். மந்திரவாதிகளிடையே நடைபெறும் போட்டிகளைப் பார்ப்பதற்காக அயற் கிராமங்களிலிருந்தும் மக்கள் பெருந்திரளாக வருகை தருவர். மாந்திரீக முறைகளைத் துறைபோகக் கற்றவரும், அண்ணாவியாராக விளங்கியவருமான பரிகாரி பொன்னம்பலம் என்பவரது காலத்திலே, பரமநயினார் சடங்கு மிக விமரிசையாக நடைபெற்றதாகக் கூறுவர். சடங்கு நடைபெறும் காலத்திலே பரமநயினார் காவியம், பரமநயினார் அகவல், வதனமார் காவியம், வதனமார் அகவல் முதலியன படிக்கப்படும்.

ஆரம்பகாலத்தில் கிராமிய வழிபாடாக இருந்து, பின் ஆகம முறை தழுவிய வழிபாட்டுநெறிக்கு இக் கோயில் மாற்றம் பெற்றிருப்பினும், கிராமிய தெய்வ வழிபாட்டோடு, ஆகம முறை தழுவிய வழிபாட்டு முறைகளும் அவற்றோடு தொடர்புடைய விரதங்கள் விழாக்களும் சிறப்பாக நடைபெற்று வருவது குறிப்பிடத் தக்கது. மட்டக்களப்புத் திருநாட்டில், கண்ணகி வழிபாடு புகழ்பெற்ற வழிபாடாகப் பலவிடங்களிலும் பின்பற்றப்பட்டு வருகின்றது. நாடெங்கும் பரவலாகக் கண்ணகி கோவில்களைக் காண முடியும். கண்ணகி கோவில் தவிர்ந்த ஏனைய கோவில்களிலும், வைகாசியில் கண்ணகி அம்மனுக்குரிய சடங்கை சிறப்பாகக் கொண்டாடும் வழக்கம், மட்டக்களப்பிலே காணப்படுகின்றது. ஆரையம்பதி பரமநயினார் ஆலயத்திலும், வைகாசிமாதம் ஏழு நாட்கள் கண்ணகி அம்மன் சடங்கு நடைபெறுகின்றது. பூரணை நாளன்று திருக்குளிர்த்தி இடம்பெறும். திருக்குளிர்த்தி நிகழ்விலே ஆயிரக்கணக்கிலே மக்கள் கலந்து, தமது வேண்டுதல்களை முன்வைப்பர். திருக்குளிர்த்தியின் பின் மறுநாள் மாலை திருஊஞ்சல் சிறப்பாக நடைபெற்று, இச்சடங்கோடு கண்ணகி அம்மன் சடங்கு நிறைவுபெறும். இக்காலத்திலே நடைபெறும் கண்ணகி அம்மன் சடங்கிலே, ஒரு கரத்தில் சிலம்பினை ஏந்திய ஸ்தானக நிலையிலுள்ள கண்ணகி அம்மனின் உருவத்தை, எழுந்தருளியாக உள்வீதி வழியே கொண்டு செல்வர்.

ஸ்ரீ பரமநயினார் கோயிலில் 1970 ஆண்டும், அதன்பின்னரும் பல தடவைகள் கும்பாபிஷேகம் நிறைவேற்றப்பட்டுள்ளது. 1989 ஆம் ஆண்டு கொடித்தம்பம் நிறுவப்பட்டுள்ளது. இக்கோயிலில் பூரணை நாட்களிலே திருவிளக்குப் பூசை நடைபெறும். புரட்டாதிச் சனி, கந்தசஷ்டி, விநாயகசஷ்டி, கேதாரகௌரிவிரதம் ஆகிய நாட்களில் விசேட பூசைகள் நடைபெறும். புரட்டாதிச்சனி விரதத்தின் இறுதிநாளன்று, சனிக்கிரகத்துக்கு அபிஷேகமும் ஹோமமும் நடைபெறும். கந்தசஷ்டி விரதகாலத்திலும் கந்தப்புராணப் படிப்பும், திருவிழாவும் மிகச் சிறப்பாக இடம்பெறும். கேதாரகௌரி விரத காலத்தில் இருபத்தியொரு நாட்களும் சிவலிங்கத்தின்முன் கும்பங்கள் வைத்து, பூசைகள் நடைபெறும். கார்த்திகைமாதத்தில் மாதம் முழுவதும் சிவலிங்கத்துக்கு முன்னே கும்பங்கள் வைத்து காசிகண்ட பூசையை நிறைவேற்றுவர்.

இவ்வாலயத்தில் அனைத்து சைவசமய விழாக்களும் கொண்டாடப்படுகின்றன. விநாயகப் பெருமானுக்குரிய விரதங்களுள் விநாயகர்சஷ்டி விரதம் முக்கியமானது. இவ்விரதம் அனுட்டிக்கப்படுகின்ற இருபத்தியொரு நாட்களும், விநாயகப்பெருமானுக்குப் பொங்கல் வைத்து, அலங்காரபூசைகள் நிகழ்த்துவர். விநாயகர் விரதத்தின் இறுதிநாளாகிய பெருங்கதை தினத்தில், விசேடமான பெரும்பொங்கல் நடைபெறும். அத்தோடு பல்வேறுவிதமான நிவேதனப்பொருட்களையும் விநாயகருக்கு நிவேதித்து அலங்காரபூசை இவ்வாலயத்தில் நடைபெறும். நடைபெறும்.

*வளரும்...*




கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%


கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தெலைமேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
roted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy



crc
CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4

Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

*(அத்தியாயம் 36)*

# கல்கியின் பொன்னியின் செல்வன்

## வந்தியத்தேவன் பழையாறைக்கு திரும்பும் பயணம்

கோடிக் கரையில் இளவரசரை பூங்குழலியிடமும், அமுதனுடனும் விட்டு விட்டு வந்தியத்தேவன் பழையாறை நோக்கி குதிரையில் பயணிக்கிறான். பழையாறை செல்கிறோம் என்ற பரவசத்தில் அவன் உள்ளம் துள்ளிக் குதித்தது. பழையாறை சோழர்கள் தம் வாழ்விடமாகத் தெரிவு செய்த பெரும் நகரம். இது தெற்கில் முடிகொண்டான் ஆறும், வடக்கில் திருமலைராயன் ஆறும் என இரு ஆறுகளின் நடுவில் உள்ளது. முடிகொண்டான் ஆறு முற்காலத்தில் பழையாறு எனப்பட்டதால் அதன் கரையில் உள்ள இவ்வூர் பழையாறை எனப்பட்டது. இவ்வூரின் நான்கு திசையிலும் வடதளி, கீழ்தளி, மேற்றளி, தென்தளி என நாலு சிவன் கோயில்கள் சூழ்ந்திருந்தது. ஆரியப் படை வீடு புதுப்படைவீடு, மணல்படைவீடு, பம்பைப்படைவீடு என்று போர் வீரர்கள் குடியிருக்கும் வீரபுரிகளும் காணப்பட்டன. ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் என்ற தேவார மும் மூர்த்திகளும் பழையாறை நகரைப் பற்றியும் அங்குள்ள திருத்தலங்கள் பற்றியும் தம் பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர். இத்தகைய சிறப்பு மிக்கது இப் பழையாறை நகரம். இளவரசரை பாதுகாப்பாக அழைத்து வந்து, சூடாமணி விகாரத்தில் புத்த பிக்குகளின் பாதுகாப்பில் அவர் சுகமாக இருக்கிறார் என்ற செய்தியை குந்தவையிடம் சொல்லப் போகிறோம் என்ற இறுமாப்புடன் இன்பமாக தன் இதய தேவதையைக் காணும் ஆர்வத்துடன் பயணிக்கிறான் வந்தியத்தேவன். அத்தனை நாளாக சரியாகத் தூங்காததால் குதிரை மீதே தூங்கியும் விட்டான். இதனால் வழி மாறி இராஜபாட்டையை அடைந்தான். வழி மாறியதால் திகைத்துப் போன அவன் வருவது வரட்டும் என்று தன் பயணத்தைத் தொடர்ந்தான். போகும் வழியில் ஒரு கொல்லர் பட்டறைக்குச் சென்றான். அங்கு தன் குதிரைக்கு அரபிய குதிரைகள் போடும் கால் குளம்பை இரும்புக் கவசம் போல் செய்து தருமாறு கேட்டான்.

அப்பொழுது கொல்லன் ஒரு அபூர்வமான வாளைக் கையில் வைத்திருந்தான். அது பள பள என்று மின்னியது 'இது ராஜ குலத்து வாள் அதில் மீன் சின்னம் இருக்கிறதே! அதை ஏன் கொல்லன் நெருப்பில் இட்டு காய்ச்சி அடித்து மடிக்கின்றான்? நான் வரும் போது யாரோ ஓடி மறைந்து கொண்டார்களே ஏதோ மர்மம் இருக்கிறது' என்று நினைத்தபடி வந்தியத்தேவன், 'இது யாருடைய வாள்?' என்று கொல்லனைக் கேட்டான். அதற்கு கொல்லன் 'தம்பி எனக்கு பொய் சொல்லப் பிடிக்காது அதனால் இதைப் பற்றிக் கேட்காதே' என்றான். அதற்கு வந்தியத்தேவன் 'நானும் இனி உண்மை பேசத் தீர்மானித்திருக்கிறேன்' என்றான். பின்னர் மிகுந்த அசதியினால் மீண்டும் அங்கே நன்றாகத் தூங்கிவிட்டான். கொல்லன் அந்த அற்புத வாளை செப்பனிட்ட பின் கொடுக்க வேண்டிய மனிதனிடம் திருப்பிக் கொடுத்தான். வந்த மனிதன் 'இதை யாரிடமும் சொல்லக் கூடாது ஜாக்கிரதை முக்கியமாக பழுவூர் ராணியின் பெயரை சொல்லவே கூடாது' என்றான். பின்னர் கொல்லன் வந்தியத்தேவனின் குதிரையின் குளம்பிற்கு இரும்புக் கவசம் செய்தான். வந்தியத்தேவன் தூக்கத்தில் இருந்து விழித்து சுற்று முற்றும் பார்த்தபடி தன் குதிரை எங்கே என்று தேடினான். அப்பொழுது கொல்லன் 'உன் குதிரை கொல்லைப் புறம் நிற்கிறது. பழுவேட்டரையரும் அவர் ஆட்களும் இந்த வழியாகப் போனார்கள் அதனால் தான் நான் குதிரையை கொல்லைப் புறம் விட்டேன். அவர்கள் இளவரசர் கடலில் மூழ்கிவிட்டதாக துக்கச் செய்தி கொண்டு செல்கிறார்கள். மக்கள் பெரும் துயரம் கொண்டுள்ளார்கள் அத்துடன் பெரிய பழுவேட்டரையரும், சின்னப் பழுவேட்டரையரும் பெரும் கோபம் கொண்டுள்ளார்கள்' என்றான். இதைக் கேட்டு வந்தியத்தேவன் ஆச்சரியத்துடன், 'அப்படியா செய்தி' என்றபடி புறப்பட ஆயத்தமானான். கொல்லன், 'பழையாறை போவதற்கு முல்லையாற்றங்கரை வழியே போ' என்று வழி சொல்லி அனுப்பினான். அவன் குதிரை மிக மெதுவாக சென்றது. அவனும் தன் இதய தேவதை இளைய பிராட்டியை எண்ணி கானம் இசைத்தபடி களிப்புடன் சென்று கொண்டிருந்தான். அந்த வேளை கலகல என சிரிப்பொலி கேட்டு திடுக்கிட்டுப பார்த்தான். அது தேவராளன் கப்பலில் இருந்து தப்பி ஓடியவன். 'ஐயோ இவனிடம் மாட்டிக் கொண்டேனே! அவர்கள் இரகசியம் யாவும் எனக்குத் தெரியும் என்பதால் என்னை கொன்றே ஆக வேண்டும் என்று தீர்மானம் கொண்டிருப்பார்கள் இந்த இடத்தில் இருந்து எப்படித் தப்புவது? இவன் சோழ தேசத்திற்கு எதிராக சதி செய்யும் கூட்டத்தில் ஒருவன். கொல்லன் செப்பிட்ட வாள் கூட இவனுடையதே! ஏன் தப்பியோட வேண்டும்? இவனிடம் இருந்து மேலும் புதிய செய்திகள் பெறலாமே!' என்றபடி, அவனிடம் பேச்சுக் கொடுத்தான். 'எப்படியப்பா நீ இருக்கிறாய்? இங்கு எப்படி முளைத்தாய்?' என்றான் வந்தியத்தேவன். மேலும் 'நீங்கள் கூறிய இரகசியங்கள் யாவற்றையும் நான் மறந்து விட்டேன். அதை யாரிடமும் சொல்ல மாட்டேன்' என்றான். அதற்கு தேவராளன், 'நீ எங்கள் இரகசியத்தை யாரிடத்திலாவது சொல்ல நினைத்தால் உன் நாக்கு அறுக்கப்படும்' என்றான். வந்தியத்தேவனுக்கு நடுக்கம் பிடித்தது. தப்பியோட சுற்றுமுற்றும் பார்த்தான். அதற்குள் தேவராளன் அவன் குதிரையின் தலைக் கயிற்றைப் பிடித்து இழுக்க முயன்ற போது சற்று தூரத்தில் ஒரு மூடு பல்லக்குத் தெரிந்தது. 'ஓ பழுவூர் ராணி நந்தினியா?' என்றபடி வந்தியத்தேவன் அங்கு சென்று குதிரையில் இருந்து இறங்கினான். அதே கணம் தேவராளன் ஒரு குரல் கொடுக்க அந்தக் குரல் கேட்டு புதர்களில் ஒளிந்திருந்த ஆட்கள் பலர் வந்து வந்தியத்தேவனைக் கட்டி பல்லக்கில் போட்டனர். பின்னர் பல்லக்கைத் தூக்கினர். வந்தியத்தேவன் 'ஓ நந்தினியைப் பார்க்க வேண்டும், பல விடயங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்' என்று நினைத்தபடி மயங்கிவிட்டான். சிறிது நேரத்தின் பின் மயக்கம் தெளிந்து விழித்துக் கொண்ட போது ஒரு அறையின் கதவைத் திறந்து நந்தினி அங்கு வந்தாள். வைத்த கண் வாங்காமல் நந்தினியை அவன் பார்த்துக் கொண்டிருந்தான். அதற்கு காரணம் வர்ணிக்க எட்டாத அவள் அழகு, எதிர்பாராமல் இலங்கையில் அவன் சந்தித்த ஊமை ராணியை ஒத்த தோற்றம் அவனை வியப்பில் ஆழ்த்தியது. நந்தினி வணக்கம் தெரிவிக்க அவனும் வணக்கம் தெரிவித்தான். வந்தியத்தேவன் நந்தினியிடம், 'என்னை எதற்காக அழைத்து வரச் சொன்னீர்கள் ?' என்றான். 'நான் உமக்கு கொடுத்த முத்திரை மோதிரத்தை திருப்பி பெறுவதற்கே. அத்துடன் தஞ்சைப் பொக்கிஷ நிலவறையில் இருந்து நீ தப்பிவிட்டீர். இனி ஒரு தடவையும் அங்கு செல்லாதீர் ஏனென்றால் பலத்த பாதுகாப்பு உள்ளது. மற்றைய எனது எச்சரிக்கை, உமது நண்பன் கந்தமாறனை நீர் முதுகில் குத்திவிட்டு தப்பிப் போனீர் அவனை என் அரண்மனையில் வைத்து தேற்றி அனுப்பினேன். வைத்தியர் மகனை நீர் பிடித்துக் கொடுத்து விட்டு தப்பி இலங்கைக்கு ஓடினீர் அவனைப் பற்றி தெரிந்து கொள்ளும் ஆவல் இருந்தால் என்னிடம் கேளும். அதற்கு முன் இளவரசர் எங்கே? அவரை நீர் காப்பாற்றி எங்கே ஒளித்து வைத்துள்ளீர்?' என்றாள் நந்தினி. அப்பொழுது வந்தியத்தேவனிற்கு தன்னைக் கடத்தியதற்கான காரணம் புரிந்தது. 'இவள் என்ன பாடு படுத்தினாலும் எந்த ரகசியத்தையும் இவளிடம் சொல்லக் கூடாது. பெண்களின் அழகை ரசிப்பது தவறன்று. ஆனால் அவர்கள் அழகில் மயங்கி எம்மையும் பிறரையும் ஆபத்தில் விடுவது பெரும் குற்றம். இவள் அழகின் சுகம் எம்மை மெய் மறந்து, புத்தி மங்கி அவள் அடிமையாகவல்லவோ வைக்கிறது. தவம் செய்யும் முனிவர்கள் கூட தடக்கி அல்லவா விழுந்த கதை தெரியும். இவளின் மோகனப் பார்வையில் இருந்து எப்படி விடுபடுவது? ஆண்மை என்றாலே அதி சக்கி நிறைவு அல்லவா! அந்த சக்தியின் திறனை இந்த பெண் மோகம் நொறுக்கி விடுவதேன்! என் ஆண்மைக்கு ஒரு சவால் இந்த சுந்தர அழகில் என் ஆண்மை தோற்றுவிடுமா? அதைவிட இன்னுமோர் ஆடவன் மனைவியை தனதாக்குவது எம் ஆண்மைக்கு ஓர் அவமானம்' என்று மனதைத் திடப்படுத்திக் கொண்டு, 'தேவி இளவரசரைப் பற்றி மட்டும் என்னிடம் கேட்காதீர்கள் தாங்கள் யார், தங்களுக்கு ஏன் நான் சொல்ல வேண்டும்?' என்று வந்தியத்தேவன் கேட்டதும், நந்தினி கோபங் கொண்டு, கண்கள் சிவக்க 'நான் யார்? எதற்குப் பிறந்தேன்? என்று எனக்கே தெரியவில்லை. ஆனால் எனக்கு இறைவன் ஒரு கொடை தந்துள்ளான்.' என்றபடி ஒரு அற்புத வாளை தன் கையில் எடுத்தாள். ஒரு ராட்சசி போல், 'இந்தக் கொடையின் பொருள் நான் அறியேன் இந்த வாளை எந்தக் கொடியவனின் விஷ நெஞ்சிலாவது செலுத்த வேண்டும் என்பது இறை சித்தமோ? அல்லது என் மார்பில் என் கைகளாலே செலுத்தி குபு குபு என்று வரும் இரத்தத்தில் என்னை மூழ்கடித்து சாக வேண்டும் என்று சித்தமோ? யான் அறியேன் சமயம் வரும் போது அதை இறைவன் தெரியப்படுத்துவார் என்று நம்புகிறேன்' என்று ஆவேசக் கூத்து ஆடினாள் நந்தினி. வந்தியத்தேவன் அந்தக் கொல்லன் பட்டறையில் தான் கண்ட வாள் என்பதை நினைத்துக் கொண்டான். 'நான் வேலும், வாளும் கையில் ஏந்திய சந்ததியில் வந்தவன். இதைக் கண்டு பயப்படுவேனா?' என்றபடி 'தேவி சாந்தி கொள்ளுங்கள் இந்த அழகிய மலர் கைகளில் இந்த வாள் எப்படி? பெரிய பழுவேட்டரையர் எங்கே' என்றான். 'ஏன் கிழவரைக் கண்டால் உமக்குப் பயமா?' என்று நந்தினி கேட்க, 'எனக்குப் பயமா?' என்றான் ஏளனமாக வந்தியத்தேவன். இதைக் கேட்டு நந்தினி, 'உம் தைரியம் எனக்குப் பிடித்திருக்கிறது. என் கணவரும், பாத்திபேந்திரனும் பரிவாரங்களுடன் பக்கத்துக் கிராமத்திற்கு கண்ணகிக் கூத்தும், வேலனாட்டமும் பார்க்கப் போய் இருக்கிறார்கள். இளவரசர் பற்றி ஏதேனும் தகவல் இந்த வெறியாட்டம் ஆடுபவர்களிடம் இருந்து வரும், அதைத் தெரிந்து கொள்ளவென்று சென்றிருக்கிறார்கள். நான் உம்மை அழைத்து இளவரசரைப் பற்றி அறிந்து கொள்ள விரும்பினேன் தெரிவிப்பீரா?' என்றாள். அதற்கு வந்தியத்தேவன், 'தேவி என்னிடம் கேட்காதீர்கள் இதோ தாங்கள் எனக்கு அளித்த முத்திரை மோதிரம்' என்றபடி அதை நீட்டினான். நந்தினி அதைப் பார்த்து 'உம்முடைய நேர்மையைச் சோதித்தேன் என்னுடைய ஞாபகமாக அதை வைத்து கொள்ளும் வீராதி வீரரான தம் உடம்பில் அறுபத்தினான்கு புண்களைச் சுமந்த வீரரான பெரிய பழுவேட்டரையர் என்னைக் கண்டு பயம் கொள்வார். சின்னப் பழுவேட்டரையர் என்னிடம் பயந்து கொண்டு வருவார். சோழ ராஜ்ஜியத்தை ஆள விரும்பும் மதுராந்தக தேவர் என்னிடம் பயபக்தி கொண்டுள்ளார். அவருக்கு நாடாளும் எண்ணத்தை வருவித்தவளும் நானே! சோழ சக்கரவர்த்தி சுந்தர சோழர் என்னைக் கண்டு நடுங்கி, மயங்கி விழுகிறார். அஞ்சா நெஞ்சம் கொண்ட பாத்திபேந்திரப் பல்லவன், ஆதித்த கரிகாலனின் உற்ற நண்பன் என்னைக் கண்டு அடங்கி ஒடுங்கிப் போகிறான். அந்த ஆதித்த கரிகாலரும் அவ்வாறே. நாங்கள் சிறுவர்களாயிருந்த பொழுதே என்பேரில் அக்கறை பாராட்டுவார். அத்துடன் பயமும் கூடவே இருந்தது. என் வாழ்க்கை எப்படி எப்படி எல்லாம் மாறிவிட்டது. பாவம் பழுவேட்டரையர் அவரை நான் விரும்பித்தான் மணந்து கொண்டேன் என்று எண்ணி நான் இப்படி சதா காலமும் இருப்பேன் என்று சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கிறார். என் நெஞ்சில் எரியும் நெருப்பை அவர் அறியார்! ஐயா நீ காஞ்சிக்கு திரும்பிச் சென்று, உம் எஜமானை மறுபடியும் சந்தித்தால் எனக்காக ஒரு செய்தி சொல்லும். அதாவது நடந்தவை யாவும் நான் மறந்துவிட்டதாகவும், என்னைப் பார்ப்பதற்கு சிறிதும் பயப்பட வேண்டாம் என்றும் சொல்லுவீரா?' என்றாள் நந்தினி. அதற்கு வந்தியத்தேவன், 'தேவி நான் உயிரோடு திரும்பிப் போவதும், அவரைப் பார்ப்பதும் நிச்சயம் இல்லை. இருந்தும் அவருக்கு நான் சொல்ல வேண்டியது நிறையவே இருக்கிறது. என்னால் உறுதி சொல்ல முடியாது மன்னிக்க வேண்டும்' என்றான். 'மேலும் இலங்கையில் சில தினங்களுக்கு முன் தங்களைப் பார்த்தேன் இது சாத்தியமா?' என்றான். 'ஆமாம் என்னைப் போல் இருக்கும் அந்தப் பத்தினி யார்? என் பிறப்பு என்ன? எனக்கும் அவளிற்கும் என்ன தொடர்பு? அடுத்த தடவை அவளைப் பார்த்தால் அவளை என்னிடம் அழைத்து வாரும், என்றாள்.

கல்கி நந்தினியை ஒரு கற்பனைப் பாத்திரமாக வர்ணித்திருக்கிறார் என்றே சொல்லலாம் ஏனெனில், நந்தினியைப் பற்றி எந்த ஆதாரங்களும் இன்று வரை கண்டு பிடிக்கப்படவில்லை. அவள் யாருடைய மகள்? அவளுக்கும், ஆதித்த கரிகாலருக்கும் என்ன உறவு? என்று தெளிவாக எதுவும் சொல்லவில்லை. ஆனால் என்ன மர்மமோ ஊமை ராணியைப் போல் சாயல் கொண்டவள் என்று குறிப்பிடுகிறார். ஊமை ராணி கூட கற்பனைப் பாத்திரம் என்றிடலாம். ஆனால் தஞ்சையில் அமைந்திருக்கும் சிங்கள நாய்ச்சியார் கோவில் இரு வரலாற்றுக் கதை கூறுகிறது. அதில் ஒன்று இராஜராஜ சோழன் இந்த கோயிலைக் கட்டினார் என்கிறது. பொன்னியின் செல்வனில் ஈழத்து ராணி மந்தாகினி என்று அழைக்கப்படுகிறாள் இதனால் ஈழத்து ராணி கற்பனைப் பாத்திரமா? நந்தினி அவள் சாயலாக உள்ளதால் அவள் கற்பனை பாத்திரமா? என்று இன்றும் புரியாத புதிராக உள்ளது. நந்தினியுடன் உரையாடிக் கொண்டிருந்த வந்தியத்தேவன் மறுபடியும் முல்லையாற்றங்கரையில் நின்றான். யாரும் அவன் அருகில் இல்லை அவன் குதிரையை செலுத்திக் கொண்டு பழையாறை நோக்கிப் பிரயாணித்தான். பழையாறைக் கோட்டையின் பெரிய சுவர் அவனுக்குப் புலப்பட்டது. இளவரசர் கடலில் மூழ்கிவிட்டார் என்ற செய்தி மக்களிடையே வேகமாகப் பரவியது. இந்தப் பொய்ச் செய்தி இளையபிராட்டியை அடைவதற்கு முன் நான் அங்கு செல்ல வேண்டும். அந்தக் கொடும்பானார் இளவரசி வானதி உயிரையே விட்டுவிடுவாள். இந்தக் கோட்டைக்குள் பிரவேசிக்க எனக்கு வழியாதும் இல்லையே! என்றபடி தன் பார்வையை அங்குமிங்கும் செலுத்தினான். அப்பொழுது அவன் பார்வை ஒரு தங்க ரதம் வருவதைக் கண்டது. அந்த தங்க ரதத்தில் இளவரசர் மதுராந்தக தேவர், வேல் பிடித்த வீரர்கள், விருதுகளைச் சுமந்தவர்கள் புடை சூழ்ந்தபடி குதிரையில் ஏறி வந்து கொண்டிருந்தார். இவர் சோழ நாட்டை ஆண்ட சக்கரவர்த்தி சுந்தர சோழருடைய பெரிய தந்தை கண்டராதித்த சோழரினதும், மழவரையர் மகள் செம்பியன் மாதேவவியினதும் ஏக புதல்வன். இவர்கள் சிவபக்த சிகாமணிகள் கண்டராதித்தர் காலத்தில் அவர் மகன் மதுராந்தகன் சிறுவன் அதனால் அவனால் இராச்சிய காரியங்களுக்கு கை கொடுக்க முடியவில்லை. கண்டராதித்தர் தம்பி அரிஞ்சயன் முன்னின்றான் இவன் பல போர்களில் ஈடுபட்டு படுகாயங்கள் கண்டு மரணத்தை எதிர் நோக்கியிருந்தான். இவர் மகன் காளைப் பருவத்தினரானதாலும் சுந்தர சோழர் ஆட்சிக்கு வர நேர்ந்தது. கண்டராதித்தர், சுந்தர சோழர் பட்டத்திற்கு உரியவர் என்றும், அவரைத் தொடர்ந்து அவர் சந்ததியே பட்டத்திற்கு உரியவர் என்றும் குடிமக்களுக்கு அறிவித்தார். தன் மனைவியிடம் தன் மகன் மதுராந்தகரை சிவ பத்தியில் வளர்த்து சிவ கைங்கரியம் செய்ய ஈடுபட வைக்குமாறு கூறினார். இதனால் மதுராந்தகர் ஆட்சி செய்ய முடியவில்லை. இவர் ஒரு சிவபக்தனாக வளர்ந்து வந்தார். பழுவேட்டரையர்களாலும், நந்தினியாலும் சதி செய்யப்பட்டு இளவரசர் மதுராந்தகர் நாடாளும் ஆசை கொண்டு பழுவூர் கட்சியில் சார்ந்தார். செம்பியன் மாதேவி தன் கடமைகளை சரியாக செய்யும் பொருட்டு சுந்தர சோழரிடம் சொல்லி ஆதித்த கரிகாலருக்கு இளவரசர் பட்டம் கட்ட வைத்தார். அத்துடன் சுந்தர சோழருக்குப் பின் ஆதித்த கரிகாலர் ஆட்சிக்கு வருவது முறையாக இருந்தது. இந்த முறையில் திருப்தி கொள்ளாத பழுவேட்டரையர்கள் மதுராந்தகரிடம் அவன் தாயாரின் மனத்தை மாற்றும்படி கேட்டுக் கொண்டிருந்தார்கள். அதே வேளையில் தன் கணவரின் விருப்பத்தை நிறைவேற்ற திட்டமிட்டிருந்ததால் தன் குமாரன் தன்னுடன் இருக்க வேண்டும் என்று தஞ்சைக்கு செய்தி அனுப்பியதால் இளவரசர் மதுராந்தகர் பழையாறை வரும்படி நேர்ந்தது.




*(தொடரும்...)*

Jenita.Jaffna@gmail.com
**தொகுப்பு, எழுத்தாக்கம்:**
**மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை, மாதினி நிமலன்**

# மஹாகவி' பாரதியின் நினைவு விழாவில் கனடியக் கலைஞர்கள்

**- வீணை மைந்தன்**

"**பா**ரெங்கும் பாரதி" என மாதம் தோறும் கொண்டாடப்பட்டு வரும் பாரதி நினைவு நூற்றாண்டு நிகழ்ச்சியில் இம்முறை கடந்த சனிக்கிழமை (11-12-2021) 11ம் நாள் கனடிய தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. சிவ இளங்கோ ஆதரவுடன் கனடியத் தமிழகக் கலைஞர்கள் வழங்கிய ஆடல், பாடல் நிகழ்வுகள் என்னை மெய்சிலிர்க்க வைத்தது. இது ஒரு இணைய வழி நிகழ்வாகும்.

"பாரெங்கும் பாரதி"யை மீண்டும் நினைவுபடுத்தும் நிகழ்வாக சென்னை ஸ்ரீ கிருஷ்ணா இனிப்பு நிறுவனத் தலைவர் திரு முரளி - தினமலர் - தமிழ் மேட்ரிமோனி (திருமண ஒருங்கிணைப்பாளர்) ஆகிய மூன்று ஆளுமைகளும் இணைந்து இம்முறை கனடிய தேசத்தை முன்னிலைப்படுத்தி - ரொரன்ரோ CTC பேரவைக் ஊடாக நிகழ்ச்சிகளை ஒழுங்கு படுத்தியிருந்தனர்.

ஏற்கனவே இந்நிகழ்ச்சி முதலில் ஆந்திர - தெலுங்கு நகரங்கள் உள்ளிட்ட நகரங்களிலும் பின்பு, கோவாவிலும் தொடர்ந்து லக்னோ நகரில் வாழும் தமிழ்ப் பெருங்குடி மக்களாலும் கொண்டாடப்பட்டு இம்முறை (கனடிய) டொரண்டோ தமிழர்களை மையப்படுத்தி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கனடியத் தேசிய கீதம் - அகவணக்கம் என கனடியத் தமிழர்களின் மரபுப்படி நிகழ்ச்சிகளை திருமதி கே.வி சுபா (வழக்கறிஞர்) தொகுத்து வழங்கினார்.






பிரபல கர்நாடக சங்கீத கலைஞர் ஓ எஸ் அருண் தனக்கேயுரிய அழகிய குரலில் வாழ்க நிரந்தரம், வாழ்க தமிழ் மொழி என... மகாகவியின் தமிழ் மொழி வாழ்த்தை இசையாக வழங்கினார்.

விஜய் தொலைக்காட்சியின் சூப்பர் சிங்கர் பாடகியாக உலகம் அறிந்த ஒருவர் ரொரன்றோ நகர பாடகி சின்மயி சிவகுமார் "ஆசை முகம் மறந்து போச்சே.." "சுட்டும் விழிச் சுடர்தான் சூரிய சந்திரரோ..." என பாரதி பாடல்களை மிகவும் இனிமையான குரலில் பாவம், சுருதி, லயம் பிசகாமல் எல்லோரையும் மகுடிக்கு மயங்கிய நாகமாக்கிவிட்டார்.

கல்வித் தெய்வம் கலைமகளின் அருகில் நெருங்கி வளர்ந்துள்ளார். வாழ்த்துக்கள் தாயே!

அடுத்து செல்வி சுருதி பாலமுரளி மீட்டிய வயலின் இசையில் பாரதியாரின் ..."நிற்பதுவே நடப்பதுவே" பாடல் ஒலி யாவரையும் விழிகளை மூடி மெய்மறக்க வைத்தார். இவரும் சரஸ்வதியின் புதல்விகள் ஒருவரேயாவார்!

மேலும் ரொரண்ரோ நகரில் புகழ் வாய்ந்த நடனப் பள்ளியை பல வருடங்களாக நடத்தி வரும் திருமதி நிரோதினி பரராஜசிங்கம் ஆசிரியையின் மாணவிகள் எண்மர் கொட்டும் மழையில் நனைய வைத்து - இடி மின்னல்களுக்கூடாக திக்குகள் எட்டும் சிதறி ஓட வைத்தனர்.

"எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா.." என இயற்கையைப் பாடி ரசிக்க வைத்த பாரதியாரின் வரிகளுக்கு உயிர் ஊட்டி மெய் சிலிர்க்க வைத்த ஸ்ரீமதி நிரோதினி பரராஜசிங்கத்தின் மாணவிகள் யாவரும் எம்மை பரதக் கலையை வணங்க வைத்தனர்.

கலைமாமணி சித்ரா கோபிநாத் அம்மையாரின் "நின்னைச் சரணடைந்தேன்" என எங்களையும் அவரது இசைக்கு சரணடைய வைத்துவிட்டார். கலைமாமணி - மாலா சந்திரசேகர் பாரதியை நினைவூட்டி மயங்க வைத்தார். "ராம்ராஜ் வேட்டி" நிறுவனர் திரு ஏகே நாகராஜன் - பட்டிமன்ற ஆன்மிகச் சொற்பொழிவாளர் திரு கே சிவகுமார் ஆகியோரின் உரை ஆழமாக நெஞ்சில் பதிந்து "மகாகவி"யின் நினைவு நூற்றாண்டு நிகழ்ச்சி அவரது 139 வது பிறந்த நாளிலேயே (11-12-21) நடைபெற்றது. கிருஷ்ணா இனிப்பை போல் தொடர்ந்து - இனித்தது - தொடர்ந்தும் பாரெங்கும் இனிக்கும்.


DEBT FREE CREDIT SOLUTION

- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்
  We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money
- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்
  We shield you from your creditors and offer you a guranteed protection
- கடன் கொடுத்தவர்களின் அச்சுறுத்தல்கள், சட்ட நடவடிக்கைகளிலிருந்து பாதுகாப்பு
  We package a custom solution to protect all your assets including your hard earned property, vehicle, insurance, RRSP, TFSA, RESP, Shares
- உங்கள் சேமிப்பு, சொத்து, வாகனம், முதலீடுகள் பாதுகாப்பிற்கு உரிய வழிமுறை செய்தல்
  We arrange a sensible Repayment Plan minimizing potential lossesand avoiding bankruptcy

DF CREDIT SOLUTION
SETTLEMENT | CONSUMER PROPOSAL | BANKRUPTCY

Head Office
10 Milner, Business court, Suite 334
Toronto, ON M1B 3C6

416. 834. 7227
www.dfcstoday.ca
info@dfcs.today

Branches
Mississauga | Vaughan



ELANKEERAN THAN
Certified Insolvency Counsellor



## ஜீவன் முக்தி (பகுதி ) 134

# விழிப்பு மிகு மரணம்

ஞானிகளுக்கு ஒரு சஷணம் என்பது 100 வருடங்களாகவோ 1000 வருடங்களாகவோ அமையும். மனங்கடந்த, எண்ணங்களற்ற நிலையில் இருக்கும் ஒருவருக்குத்தான் சஷணத்தையே முடிவு செய்யும் ஆற்றல் இருக்கும்.

இல்லாவிட்டால் பிறப்பும் இறப்பும் கோமாவிலேயே நிகழ்ந்துகொண்டிருக்கும், பொதுவாக விழிப்புணர்வு குறைந்தவர்களுக்கு சலனம் மிக குறுகியதாக இருப்பதால், உயிர் உடலை விட்டு உடனடியாகத் தன்னை வேறு ஒரு உடலுக்குள் நுழைத்துக் கொள்ளும்.

அதனால்தான் ஒரு நொடிக்குள் நான்கைந்து குழந்தைகள் பிறந்துகொண்டே இருக்கிறார்கள். ஆனால் ஞானிகள் தங்கள் மரணத்தையே விழிப்பு மிகு மரணமாக, தேவைப்படும்போது, தேவைப்படும் நேரத்தில் நிகழ்த்துவார்கள். அதேபோல் நேர்ந்தெடுத்து அவதரிப்பார்கள். ஞானமடைந்தபின், மனங்கடந்த நிலையில் இருப்பதால், எண்ணங்களே அவர்களிடம் இருக்காது. உலகில் சில நல்ல காரியங்களை செய்ய மட்டும் நூலளவு மனதை ஞானிகள் அனுமதிப்பார்கள். அப்போது எண்ணங்கள் என்பதும் அவர்களின் கட்டுப்பாட்டில் இருப்பதால் சஷணம் என்பது வருடக்கணக்கில் இருக்கும்.

மனிதர்களுக்கு ஒரு சஷணம் என்பது ஒரு நொடியாக இருக்கலாம். ஞானிகளுக்கு ஒரு சஷணம் என்பது 100 வருடங்களாகவோ 1000 வருடங்களாகவோ, அவர்களின் முடிவுபடி அமையும். அப்போதுதான் மிகச் சரியாக அடுத்த பிறவி பற்றி திட்டமிட முடியும். எப்போது பிறக்கலாம். எந்த இடத்தில் பிறக்கலாம். எந்த பெற்றோரைத் தேர்ந்தெடுக்கலாம், எந்த சூழ்நிலையில், எந்தவிடத்தில் பிறக்கலாம் என்று மொத்த வாழ்க்கையையும் ஆற அமர வடிவமைத்துப் பிறப்பார்கள்.

உட்கார்ந்திருக்கும் காரை விட்டுவிட்டு மிக எளிதாக வெளியே வருவதுபோல, உடலைவிட்டு விட்டு, மிக எளிதாக வரும் அளவிற்கு சம்ஸ்காரங்கள் மற்றும் அவற்றின் பிடிப்புகள் இல்லாமல் உயர்ந்த விழிப்புணர்வு நிலையிலேயே மிகவும் இயல்பாக நடைபெறும் ஒரு ஜீவன்முக்தரின் மரணத்தைத்தான் cobcious death என்கின்றோம்.

### விழிப்பு மிகு ஜனனம்

யாராவது உங்களிடம் இப்போது நீங்கள் இந்த உடலை எடுத்த காட்சியை நினைத்துப் பாருங்கள் என்று சொன்னால் உங்களால் சொல்லமுடியாது. காரணம் அது நினைவிலிருக்காது. ஏனென்றால் சாதாரண பிறப்பில் ஒரு உயிர் அதன் தாயினுடைய கர்ப்பத்தினுள்ளே நுழையும்போது பழைய நினைவெல்லாம் துண்டிக்கப் பட்டுவிடும். ஆனால் எனக்கு அது நடக்கவில்லை. விழிப்புடன் பிறக்கும்போது வலியோ, வேதனையோ, மறுப்போ எதுவும் இருக்காது.

தூக்கத்திலிருந்து அப்படியே எழுந்து வெளியே வந்தால். கனவெல்லாம் துண்டிக்கப்படுகிறதா? முதல்நாள் நடந்ததெல்லாம் துண்டிக்கப்பட்டுவிடுகிறதா? இல்லையே! அதேமாதிரி நினைவு மறக்காமல், எந்தவிதமான மறதியும் ஏற்படாமல், கோமா நிலைக்குச் செல்லாமல் முழுவிழிப்புணர்வுடன் அனைத்தும் நிகழ்ந்தது.

இப்படி முழுவிழிப்புணர்வோடு, எப்படி ஒரு காருக்குள் நீங்கள் நுளைவீர்களோ, அப்படி உங்களால் தேர்வு செய்யப்பட்ட ஒரு உடலுக்குள் நுழைவதுதான் concious birth விழிப்பு மிகு ஜனனம். என்னுடைய ஜனனத்தை விழிப்புணர்வோடு படிப்படியாகப் பார்த்தேன். என்னுடைய அம்மாவின் நினைவின்படி, அன்று ஜனவரி மாதம் 1ம் தேதி, வருடம் 1978 வருடம் பிறந்தேன்.

திருவண்ணாமலையில் எப்போதுமே வருடப்பிறப்பிற்கு கோவிலுக்குச் செல்வார்கள். அண்ணாமலையாரை தரிசிக்க கோவிலுக்கு சென்று அங்கிருந்து பிரசாதம் வாங்கிக் கொண்டு வந்து கொடுத்திடுவார்கள். அந்த பிரசாதத்தை சாப்பிட்டவுடனேயே அம்மாவிற்குப் பிரவச வலி ஏற்பட்டிருக்கிறது. அண்ணாமலை கோயில் பிரசாத் உள்ளே சென்றவுடனேயே பிரசவ வலி ஏற்பட்டிருக்கிறது.

அம்மாவை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றிருக்கிறார்கள். ஒரு வலியும் இல்லாமல், எந்த பிரச்சினையும் இல்லாமல் ஒரு அரை மணி நேரத்திற்குள் பிறந்தேன் என்று அம்மா சொல்வார்கள். அவர்கள் சொன்ன உண்மை இது. சத்தியமிது.

அம்மாவின் கருத்துப்படி ஏறத்தாழ இரவு 12.32 மணியளவில் பிறந்தேன் என்று செல்கிறார்கள். இதில் ஒரு முக்கியமான விடையம். என்னுடைய கணக்குப்படி அன்று இரவு 11.45 மணிக்கு உடலுக்குள் நுழைந்தேன். ஆனால் குழந்தையாகப் பிறந்த நேரம் 12.32 மணி. இந்த உடலுக்குள் சக்தியாகச் சென்று, செட்டிலாகி சமநிலையடைந்து, சமநிலை சரியாகி வெளியே வருவதற்கு, நாற்பத்தி ஏழு நிமிடங்கள். நன்கு புரிந்து கொள்ளுங்கள். தூங்கி எழுந்தது போன்றதுதான் இந்த விழிப்புமிகு ஜனனமும்.

ஜனனத்தின் போது மூன்று காட்சியையும் பார்த்தேன். முதல் காட்சி: இருளை இருள் கவ்வியமாதிரியான உலகம் தெரிந்தது. இரண்டாவது காட்சி: திருவண்ணாமலையையும் தீபத்தையும் பார்த்தேன். அது தெரிந்த நேரம் இரவு 11.45 மணி. மூன்றாவது காட்சி: திருவண்ணாமலை தீபத்தைப் பார்த்த வினாடியில்தான் உடலுக்குள் நுழைந்திருக்கின்றேன்.

பின் குழந்தையாகி பிரசவம் நடந்தபோது இவர்கள் பார்த்த நேரம் 12.32மணி. ஏறத்தாழ 47 நிமிடங்கள் இடைவேளை. அப்படியென்றால் பிறப்பதற்குமுன் ஒரு சஷணம் முழுவதும் மனம் அமைதியாக இருந்திருக்கிறது. 47 நிமிடங்களுக்கு மனம் சாந்தமாக இருந்திருக்கின்றது. அடுத்த எண்ணம் வராமல் சாந்தமாக இருந்திருக்கிறது.

### செல்வத்தை ஈர்க்கும் இரகசியம்

ஆனந்தம் செல்வத்தை ஈர்க்கும் ஒரு அற்புதமான தலைப்பு இந்த தலைப்பை நான் சொல்லும்போதே சீடர் ஒருவர் செல்வம் ஆனந்தத்தை ஈர்க்கும் அது புரிகிறது. ஆனால் ஆனந்தம் எப்படி செல்வத்தை ஈர்க்கும். பொதுவாக ஆனந்தம் செல்வத்தை செலவு தானே செய்கிறது. செல்வத்தை செலவு செய்தபின்தானே ஆனந்தம் நமக்கு கிடைக்கிறது. அப்போது எப்படி ஆனந்தம் செல்வத்தை ஈர்க்கும்? என்று கேட்டார். சீடர் கேட்ட கேள்வி அவருக்கு மட்டுமல்ல அது நம் ஒவ்வொருக்குள்ளும் இருக்கின்ற கேள்வி செல்வம் ஆனந்தத்தை ஈர்க்கும் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

ஆனால் ஆனந்தம் செல்வத்தை ஈர்க்கும் என்பது சற்று ஆழமாகப் புரிந்து கொள்ள வேண்டிய ஒரு சத்தியம். சற்று ஆழ்ந்து பார்த்தால் அது சத்யம் மட்டுமல்ல. அது சாத்தியம் என்பதும் புரியவரும். நமக்குள் ஆழ்ந்து பார்த்தால் மட்டுமே நம்மால் உணர்ந்து கொள்ள இயலும்.

### ஆனந்தம் செல்வத்தை ஈர்க்கும்

ஆனந்தம் செல்வத்தை ஈர்க்கும் என்பதை நேரடியாக, முறையாகப் புரிந்து கொள்வோமானால் ஆனந்தம் செல்வத்தை ஈர்க்கும்.

நமக்குள் ஆழ்ந்து பார்த்தால் மட்டுமே புரந்துக் கொள்ள முடிகின்ற சத்தியம் இது. பதஞ்சலி முனிவர் இயற்றிய யோக சூத்திரத்திற்கு சுவாமி விவேகானந்தர் உரை எழுதியுள்ளார். அதில் நமது நாட்டில் இந்திய கலாச்சாரத்தில் மட்டும்தான் ஒருவர் எதையாவது செய்வதற்கு முன் செய்வதற்கு முன் செய்யும் முதல் வேலை கண்களை மூடி அமர்ந்து தனக்குள் சில சக்தி மாற்றங்களை முதலில் ஏற்படுத்திக் கொள்வதுதான்.

மற்ற நாடுகளில் எதையாவது சாதிக்க வேண்டும் என மனிதன் நினைத்தால் அவன் செய்கின்ற முதல்வேலை அதை சாதிப்பதற்கான தொழிலைத் தொடங்கி, அந்தத் துறையில் கல்வி கற்க ஆரம்பிப்பார். அந்த துறையில் ஏற்கனவே அனுபவம் இருக்கின்ற முதியவர்களுடன் பழகத் தொடங்குவார்.

ஆனால் நமது நாட்டில் எந்த துறையில் முன்னேற வேண்டும் என்றாலும் முதலில் நாம் செய்கின்ற வேலை, கண்களை மூடி அமர்ந்து இறைவனை தியானித்தல், பூஜை செய்தல் எந்தத் துறையாக இருந்தாலும், எந்த வேலையாக இருந்தாலும் இதுவே நாம் செய்கின்ற முதல் வேலை.

புதுமனை புகுவிழாவானாலும், இல்லறத்தில் நுழைவதாக இருந்தாலும், அல்லது புதிய வியாபாரத்தைத் துவங்குவதாக இருந்தாலும், எதைச் செய்தாலும் மக்கள் செய்யும் முதல் வேலை கண்களை மூடி அமர்ந்து தனக்குள் சில சக்தி மாற்றங்களை ஏற்படுத்தும். காலப்போக்கில்தான் அவை சடங்குகளாக மாறிவிட்டன. எந்த செயலை செய்வதற்கு முன்பும் செய்கின்ற விஷயம் அமர்ந்து நமக்குள் ஒரு புதிய சக்தியை உருவாக்குகின்றோம்.

தியானத்தின் மூலமாகவோ, பிராணாயாமத்தின் மூலமாகவோ, புதிய சக்தியை உருவாக்குகின்றோம். தனக்குள் ஏற்படுகின்ற சக்தி மாற்றம் வெளியில் நடைபெறும் நிகழ்ச்சிகளையும் பாதிக்கும் என்பது தெரிந்ததால்தான் இந்தி நாட்டின் கலாச்சாரத்தில் முதல் வேலையாக எதைச் செய்யத் துவங்கும் முன்பும் தனக்குள் சக்தி மாற்றத்தை உண்டு செய்கிறார்கள் என விவேகானந்தர் கூறுகின்றார்.

### தியானம் செய்தால் மழை வருமா?

ஒரு அழகான ஜென் ஞானியின் கதை. ஒரு நாட்டில் நீண்ட காலமாக மழை பொழியவில்லை. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மேல் மழை பொழியாத ஒரு இடம். பக்கது நாட்டில் வசிக்கின்ற ஒரு ஜென் ஞானியைப் பற்றிய செய்தி அந்த நாட்டிற்குள் பரவியது. அந்த ஞானி இங்கு வந்தால் மழை பொழியும் என்கின்ற கருத்து பரவியது. மக்கள் எல்லோரும் அரசரிடம் சென்று பக்கத்து நாட்டில் இருக்கும் ஞானியை அழைத்துவர வேண்டினர்.

அரசன் பக்கது நாட்டிற்குச் சென்று ஞானியை அழைத்தார். ஞானியும் அழைப்பை ஏற்று வர ஒப்புக் கொண்டார். ஞானி அந்த ஊருக்குள் வந்து ஒரு அரை மணி நேரம் தியானம் செய்தார். தியானம் செய்து முடிந்தவுடன் மழை பொழிய ஆரம்பித்தது. மழை ஊரையே நிரப்பியது. மக்கள் அந்த ஞானியை சூழ்ந்துகொண்டு எப்படி மழையை வரவழைத்தீர்கள்? என்ன மந்திரம் செய்தீர்கள்? உங்களால் எப்படி மழையை வரவழைக்க முடிந்தது? இயற்கையையே ஆளும் கடவுளா நீங்கள்? என்றெல்லாம் கேட்க துவங்கினார்கள். ஞானி மிக அழகாகச் சொன்னார்.

இயற்கையை ஆளும் கடவுள் நான் அல்ல. மழையை வரவழைக்கவோ செல்ல வைக்கவோ எனக்குத் தெரியாது. எனக்குத் தெரிந்த விஷயம் ஒன்றே ஒன்று மட்டும் தான் எனக்குள் நடக்கும் சக்தி ஓட்டத்தை என்னால் சகச்சீராக்க முடியும். எனக்குள் நடக்கும் சக்தி ஓட்டத்தை என்னால் முழுமையாக்க முடியும். நான் இயற்கையை கட்டுப்படுத்தும் கடவுள் அல்ல. எனக்குள் நடக்கும் சக்தி மாற்றங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் ஞானி. எனக்குள் நடக்கும் சக்தி மாற்றங்களை நான் தெளிவாக்கும்பொழுதே சுற்றி இருக்கும் இயற்கையின் சக்தி மாற்றமும் தானாகவே தெளிவாகின்றது என்று பதில் சொன்னார்.

நாம் ஒரு தனித்தீவு அல்ல. நமக்குள் ஏற்படும் ஒவ்வொரு மாற்றமும் நேரடியாக பிரபஞ்சத்தை பாதிக்கின்றது. நேரடியாக பிரபஞ்சத்தில் நேரடியாக மாற்றத்தை உண்டாக்குகின்றது. அதனால்தான் அந்த ஜென் ஞானி தனக்குள் இருக்கும் சக்தியை சமச்சீராக்கும்பொழுது, இயற்கையான இந்த பிரபஞ்ச சக்தியும் சமச்சீராகி இயற்கையிலேயே இந்த வானம் பொழியத் துவங்குகின்றது. ஆகாயம் பூமியை வாழ்த்தத் துவங்கிவிட்டது. அந்த ஜென் ஞானி இன்னும் ஆழமாக விளக்குகிறார். இந்த இடத்தில் வந்து அமர்ந்தவுடன் என் மனத்திற்குள் ஏற்பட்ட எண்ணங்களையும் எண்ண ஓட்டங்களையும் அமைதிக்குள் எடுத்துச் சென்று உடலுக்கும் எனக்கும் நடுவில் ஒரு இனிமையான, அன்பான ஆனந்தமான ஒரு தொடர்பை ஏற்படுத்தினேன்.

அவ்வாறு ஏற்படுத்திய அந்த இனிமையான உணர்வு ஆனந்தமான உணர்வு உடலில் மட்டும் உடலோடு நின்று உலகத்திற்குள்ளும் பாய்ந்து இந்த இயற்கையையும் சமச்சீராக்கியது என்றார். உணர்வுகளை சக்தியோட்டத்தை மாற்றுவதால் மழை வர வைப்பது மட்டுமல்ல நாட்டை வளமாக்குவது மட்டுமல்ல உங்களையே வழமாக்குவது சாத்தியம்.

### பண திவாலைவிட மோசமானது சக்தி திவால்

எண்ணங்கள் பணத்திற்குச் சமம். உங்களுடைய மனோ சக்தி பணத்திற்கு சமம். எப்படி பணத்தை அனாவசியமாக, ஊதாரித்தனமாகச் செலவு செய்தால் பணரீதியாக திவால் ஆகிறோமோ அதேமாதிரி நம்முடைய சக்தியை ஊதாரித்தனமாகச் செலவு செய்தால் சக்தி ரீதியாக திவால் ஆகிவிடுவீர்கள். பணரீதியான திவால் எப்படி வாழ்க்கையில் நடக்கின்றது. அதுபோலவேதான் சக்திரீதியான திவால் நடக்கின்றது.

சக்திரீதியான திவால், பணரீதியான திவாலை விட மோசமானது. பணம் திவாலானால் முதலுக்குத்தான் மோசம். சக்தி திவாலானால் உங்களுக்கே மோசம், சக்தி திவாலாகி கொண்டிருக்கும் ஒருவரால் பணத்தை ஈர்க்க முடியாது.

யாராவது உங்களுக்கு 1000 ரூபாய் பெறுமானமுள்ள வேலை செய்தால் ஆயிரம் ரூபாய் அவருக்குச் சம்பளமாய் கொடுப்போம். புத்திசாலியாக இருந்தால் 900 ரூபாய் சம்பளமாகக் கொடுப்போம். உண்மையிலேயே அளிக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தால் 1000 ரூபாய் சம்பளம் கொடுப்போம்.

இது நம்முடைய மனப்பழக்கம். ஆனால் அதே மனிதர் 1000 ரூபாய் பெறுமானமுள்ள ஒரு தவறை செய்துவிட்டாரானால் எந்த அளவிற்கு கோபத்தை அவர்மேல் கொட்டுவோம். 10000 ரூபாய் பெறுமானமுள்ள கோபத்தையாவது அவர்மேல் கொட்டுவோம். அவர்மேல் விழுந்து என்னென்ன முடியுமோ அத்துணையையும் செய்துவிடுவோம். எப்படி 1000 ரூபாய் வேலை செய்தவருக்கு 10000 ரூபாய் பணம் கொடுத்தால் நீங்கள் திவால் ஆகுவீர்களோ, அதேமாதிரி 1000 ரூபாய் தவறு செய்தவருக்கு 10000 ரூபாய் கோபத்தை பொழிந்தீர்களானால் சக்திரீதியாக திவால் ஆகிவிடுவீர்கள்.

உங்களுக்குள் இருக்கின்ற கோபம், காமம், ஆவேசம், எல்லாமே சக்தி, அதை முறையாக உபயோகித்தோமானால் வாழ்க்கையிலே பொருள் வளமோ, சுகமோ, அடைந்து இனிமையாக வாழ்க்கையை நடாத்தலாம்.

அப்படியில்லாமல் முறை தவறி தேவையில்லாத இடங்களில் பொழிவது, வீணடிப்பது என்று செய்ய ஆரம்பித்தோமானால் இயற்கையிலேயே உங்களின் சக்தி திவால் ஆகிவிடும். அப்புறம் செலவு செய்வதற்கு சக்தி இருக்காது. இயற்கையாக பணம் திவாலாவதுபோல் சக்தியும் திவாலாகிவிடும். இந்த சக்தி திவாலை சரி செய்ய முடியும். உள்ளுலக செல்வத்தை அதிகரிப்பதால் மட்டுமே வெளியுலக செல்வத்தை அதிகரிக்க முடியும்.

நம்முடைய எண்ண ஓட்டங்களும், மன ஓட்டங்களும் தெளிந்த ஒரு பாதையை நோக்கிச் செல்லும்போது இந்த ஆன்மீக கருத்துக்களை, வாழ்வியல் தீர்வுகள் கருத்துக்களை உள்வாங்கும்போது சக்தி விரையம் ஆவது தவிர்க்கப்படுகின்றது.

பலமுறை நம் பக்தர்கள் மீண்டும், மீண்டும் வந்து சொல்வதுண்டு. 'உண்மையிலேயே தியானம் செய்ய ஆரம்பித்த பிறகு 6 மாதத்தில் என்னுடைய வியாபரம் மிகப்பெரிய வளர்ச்சிக்கு வந்து விட்டது. இது என்ன மந்திரம்? இது என்ன மாயத்தினால் இப்படி இது நடக்கின்றது?'. எந்த மந்திரமும், மாயையும் இல்லை. உங்களுக்குள்ளே தெளிவு வரும்பொழுது செல்வத்தை ஈர்ப்பதற்கும், அனுபவிப்பதற்கும் என்னென்ன குணங்கள் வேண்டுமோ அத்துணையும் உங்களுக்குள் வளரத்துவங்குகிறது.

முதல் விஷயம் உங்களுடைய உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் செல்வத்தை ஈர்க்கும் அனுபவமாகவும் உடலும், மனமும் தயாராகிறது. இரண்டாவது உங்களுக்குள் உருவாகின்ற ஆனந்த சக்தி, படர்க்கை, தன்மையிலும், முன்னிலையிலும் அது எதிரொலிக்கும்பொழுது, உங்கள் உடலும் மனமும் தயாராகின்றது. படர்க்கையில் அது பரவும்பொழுது உங்கள் வாழ்க்கையில் எதுவெல்லாம் வேண்டுமென்று நினைக்கின்றீர்களோ, அதே மாதிரியான நிகழ்ச்சிகளையும் அதற்கு ஏற்றாற்போல் நபர்களையும் உங்களை நோக்கி ஈர்க்கும்.

நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் வங்கியில் பணத்தை சேமித்து வைப்பது போல மனத்தில் உணர்வில் சக்தியை சேமிக்க வேண்டும். ஆனந்தத்தை உள்ளுலக செல்வத்தை ஏதாவது ஒரு வகையில் அதிகரித்தால் வெளியுலக செல்வம் தன்னால் ஈர்க்கப்படும்.

இது ஏதோ ஒரு கருத்து என்று நினைத்துவிடாதீர்கள். என்வாழ்க்கையில் நான் கண்ட அனுபவம். ஆனந்தம் செல்வத்தை ஈர்க்கும். உங்களின் துக்கம்தான் நஷ்டத்தை ஈர்க்கும். துக்கத்தை, ஆனந்தமாக்கினாலே செல்வத்தை ஈர்க்கும்.

**நித்தியானந்த பரமசிவம் மகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய அமுத மொழிகள். மேலதிக தொடர்புகளுக்கு: (416) 880-8585**

Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற

# கனகாம்பிகை

தங்கநகை அடகுமாடம்

KANAGAAMBIKAI

PAWN BROKERS





25 வருடங்கள்

உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி வீதத்தில் தங்க நகை அடவு

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய ஒரே கூரையின் கீழ்

# கனகாம்பிகை

பவுண் வங்கி

உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...

2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2

416 269 7198

# அன்பின் தொனி - 632

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**பரிசுத்தராய் இருங்கள்** - Be Holy

**பாவம் மனிதனுடைய வாழ்க்கையைப் பாதிக்கிறது**

**3. பாவம் சாத்தான் நம்மைக் குற்றம்சாட்ட இடம் கொடுக்கிறது**

இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர்மேல் குற்றஞ் சுமத்தும்பொருட்டு அவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் தாழத்தள்ளப்பட்டுப்போனான். - **வெளிப்படுத்தல் 12: 10**

**4. பாவம் மரண தண்டனையை எதிர்பார்க்கிறது**

பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும். - **எசேக்கீயேல் 18: 4**
பாவத்தின் சம்பளம் மரணம், - **ரோமர் 6: 23**
எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி, - **ரோமர் 3: 23**

**பாவத்தின் பிடியிலிருந்து விடுதலை வேண்டும்**

பாவத்தின் விளைவுகளை அறிந்த நாம் அதிலிருந்து விடுதலைபெற எம்மாலான சகல முயற்சிகளையும் எடுத்து, ஒரு பரிசுத்த வாழ்க்கை வாள முற்படுவோம்.

**மனிதனுக்கு வேண்டிய உண்மை**

தேவனுடைய உண்மைக்குமுன் நாம் எம்மாத்திரம்? அவருடைய உண்மைக்கும் உத்தமத்திற்கும் பாத்திரராக வேண்டுமாயின் அவர் எமது பாவங்களைப் போக்க எமக்காக இவ்வுலகிற்கு அனுப்பிய தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை எமது சொந்த இரட்சகராக ஏற்று வாழ்வதன்முலம், அவருடைய கிருபையால் அவருடைய உண்மைக்குள் நாமும் பிரவேசிக்க அவர் அனுகூலம்செய்வார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எமக்கு வாக்குத்தத்தம் பண்ணிய தேற்றரவாளரான பரிசுத்த ஆவியானவர் எமக்குள் வரும்போது அவர் எம்மை சகல சத்தியத்திலும் வளிநடத்துவார்.

நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன், நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும், நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார், நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன். அவர் வந்து, பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக்குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார். - **யோவான் 16: 7-8**

**பிரித்தெடுக்கப்பட வேண்டும்**

பரிசுத்த ஆவியானவாமூலம் நாம் நிதிமான்களாகிறோம். மேலும் தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் பசுத்தமாக் கப்பட்ட நிலையில், பிரித்தெடுக்கப்பட்ட ஒரு வாழ்க்கை வாழவேண்டும். நாம் இவ்வுலகத்தில் வாழ்ந்தாலும், இவ்வுலகத் தாரல்லாத பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கைக்கு அழைக்கப்பட்டும், நியமிக்கப்பட்டுமிருக்கிறோம்.

நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும், நீங்கள் உலகத்தாராயிராதபடி யினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது. - **யோவான் 15: 19**

நான் உம்முடைய வார்த்தையை அவர்களுக்குக் கொடுத்தேன், நான் உலகத்தானல்லாததுபோல அவர்களும் உலகத்தாரல்ல, ஆதலால் உலகம் அவர்களைப் பகைத்தது. நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். நான் உலகத் தானனல்லாததுபோல, அவர்களும் உலகத்தாரல்ல. - **யோவான் 17: 14-16**

நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்குத் தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம். அவைகளை நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்தஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந் தப்படுத்திக் காண்பிக்கிறோம். - **1 கொரிந்தியர் 2: 12-13**

விபசாரரே, விபசாரிகளே, உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான். நம்மில் வாசமாயிருக்கிற ஆவியானவர் நம் மிடத்தில் வைராக்கிய வாஞ்சையாயிக்கிறாரென்று வேதவாக்கியம் வீணாய்ச் சொல்லுகிறதென்று நினைக்கிறீர்களா? - **யாக்கோப் 4: 4-5**

தேவனுக்கென்று பிரித்தெடுக்கப்பட்டிருக்கும் இருதயத்தையே தேவன் ஒவ்வொரு கிறிஸ்தலனிடத்திலும் எதிர்பார்க்கிறார். அவிசுவாசிகறோடு ஒரே நுகத்தில் பிணைக்கப்படாமலும், உலகத்திலுள்ளவைகளில் அன்புகூராமலும், பாவ மில்லாத பரிசுத்த ஜீவியத்திலும், தேவ கற்பனைகளுக்கு கீழ்ப்படிந்து வாழ்கிற வாழ்க்கையையும் தேவன் நம்மிடம் காணபட விரும்புகிறார். அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக, நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது? தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று, தேவன் சொன்னபடி, நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே. ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லு கிறார். அப்பொழுது, நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார். - **2 கொரிந்தீயர் 6: 14-18**

*தொடரும்...*



***மொன்றியால் வீணைமைந்தன்*** **எழுதுகின்றார்**




***அத்தியாயம் - 02***

நேற்று முன்தினம் (1.12.21) பின்னிரவில் "நடன நடிகர்" பிரபுதேவா நாயகனாக நடித்த "பொன் மாணிக்கவேல்" திரைப்படம் பார்த்தேன். கிளைமாக்ஸ் காட்சிக்கு முன் தீயவர்களை ஒழித்துக்கட்டும் காட்சியோடு பின்னணியில் பாரதி ஐயாவின் நெருப்பு வரிகள் இடம் பெற்றதையும் இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும். 2021லும் பாரதி பாடல் சினிமாவில் இடம் பெறுகிறதே! பாரதி ஐயா என்றும் வாழ்ந்து கொண்டேயிருப்பார் இருக்கிறார்!

"அக்னி குஞ்சொன்று கண்டேன் - அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்
வெந்து தணிந்தது காடு தழல்
வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ?
தத்தரி கிட தத்தரி கிட தித்தோம்.. எனப் பின்னணி இசையோடு துஷ்டர்களை துவம்சம் செய்கிறார் (பிரபுதேவா) பொன்மாணிக்கவேல்!

ஆமா! போன வாரம் எங்க நிறுத்தினேன்? நினைவிருக்கா... ஜனவரி 12 1947 இல் வெளியான படத்திலேயே பாரதி ஐயாவின் பாடல்கள் முதன் முதலாக இடம் பெற்றன! அது என்ன படம்? அதற்கு முன் சில தகவல்கள்..

தமிழன்னை பெற்றெடுத்த எங்கள் ஒப்பற்ற மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் பிறந்த நாள் நினைவில் (139வது பிறந்த நாள் டிசம்பர் 11) இன்று அவரின் பாடல்களை தாங்கிவந்த படங்கள் குறித்த ஒரு சிறு அலசலை கொடுக்கலாம் என்று முனைந்ததன் வெளிப்பாடு இதுவாகும்!

மஹாகவி ஐயாவின் பாடல்கள் திரைப்படங்களில் இடம் பெற முன்பே மேடை நாடகங்களில் பாடி புகழ் பூத்தவையாகும். குறிப்பாக எஸ் ஜி கிட்டப்பா, நாடகக் கலைஞர் விஸ்வநாததாஸ் போன்றோர் தம் நாடகங்களில் பாரதி பாடல்களைப் பாடி பரப்புரை செய்தார்கள். சுதந்திர தாகம் தணியாமல் வளர்த்தனர். 1931 ஆம் ஆண்டு பாரதியாரின் பாடல்களை ஒலிப்பதிவு செய்யும் உரிமையை ஏவிஎம் செட்டியார் ரூபாய் 400 கொடுத்து தனியார் ஒருவரிடமிருந்து வாங்கினார்.

மகாகவி பாரதியார் 1921இல் அமரராகும் வரை தமிழ் சினிமா, அறிமுகமாகவில்லை. பின்னாளில் 1931இல் தமிழ் சினிமாவின் முதல் பேசும் படமான "காளிதாஸ்" வெளியானது.



தனது மறைவிற்குப்பின் தன்னால் எழுதப்பட்ட பாடல்கள் கவிதைகள் பிற்காலத்தில் தயாரிக்கப்பட்ட தமிழ்ப்படங்களில் இடம்பெறும் என்று பாரதியார் நினைக்கவும் இல்லை.

".. காசி நகர்ப்புலவர் பேசும் உரைதான்
காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்",
"வானையளப்போம் கடல் மீனையளப்போம்",
"சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்..."
என்றெல்லாம் தீர்க்கதரிசனமாக அறிவியல் வளர்ச்சி பற்றி கனவு கண்டு பாடியவர், வெள்ளித்திரையில் ஒலி ஒளி காட்சிகள் பற்றி ஏனோ சிந்திக்கவில்லை!




ஆனாலும், அவரது பாடல்களும், கவிதைகளும் காலங்கடந்து எக்காலத்திற்கும் - எல்லா விதமான உணர்வுகளை வெளிப்படுத்தும் ஜீவனுள்ள எழுத்துக்களாகும்.

அதனால் தான், தமிழ் சினிமா கதைகளில் இடம்பெறும் கதை மாந்தர்களுக்கான உணர்ச்சி வெளிப்பாடுகளை காட்சிப்படுத்தும் நிகழ்வுகளைச் சித்தரிப்பதற்கான பாடல்களாக அமைந்துள்ளன.!

1944 ஆம் ஆண்டு தமிழ் எழுத்தாளர் மாநாடு கோவையில் நடந்தது. அதில் பங்கு கொண்ட அ .வெ .ரா, கிருஷ்ணசாமி ரெட்டியார், தனி நபரிடம் இருந்து பாரதி பாடல்களை மீட்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தனர். பலரது ஆதரவோடு அவ்வை டி கே சண்முகம், எழுத்தாளர் நாரண துரைக்கண்ணன் உள்ளிட்ட ஏராளமானோர் இதற்கு தங்கள் ஆதரவை வழங்கினர்.

பாரதி விடுதலைக் கழகத்தார் அப்போதைய முதல்வர்(இவரே சுதந்திர இந்தியாவில் தமிழகத்தின் முதலாவது முதல்வராவார்) ஓமந்தூர் ரெட்டியார் சந்தித்து பாரதி பாடல்களை நாட்டுடைமையாக்க வேண்டும் என்ற விண்ணப்பத்தை அளித்தார்கள். அப்படிச் செய்வதற்கு முன் வாரிசுகளிடம் இருந்து இதற்கான ஒப்புதல் கடிதத்தை பெற வேண்டும் என்று சொன்னார் ஓமந்தூரார். இந்தச் செய்தி டி எஸ் சொக்கலிங்கம் அவர்கள் மூலமாக நாரண துரைக்கண்ணனை அடைந்தது. பாரதி குடும்பத்தாரை நன்கறிந்த பேராசிரியர் சீனிவாசன் ராகவனுக்கு உடனே தந்தி கொடுத்து வரவழைத்தார்கள்.

கலைஞர், அவ்வை டி கே சண்முகம், திருச்சி வானொலி நிலையத்தை சேர்ந்த கணபதி, நாரண துரைக்கண்ணன் ஆகிய ஐவர் அடங்கிய குழு, பாரதியாரின் பத்தினி செல்லம்மா அம்மையாரை பார்ப்பதற்காக சென்றது.

செல்லம்மா அம்மையாரிடம் விடயம் விளக்கிச் சொல்லப்பட்டது. மகிழ்ச்சியுடன் சம்மதித்தார்கள். ஒப்புதல் கடிதத்தையும் எழுதிக்கொடுத்தார் அம்மையார்.

பாரதியின் பாடல்களைத் திரையில் பயன்படுத்த உரிமம் பெற்ற ஏவிஎம் நிறுவன அதிபர் மெய்யப்ப செட்டியார், பின்னர் அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க அவற்றை நாட்டுடைமை ஆக்கினார்.

இதனால் பல்வேறு தயாரிப்பாளர்களும் பாரதி பாடல்களைப் பயன்படுத்த முடிந்தது. மேற்கண்ட குறிப்புகளை எழுத்தாளர் ஹரிகிருஷ்ணன் அவர்கள் தன் வலைத்தளத்தில் பதிவு செய்துள்ளார்.

சுதந்திர இந்தியா மலர்ந்த பொன்னாளான 1947 ஆகஸ்ட் 15 ஆம் நாளன்று மகாகவி சுப்பிரமணிய பாரதி கண்ட கனவை நினைவூட்டும் பாடலான "ஆடுவோமே... பள்ளு பாடுவோமே.." என்ற பாடலைத்தான் அகில இந்திய வானொலியில் தனது கம்பீரக் குரலால் இசைத்து அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தவர் பாடகி டி கே பட்டம்மாள் அம்மையாராகும்.

மகாகவி பாரதியார் அமரராகி சுமார் 26 ஆண்டுகளுக்குப் பிறகு 1947 இல் ஏவிஎம் தயாரிப்பில் வெளிவந்த "நாம் இருவர்" படமே கவிஞரின் பாடல்களைக் கொண்டு வெளியான முதலாவது பேசும் படமாகும்.

"நாம் இருவர்" படத்திற்கு இசையமைத்தவர் ஆர்.சுதர்சனம். இடம்பெற்ற பாரதி பாடல்களாவன..

1. விடுதலை.. விடுதலை.. ( பாடியவர் டி ஆர் மகாலிங்கம்)
2. ஆடுவோமே.. ( டி கே பட்டம்மாள்)
3. வெற்றி எட்டுத்திக்கும்.. (டி கே பட்டம்மாள்)
4. சோலை மலரொளியோ... ( டி ஆர் மகாலிங்கம் - டி எஸ் பகவதி)
5. வாழிய செந்தமிழ்.. (டி எஸ் பகவதி - தேவநாராயணன்)

அதே 1947 இல் வெளியான புகழ்பெற்ற அடுத்த படத்திலும் நான்கு பாடல்கள் மகாகவி அவர்களுடையதே! அது என்ன படம்..?

அடுத்த இதழில் தொடரும்..

- வீணை மைந்தன்

# கடந்தவையும் கடப்பவையும் (14)

- உமா மோகன் -

அங்கும் ஆண்கள் மட்டுமே பிணைக்கப் பட்டனர்,

பிடித்துப் பிடித்து இணைக்கும் போது - தாய்மார்
வடித்த கண்ணீர்க்கு அளவே இல்லை அவர் - தலையில்

அடித்து அடித்து அழுத காட்சி - என்றும்
மனத்தை விட்டு அகலாக் காட்சி

பிடித்துப் பலரை இணைக்கும் போது
தடுக்க முயன்ற தாய்மார்களை

அதட்டும் குரலில் அடங்க வைத்து - தனியே
பிதற்றுபவராய் ஆக்கி விட்டார்

பேரலை ஒன்று ஊருக்கள் புகுந்து
பெரு நாசம் செய்து மீண்டது போல

அன்றைய நாட்கள் கழிந்தன அன்று.

முன்னேறிப் போனவர் பின்வாங்க மாட்டார்
என்றெண்ணி எல்லோரும் தம்மூர் திரும்பினர் - அன்று

அவரவர் பாதையில் ஆயிரம் காட்சிகள்
உழுதலும் உடைத்தலும் எரித்தலும் - மேலும்

சூடு பட்டுச் சிதைந்ததும் மிதிபட்டு நசிந்ததும் - என
பாடுபட்டுக் சேத்து வைத்த உடைமைகள் எத்தனையோ

வீடுகட்குள் வாழ்ந்த உன்னத உயிர்களோடு சேர்ந்து
அடையாளம் தெரியாது உருக்குலைந்து போயின

மீண்டு போய் இருந்த போதும் - அங்கு
சாந்தமாய் இருந்ததில்லை - சாத்தனாரின்

சக்கரவாளக் கோட்டத்துள் உட்புகுந்தாற் போல்ப் பீதியை
எப்பொழுதும் மனம் உணர்ததுண்டு - அங்கு

அடிக்கடி குரங்குகள் கூட்டிச் செல்ல
பிடித்ததை கழுகுகள் குதறித்தின்ன என

அவலங்கள் ஆங்காங்கு அதிகரிக்க -
கரும் புகைகளும் ஆங்காங்கே அவரை மறைக்க

மூன்று பக்கமும் முழக்கங்கள் ஆர்ப்பரித்து
மூச்சு விடமுடியா நிலை வரவே

பாவம் எனப் பார்த்து நல்ல
நேசம் அதை வேண்டி அயல் நாடு

நீள் கழுத்துச் சிவிங்கிகளை நின்மதிக்காய்
கட்டையான கலப்பு இனக் குட்டிகளோடு

அனுப்பிவைத்துக் கொண்டதுவாம், ஆனால் அவையோ,

தினம் தினம் ஊர் தோறும் ஊர்வலம் சென்றன - மக்கள்
மனம் நோகும் காரியங்கள் பலவும்தான் செய்தன - அந்த

குரங்குகளே செய்யாப் பெரும் சேட்டை
மான் வேட்டையை
அரங்கேறற்றத் தொடங்கிடவே - அவை

அடிவாங்கும் அத்தியாயம் ஆரம்பமானது - அதனாலும்
மறுபடியும் இடப் பெயர்வு உருவானது...

(தொடரும்)

# கனடா "வசந்தம்" தமிழ் உளவளத் துணை நிலையம் வழங்கும் "மூளை வளம்படுத்தல்" என்னும் தலைப்பிலான மெய்நிகர் வழியான கருத்தரங்கம்

கனடாவில் இயங்கிவரும் "வசந்தம்" தமிழ் உளவளத் துணை நிலையம் வழங்கும் "மூளை வளம்படுத்தல்" என்னும் தலைப்பிலான மெய்நிகர் வழியான கருத்தரங்கம் எதிர்வரும் 20ம் திகதி திங்கட்கிழமையன்று கனடா நேரம் இரவு 7.00 மணி தொடக்கம் 9.00 மணி வரை நடைபெறவுள்ளது. பிரித்தானிய நேரம், மதியம் 12.00 மணி. இலங்கை நேரம், அதிகாலை 5.30 மணி.

ஏனைய விபரங்களுக்கு கீழே உள்ள அறிவிப்பு பிரசுரத்தைப் பார்க்கவும்.




## இருபத்தாறாம் ஆண்டில் வெற்றிகரமாக கால் பதிக்கும் கனடா உதயனின் 'இலங்கைச் சிறப்பிதழ்'

நூற்றுக்கு மேற்பட்ட பக்கங்களில் பெருமளவு தாயகப் படைப்பாளிகளின் எழுத்துக்களை தாங்கி 2022, ஏப்ரல் மாதம் 8ம் திகதி வெள்ளிக்கிழமை கனடாவில் வெளியாகின்றது.

கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், நர்காணல்கள், விமர்சனங்கள் ஆகிய படைப்புக்கள் 2022 மார்ச் மாதம் 14ம் திகதிக்கு முன்னர் எதிர்பார்க்கப்படுகின்றன.

படைப்புக்களை தபால் மூலமாகவோ
அன்றி மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பலாம்.

சிறிய படைப்புக்களை (416) 732-1608 என்னும்
WhatsApp இலக்கத்திற்கும் அனுப்பலாம்.

இலங்கைச் சிறப்பிதழில் பிரசுரமாகும் படைப்புக்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெறும் சிலவற்றுக்கு சன்மானமும் சிறப்பிதழின் பிரதியொன்றும் அனுப்பிவைக்கப்பெறும்

தபால் முகவரி: Managing Editor
Uthayan Publishers
4062 Ellesmere Road
Scarborough, Ontario
CANADA. M1C 1J2

மின்னஞ்சல் முகவரி: uthayannews@yahoo.com

# இவ்வார ராசிபலன்

## 17-12-2021 வெள்ளி தொடக்கம் 23-12-2021 வியாழன் வரையும்




**மேஷம்:** சோம்பல் அதிகரிக்கும் வாரம். நண்பர்கள் சந்திப்பு நன்மை பயக்கும். கருத்து வேறுபாடுகள் விலகும். சகோதர வழியில் சகாயம் கிடைக்கும். விரயம் குறையும். வியாபாரம் சிறக்கும். மனைவி பிள்ளைகளிடம் மதிப்பு உயரும். திடீர் பயணம் ஏற்படும். தொழில் வளர்ச்சி கூடும். ஆடம்பர செலவுகள் அதிகரிக்கும். பயணத்தில் கவனம் தேவை. வயிறு உபாதைகள் வந்து போகும். களவு போன பொருள் திரும்ப கிடைக்கும். வார்த்தைகளில் நிதானம் தேவை. ஆடை, அணிகலன் சேரும். சகோதர உதவி கிட்டும். பேச்சுத்திறமை அதிகரிக்கும். ஏற்றுமதி தொழில் கவனம் தேவை. பொறியியல் துறை லாபம் தரும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். திருமண வாய்ப்பு கூடி வரும். மன அமைதி சீராகும். உடல்நலம் திருப்தி தரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். வெளியூர் பயணம் உண்டு. நீண்ட நாளைய கனவு நிறைவேறும். புதிய நட்பு உருவாகும். மற்றவர் உதவி கிட்டும். மனக்குழப்பம் நீங்கும். திடீர் லாபம் உண்டு. ஞாபக மறதி ஏற்படும். உறவினர் வழியில் செலவுகள் அதிகமாகும். புதிய எண்ணங்கள் உருவாகும். கலைத்துறையில் திருப்பம் ஏற்படும். கடன் சுமை குறையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: துர்க்கா தேவி, அதிர்ஷ்ட எண்: 3,5,7,9
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,N




**ரிஷபம்:** பழைய கடன் வசூலாகும் வாரம். கலை ஆர்வம் பெருகும். உறவினர் ஒற்றுமை பலப்படும். செல்வாக்கு உயரும். கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். முன்கோபம் தவிர்க்கவும். பயணம் பலன் தரும். புதிய முயற்சியில் கவனம் தேவை. மாணவர்களுக்கு படிப்பில் உற்சாகம் கூடும். வர்த்தக தொழில் லாபம் தரும். பதவி உயர்வு தடைப்படும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். வியாபாரத்தில் கவனம் தேவை. பொருளாதார சிக்கல் நீடிக்கும். பால்ய நண்பர்களை சந்திக்க நேரிடும். வழக்கு முடிவுக்கு வரும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். புதிய சொத்து சேரும். மாற்று இன உதவி கிட்டும். பெண்களுக்கு கவனம் தேவை. மனக்குழப்பம் நீங்கும். எதிரிகள் பலம் குறையும். நல்லவர் நட்பு கிட்டும். உடல்நலத்தில் கவனம் தேவை. பணத்தட்டுப்பாடு ஏற்படும். கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். அரசு வாய்ப்பு தடைப்படும். செயல்திறமை பளிச்சிடும். உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவார்கள். ஒரு சிலருக்கு கௌரவப் பதவிகள் தேடி வரும். நினைத்ததை சாதித்துக் காட்டுவீர்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ காளிகாம்பாள், அதிர்ஷ்ட எண்: 4,3,5,9
அதிர்ஷ்ட நிறம்: இளம் சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,J




**மிதுனம்:** புகழும், பொருளும் சேரும் வாரம். தடைகள் விலகும். வெளியூர் பயணம் உண்டு. தந்தை உடல்நலத்தில் அக்கறை தேவை. பணவரவு சுமாராக இருக்கும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். சொந்த பந்தங்களால் உதவி உண்டு. சேமிப்பு வளரும். மாணவர்களுக்கு சாதகமான காலம். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். ஞாபகத்திறமை அதிகரிக்கும். தனலாபம் கூடும். சுபக்காரியம் கைக்கூடி வரும். நீண்ட நாளைய நோய் விலகும். இல்லத்தில் அமைதி கூடும். சுமூகமான சூழ்நிலை பெருகும். தேக பலம் கூடும். வறுமையின் வாட்டம் குறையும். எதிர்ப்புக்கள் உருவாகி மறையும். மனதில் இனம் புரியா சந்தோ'ம் ஏற்படும். பெண்களால் பெருமை சேரும். அவமானங்கள் அகலும். புத்திரவகையில் சந்தோஷம் கூடும். நல்ல செய்திகள் நாடி வரும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். மனமகிழ்ச்சி கூடும். வளமான சிந்தனை உதயமாகும். அலைச்சல் ஆதாயம் தரும். புதிய முயற்சியில் கவனம் தேவை. உணவுத்தொழில் உயர்வு பெறும். செயல் விவேகம் கூடும். முற்போக்கு சிந்தனை ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பார்த்தசாரதி பெருமாள், அதிர்ஷ்ட எண்: 9,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,D




**கடகம்:** இனிய தகவல் வந்து சேரும் வாரம். ஆக்கம் அதிகரிக்கும். தெளிவான முடிவுகள் உதயமாகும். காரியம் கைகூடும். செல்வச்செழிப்பு உயரும். விவேகம் கைக்கொடுக்கும். வெற்றி வீடு தேடி வரும். பிரபல்யங்களை சந்திக்க நேரிடும். மின்சாரத்தில் கவனம் தேவை. குதூகலமான எண்ணம் உருவாகும். குடும்ப கௌரவம் உயரும். வரவு திருப்தி தரும். பெண்களுக்கு பெருமை சேரும். வசந்தம் வாயில் தேடி வரும். மனைவியால் மரியாதை உயரும். முன்னேற்றமான தருணம் அமையும். கால்நடைகளால் லாபம் உண்டு. கவலைகள் விலகும். கண் நோய் வந்து போகும். கடன் வாங்க நேரிடும். கலைத்தொழில் திருப்தி தரும். பதவி உயர்வு கிட்டும். ஆடம்பர எண்ணம் அலைமோதும். அணிகலன் சேர்க்கை உண்டு. முயற்சிகள் வெற்றி தரும். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். பிரியமானவர்களால் செலவு அதிகரிக்கும். திறமைகள் வெளிப்படும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். மன நிம்மதி அதிகரிக்கும். பங்குச்சந்தையில் கவனம் தேவை. குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. அயல்நாட்டுப் பயணம் உண்டு. உறவுகளால் செலவு அதிகரிக்கக்கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: எட்டுக்கை அம்மன், அதிர்ஷ்ட எண்: 9,7,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,T




**சிம்மம்:** பிரார்த்தனைகள் பலன் கொடுக்கும் வாரம். செயல்பாட்டில் தீவிரம் கூடும். பணவரவு திருப்தி தரும். உடன்பிறப்புக்களால் உதவி கிட்டும். மதிப்பும், மரியாதையும் உயரும். பெரியோர்களின் வாழ்த்துக் கிட்டும். குடும்பத்தினரிடம் அனுசரிப்பு கிட்டும். இடமாற்றம் நன்மை தரும். புதுமையை விரும்புவீர்கள். அரசு துறையில் ஆதாயம் கிட்டும். வாழ்த்துச் செய்தி உண்டு. மறைமுக எதிர்ப்புக்கள் வலுக்கும். உறவினர் வருகையுண்டு. அலைச்சல் அதிகரிக்கும். வாகன மாற்றம் உண்டு. செல்வாக்கு மேம்படும். பங்குச்சந்தையில் பணம் புரளும். விளையாட்டுத் துறையில் வெகுமதி கூடும். காதலர்கள் தம்பதியாவார்கள். மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். தர்ம சிந்தனை மேலோங்கும். சகோதர வகையில் கவனம் தேவை. நண்பர்களால் பாராட்டு கிடைக்கும். மங்களச்செய்தி வரும். உழைப்பில் கவனம் தேவை. வீண் செலவுகள் அதிகரிக்கும். நாவடக்கம் தேவை. பழைய பகை தீரும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். பித்ருக்கள் சாபம் நீங்கும். சேமிப்பு அதிகரிக்கும். கூட்டுத்தொழில் லாபம் தரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். இடமாற்றம் ஏற்படும். ஆபரணச் சேர்க்கையுண்டு. முயற்சி பலன் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மஹா கணபதி, அதிர்ஷ்ட எண்: 5,3,2,1
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,M




**கன்னி:** ஏற்றுமதி தொழிலில் லாபம் தரும் வாரம். மனக்கசப்பு நீங்கும். நல்லோர்களின் பாராட்டுக் கிட்டும். பெண்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். நினைத்த காரியம் நிறைவேறும். பயணங்களால் பணம் கரையும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். பங்குச் சந்தையில் லாபம் கூடும். திடீர் பயணம் உற்சாகம் தரும். பழைய பாக்கி வசூலாகும். தொழில் அபிவிருத்தி அடையும். புதிய வாய்ப்புக்கள் கிடைக்கும். பிள்ளைகளால் மனக்கசப்பு வந்து நீங்கும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். லஷ்மி கடாட்ஷம் பெருகும். சிரமப்பட்ட காரியம் நடைபெறும். தொழிலில் முதலீடு செய்வதை தவிர்க்கவும். பதவி உயர்வு கிட்டும். மனக்கசப்பு நீங்கும். அரசு வழியில் ஆதாயம் கிட்டும். கணவன், மனைவி உறவு மேம்படும். சுபகாரியம் இல்லத்தில் இனிதே நடந்தேறும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிட்டும். பணநடமாட்டம் உண்டு. இயற்கை காட்சிகளைக் கண்டு இன்புறுவீர்கள். உல்லாசப் பயணம் இனிக்கும். துன்பங்கள் அகலும். புதிய முயற்சி பலன் தரும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். இல்லத்தில் மனமகிழ்ச்சி கிட்டும்.




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
**Dr. K. RAM.Ph.D (USA)**
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377


வழிபட வேண்டிய தெய்வம்: தர்ம சாஸ்தா, அதிர்ஷ்ட எண்: 4,7,2,1
அதிர்ஷ்ட நிறம்: பொன் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,F




**துலாம்:** துன்பம் அகலும் வாரம். நற்காரியங்களில் கீர்த்தி பெறுவீர்கள். பண நடமாட்டம் கூடும். செய்தொழில் சிறப்படையும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி கிட்டும். ஒரு சிலருக்குக் கவுரவப் பதவி தேடி வரும். உத்தியோகத்தில் ஏற்றம் பெறுவீர்கள். புதிய வாகனம் வாங்குவீர்கள். பங்குச்சந்தை லாபம் தரும். கணவன் மனைவி உறவு இனிக்கும். நீண்ட தூரப்பயணம் லாபம் தரும். நிம்மதி பெருகும். இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிட்டும். உடல்நலம் சிறக்கும். மனதில் தெம்பும், தைரியமும் கூடும். புதிய தொழில் முயற்சியை தள்ளிப் போடவும். கொடுக்கல், வாங்கலில் சுமூக நிலை ஏற்படும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை அதிகரிக்கும். உத்தியோக பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். பழைய சம்பள பாக்கிகள் வந்து சேரும். பொருளாதாரம் உயரும். பேச்சில் கனிவு தேவை. ஆனந்தம் குடிக்கொள்ளும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். ஆலோசனை பூர்த்தியாகும். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். வங்கி சேமிப்பு உயரும். மாற்று இன நட்பு பெருகும். களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 4,9,8,1
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,D




**விருச்சிகம்:** தேவைகள் பூர்த்தியாகும் வாரம். எதிரிகளின் தொல்லை குறையும். தனவரவு அதிகரிக்கும். பணியில் கண்டிப்பு அவசியம். வாக்குவாதங்கள் ஏற்படும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். ஆன்மீகச் சிந்தனை உதயமாகும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். புதிய வேலை வாய்ப்பு கிட்டும். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். நட்டம் இல்லாத நன்மை அதிகரிக்கும். நண்கர்களால் நன்மை உண்டு. உறவினர்களால் வருகை உண்டு. அத்தியாவசிய செலவு அதிகமாகும். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். நெருப்பினால் அபாயம் உண்டு. ஆபரணப் பொருள் களவுப்போகும். பயணத்தில் வெகுமதி கூடும். தன்னம்பிக்கை துளிர்விடும். முடிவுகளில் தெளிவு இருக்கும். திறமைகள் வெளிப்படும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். சுபச்செய்தி வரும். சுயத்தொழில் வாய்ப்பு அமையும். மெத்தனப்போக்கு மாறும். மேன்மைகள் தொடரும். புதிய நட்பு உருவாகும். உடல்சோர்வு ஏற்படும். பக்கத்து வீட்டு பகை மாறும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். காரியத்தடை ஏற்படும். பேச்சில் பணிவு அவசியம்.

வழிபட வேண்டிய தெய்வம்: அஷ்டலட்சுமி, அதிர்ஷ்ட எண்: 2,1,4,9
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,K




**தனுசு:** வெளியூர் பயணம் லாபம் தரும் வாரம். குடும்ப பாசம் அதிகரிக்கும். செல்வாக்கு உயரும். ஆடை, அணிகலன்கள் சேரும். சோதனையான எண்ணம் உருவாகும். கடன்தொல்லை நீங்கும். மன சந்தோஷம் அதிகரிக்கும். நண்பர்களால் அலைச்சல் உண்டு. எண்ணிய காரியம் கைகூடும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். கமிஷன் தொழில் திருப்தி தரும். விவேகம் வெளிப்படும். வீண்செலவு ஏற்படும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். குதூகலமான எண்ணம் உதயமாகும். சிந்தனைகள் மேலோங்கும். விபரீத போக்கு மாறும். பேச்சில் நிதானம் தேவை. உதவும் குணம் அதிகரிக்கும். வணிகத்தொழில் வளம் கூடும். வனத்தொழில் உயர்வு தரும். குளிர்பான தொழில் கவனம் தேவை. பழைய பாக்கி வசூலாகும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். எதிரிகள் பலம் குறையும். கலைத்துறை முன்னேற்றம் கொடுக்கும். பயணம் அனுகூலம் தரும். சொத்துச் சேர்க்கையுண்டு. குடும்ப ஒற்றுமை மேலோங்கும். மாணவர்கள் உற்சாகம் கூடும். புதிய முயற்சிகள் கவனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: மீனாட்சி அம்மன், அதிர்ஷ்ட எண்: 4,9,2,6
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,E




**மகரம்:** அனுகூலமான வாரம். தனவரவு உண்டு. பொறுப்புக்கள் சிறப்பு சேர்க்கும். உறவினர் ஒற்றுமை பலப்படும். மறைமுக எதிர்ப்பு விலகும். ஆபரணச் சேர்க்கையுண்டு. குடும்ப கௌரவம் உயரும். சச்சரவுகள் அகலும். உத்தியோக உயர்வு உண்டு. இடமாற்றம் நன்மை தரும். வரவுகள் திருப்தி தரும். தொழில் விருத்தி உண்டு. வாகன மாற்றம் உண்டு. கமி'ன் தொழில் திருப்தி தரும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். வறுமைகள் ஒழியும். தனலாபம் கூடும். சந்தோ'ம் அதிகரிக்கும். புதிய எண்ணங்கள் உருவாகும். கவலைகள் ஒழியும். கடன் பிரச்சனைகள் அகலும். சுபச்செலவுகள் அதிகரிக்கும். நண்பர்களால் வரவு உண்டு. விவசாயம் பலன் தரும். புதிய நட்பு ஏற்படும். அந்தஸ்து உயரும். உடல்நலம் சீராகும். விளையாட்டுத்துறையில் வெற்றி கிட்டும். சான்றோர்களின் சந்திப்புக் கிட்டும். கலைத்தொழில் நிலை உயரும். பேச்சில் இனிமைக் கூடும். திறமையால் பெருமை சேரும். வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். வாகனச் செலவு ஏற்படும். எதிரிகளால் தொல்லை உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: காமாட்சி அம்மன், அதிர்ஷ்ட எண்: 6,9,1,8
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,M




**கும்பம்:** திட்டம் வெற்றி பெறும் வாரம். நீண்ட நாள் ஆசை நிறைவேறும். மனோ தைரியம் அதிகரிக்கும். ஆபரணச் சேர்க்கை ஏற்படும். பிள்ளைவழிச் செலவுகள் அதிகரிக்கும். உடல்நலம் கவனம் தேவை. உத்தியோக ஈடுபாடு அதிகரிக்கும். உறவினர் வழியில் செலவுகள் அதிகரிக்கும். ஞாபகத்திறன் கூடும். பேச்சில் நிதானம் தேவை. திருமண வாய்ப்புக் கூடி வரும். திடீர் லாபம் உண்டு. மனக்குழப்பம் நீங்கும். மற்றவர் உதவி கிட்டும். புதிய நட்பு உருவாகும். நீண்டநாள் கனவு நிறைவேறும். வெளியூர் பயணம் உண்டு. கவனமுடன் செயல்பட வேண்டும். பொருளாதாரம் உயரும். பொன், பொருள் சேரும். மருத்துவச் செலவு உண்டு. கமிஷன் தொழில் லாபம் தரும். மங்களச் செய்திகள் வரும். முயற்சிகள் பலன் தரும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். புத்திரர்களால் மேன்மை உண்டு. குதூகலம் சேரும். பழையக்கடன் தீரும். கல்வியில் ஆர்வம் கூடும். பங்குத்தொழிலில் லாபம் தரும். பாதகம் விலகும். சாதகமான சூழ்நிலைகள் அமையும். பூமியால் லாபம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ சக்கரத்தாழ்வார், அதிர்ஷ்ட எண்: 4,6,2,3
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,M




**மீனம்:** பெண்களுக்கு யோகமான வாரம். ஸ்திர சொத்துக்கள் சேரும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். முயற்சிகள் பலன் தரும். உங்கள் தனித்தன்மை வெளிப்படும். சுயநலம் கூடும். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். கணவன், மனைவி ஒற்றுமை கூடும். பயணம் அனுகூலம் உண்டு. பங்குச்சந்தை லாபம் தரும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. விவாக முயற்சி வெற்றி தரும். சுபகாரியம் கைகூடும். உதவிகள் கிடைக்கும். வேலை பளு அதிகரிக்கும். பொறுப்புக்கள் கூடும். சிறப்புக்கள் சேர்க்கும். வியாபாரத்தில் விருத்தி ஏற்படும். அரசு வகையில் ஆதாயம் உண்டு. நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். குடும்ப ஒற்றுமை அதிகமாகும். நல்லோர்களின் நட்பு கிடைக்கும். நிதி நிலைமை சீராகும். பணி செய்யும் இடத்தில் பாராட்டு கிடைக்கும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். சுறுசுறுப்பு அதிகரிக்கும். புதிய முயற்சி பலிதமாகும். ஊதிய உயர்வு கிட்டும். வரவுகள் மிகுதியாகும். உடல்நலம் சீராகும். மருத்துவம் பலன் தரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிட்டும். அனுகூலச் செய்திகள் வந்து சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: காளி துர்க்கா, அதிர்ஷ்ட எண்: 5,4,1,3
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,L

30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்

ஸ்காபுறோ

# சங்கர் அன் கோ

இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்

தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.

Summer Special : கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள், மரக்கறி விதைகள் இன்னும் பல...

உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்

மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள், மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.

இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers, Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti, Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம். மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.

Tasty Tamila தயாரிப்புகள் இப்போது சங்கர் அன் கோவில் கிடைக்கும்.

பனங்கருப்பட்டி

தேன் நெல்லி

காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்

## SHANKAR & CO

2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8

Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)
















உதயம் 1341 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday December 17, 2021

# ஒன்றாரியோவில் கோவிட் – 19 பூஸ்டர் தடுப்பூசி வழங்கும் திட்டத்தை உடனடியாக கையில் எடுத்துள்ள முதல்வர் டக் போர்ட்

ஒன்றாரியோ மாகாணத்தில் உடனடியாக கோவிட்-19 பூஸ்டர் தடுப்பூசி வழங்கும் திட்டத்தை உடனடியாக எமது கைகளில் எடுத்து செயற்பட வேண்டும் என்ற அறிவிப்பை கடந்த புதன்கிழமையன்று மாகாணத்தின் முதல்வர் டக் போர்ட் அவர்கள் விடுத்துள்ளார்.
இந்த அறிவிப்பின் படி. ஏதிர்வரும் 20ம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட அனைவருக்கும் பூஸ்டர் எனப்படும் மூன்றாவது தடுப்பூசியைப் பெற அனுமதிக்கிறது என்று மாகாண முதல்வரும் சுகாதார அமைச்சரும் கூட்டாக அறிவித்தனர்.

புதன்கிழமை பத்திரியாளர்களுக்கு விளக்கமளித்த மாகாண முதல்வர் பின்வருமாறு தெரிவித்தார்
"ஏற்கெனவே எமது மக்களுக்கு செலுத்தப்பட்ட முதலிரண்டு தடுப்பூசிகள் சரியான முறையில் செயற்படக் கூடியன. எனினும் பூஸ்டர்கள் திடீரென ஏற்படும் மோசமான விளைவுகளைத் தடுப்பதற்கான சிறந்த வழியாகும். எனினும் வேகமாக அதிகரிக்கும் ஓமிக்ரான் என்னும் மாறுபாடு கொண்ட வைரஸை மழுங்கடிக்க புதிய நடவடிக்கைகளையும் முதல்வர் அறிவித்தார்.

மேலும் இது எமது சுகாதாரப் பிரிவு கடைப்பிடித்த நடைமுறையான 168 நாட்கள் காத்திருப்பது என்பதை நீக்கி தற்போது. இரண்டாவது தடுப்பூசியைச் செலுத்தி 84 நாடகளுக்கு பின்னர் மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசியை செலுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது என்றும் மாகாண முதல்வர் தெரிவித்தார்.



# 'கனடா போன்ற ஒரு நாட்டில் இவ்வாறான சம்பவம் ஒன்று நடந்திருக்கக் கூடாது'

## கியுபெக்கில் மத அடையாள அங்கியை அணிந்த ஆசிரியை வகுப்பறையிலிருந்து வெளியேற்றப்பட்டதை கண்டித்துள்ள அமைச்சர் ஹசன்





இஸ்லாமியர்களில் பெண்கள் தங்கள் மத அடையாளமாக அணியும் வழக்கத்தை கொண்ட ஹிஜாப் என்னும் அங்கியை அணிந்ததற்காக கடந்த வாரம் தனது வகுப்பறையில் இருந்து நீக்கப்பட்ட கனடாவின் கியூபெக் மாகாண ஆசிரியை ப்பதேமே அன்வாரி என்பவரின் கதையை முதன்முதலில் செவிமடுத்த போது கனடாவின் மத்திய அமைச்சரும் இஸ்லாமியருமான அகமட் ஹசன் அவர்களுக்கு மிகவும் அதிர்ச்சியாக இருந்ததாகவும் அவர் உடனே கனடா போன்ற ஒரு நாட்டில் இவ்வாறான சம்பவம் ஒன்று நடந்திருக்கக் கூடாது என்று அமைச்சர் தெரிவித்ததாகவும் ஒட்டாவாவிலிருந்து அவரது அமைச்சின் அதிகாரி ஒருவர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது .
*(உள்ளே தொடர்ச்சி 3ம் பக்கத்தில்)*

# ஜனாதிபதி கோட்டாபாயவின் கட்டளைகளின்படி மனிதஉரிமை மீறல்கள் செய்த படை அதிகாரிகளுக்கு அமெரிக்க விசா மறுக்கப்பட்டதை வரவேற்கும் புலம் பெயர் அமைப்புக்கள்



இலங்கை ஜனாதிபதி கோட்டாபாயவின் கட்டளைகளின்படி போர்க் குற்றங்களிலும் மனித உரிமை மீறல்களிலும் ஈடுபட்ட படை அதிகாரிகளுக்கு அமெரிக்க விசா மறுக்கப்பட்டதை உலகத் தமிழ் மக்களோடு சேர்ந்த வரவேற்கும் புலம் பெயர் அமைப்புக்கள் பல. இந்த விசா மறுப்பு முறையை உலகின் ஏனைய நாடுகளும் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

மனிதகுலத்திற்கு எதிரான மிகமோசமான மீறல்களில் ஈடுபட்டதாக நம்பத்தகுந்த ஆதாரங்களின் அடிப்படையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச மற்றும் அவரது கட்டளையின்கீழ் செயற்பட்டவர்களுக்கு எதிராகப் பயணத்தடை விதிப்பதுடன் அவர்களது சொத்துக்களை முடக்குவது தொடர்பில் அமெரிக்காவைப்போன்று ஏனைய ஜனநாயக நாடுகளும் விசேட அவதானம் செலுத்தவேண்டும் என்று 9 புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் கூட்டாக வலியுறுத்தியுள்ளன. *(உள்ளே தொடர்ச்சி 3ம் பக்கத்தில்)*

# 59 மணி நேரத்தில் 195மேப்பிள் இலைகளில் 1330 குறள்களையும் எழுதிச் சாதனை புரிந்த கனடிய தமிழ்ப் பெண்மணி புஸ்பா கிறிஸ்டி



உலகெங்கமிருந்து தன் நிலப்பரப்பில் கால் பதிக் கும் கற்றறிந்த அறிஞர்களையும் தொழில் வினைஞர்களையும். கடல் தாண்டி வரும் அகதிகளையும் வரவேற்று அவர்களை உபசரித்து இருப்பிடமும் உணவும் வழங்கி அவர்களை தனது தேசத்தின் நிரந்தரப் பிரஜைகளாகவும் உயர்ந்த நிலையில் அமர்த்துவதில் தன்னிகர் இல்லாத தனித்துவமான நாடு கனடா ஆகும்.
இந்த நாட்டில் மகிழ்ச்சியாக வாழ்ந்து வருபவர்களில் எத்தனை பேர் இந்த மண்ணை மதித்து வாழ்கின்றார்கள் என்பதை அறிந்து அவர்களைப் போற்ற வேண்டும். இவ்வாறு கனடாவில் வாழ்ந்து வரும் ஈழத்தமிழர்களில் கவிஞர் புஷ்பா கிறிஸ்டி அவர்கள் திருக்குறளை மதித்து ஒரு சாதனை செய்துள்ளார்.
*(உள்ளே விபரமான செய்தி 15ம் பக்கத்தில்)*

